Registered as a News Paper in Sri Lanka
පක්කම් 24 ரூபா 18.00
දිනමුරසු වාරමලර්
ஜூன் 02 - 08, 2005

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 616



## செல் நெறி காட்டும் புத்தரும் கொலை வெறி ஊட்டும் பித்தர்களும்

## உலகை வசீகரிக்கும் ரொபோ யுவதிகள்

## சமாதானமும் மக்களைக் கொல்லும்



## இந்து சமயத்தில் திருமணப் பொருத்தம்

ஒரு இல்லறம் நல்லறமாக திகழ வேண்டுமாயின் கணவன் மனைவி இருவரும் குணநலன்கள், பண்புகள் என்பவற்றில் ஒத்திசைத்து ஒருவருக்கொருவர் இணக்கமாக மனமொப்பி வாழ வேண்டும். இதுவே இந்து சமயம் கூறும் உண்மைத் தத்துவம்.

முற்காலத்தில் ஆண் பெண் இருவரையும் இல்லற வாழ்க்கையில் இணைப்பதற்க்கு மிக முக்கியமாக பத்து பொருத்தங்களைப் பார்த்தனர். முறையே:

1. குடிமை - பிறந்த குடும்பத்தின் நிலை.
2. பிறப்பு - பிறந்த குடிக்கு தகுந்தாற்போல் ஒழுகும் ஒழுக்கம்
3. ஆண்மை - எடுத்துக் கொண்ட செயலை நிறைவேற்றும் ஆற்றல்
4. ஆண்டு - பொருத்தமான வயது.
5. உருவம் - ஒருவர்க்கொருவர் பொருத்தமான உருவம்
6. நிறுத்தகாம வாயில் - நிலையான காதல்
7. நிறை - மன அடக்கம்
8. அருள் - அனைத்துயிர்களிடத்திலும் பரிவுணர்வு
9. உணர்வு - எதைப் பற்றியும் உணரும் அறிவு
10. திரு - செல்வ வளம் இப்படியான சிறப்பியல்புகள் பொருந்தவரின் குறிப்பிட்ட திருமணத்தை சம்பிரதாய முறைப்படி செய்து வைப்பார்.

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர் - 06.

## ஆன்மீகம்



## நான் உம்முடையவன்

நான் உம்முடையவன் என்னை இரட்சியுங்கள்; சங்கீதம் 119:93 பாருங்கள் எவ்வளவு நிச்சயமாக சங்கீதக்காரன் கூறுகிறான் நான் உம்முடையவன் எம்மில் எத்தனை பேருக்கு இந்த வார்த்தையை விசுவாசிக்க முடிகிறது. எனக்கு எது நடந்தாலும் என்னை உண்டாக்கின தேவன் இரட்சிக்க வல்லவர். ஏனென்றால் நான் அவருடையவன் என்னும் நிச்சயம் எமக்குள் உண்டாவதாக.

லூக்கா 15ஆம் அதிகாரத்தில் கெட்ட குமாரனைக் குறித்து வாசிக்கின்றோம். அவன் தகப்பனை விட்டுப் பிரிந்து சென்று எல்லாப் பாவங்களிலும் ஈடுபட்டு சகலவற்றையும் இழந்திருந்த போதிலும் அவனுக்குள் ஒரு நிச்சயம் இருந்தது. "என் தகப்பன் இருக்கிறார். அவர் என்னை மன்னிப்பார், என்னை ஏற்றுக்கொள்ளுவார். ஏனென்றால் நான் அவருடைய மகன்" என்கிறதால் நிச்சயம் அவனுக்குள் இருந்தது. உடனே எழும்பிச் சென்றான். தேவனுக்குப் பிரியமானவர்களே நாம் இயேசு கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே கழுவப்பட்டு தேவனுடைய பிள்ளைகளாயிருக்கின்றோம். தேவராஜ்யத்துக்குரிய எல்லா உரிமைகளும் நமக்கு உண்டு. முழு அகிலத்தையும் ஒரு வார்த்தையினால் உண்டாக்கினவர். எம்மைக் காப்பாற்ற வல்லவராயிருக்கிறார். செங்கடலை இரண்டாகப் பிரித்து இஸ்ரேவேல் ஜனங்களுக்கு வழி உண்டாக்கினவர், எமக்கு வழி காட்டாதிருப்பாரோ? நிச்சயம் வழிநடத்துவார், நிச்சயமாகக் காத்துக் கொள்வார், நிச்சமாக குறைகளையெல்லாம் நிறைவாக்குவார். தகப்பனே நான் உம்முடையவன். என்னை உம்முடைய பலத்த கரத்துக்குள் வைத்துக்கொள்ளும் என்று சொல்வோமாக. ஆமேன்.

போல்ஜோன், தெல்தெனிய.

## இஸ்லாமியப் பொருளியல்

மனித வாழ்வின் அடிப்படையான அம்சம் ஹலாலான முறையில் தேடிய உணவையே உண்ண வேண்டும் என்பதுதான் - பொய், சூது, இலஞ்சம், மோசடி, வட்டி, ஏமாற்று ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றின் மூலம் ஒருவர் பொருள் தேடினால் அது ஹறாமான பொருளாகும்.

அல்லாஹ் எமக்கு வகுத்திருக்கும் இலக்கணத்திற்கும், அவன் ஏற்படுத்தி இருக்கும் விதிமுறைகளுக்கும், அவன் காட்டியிருக்கும் வரம்புகளுக்கும் புறம்பாகச் சென்று பொருள் தேடுவதெல்லாம் அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்படாத சம்பாத்தியமாகும்.


உங்களுக்கிடையே ஒருவர் மற்றொருவரின் பொருள்களைத் தவறான முறையில் உண்ணாதீர்கள். மற்ற மனிதர்களின் பொருள்களில் எதனையும் பாபகரமான வழியில் உண்ணுவதற்காக நீங்கள் உங்கள் தரப்பில் நியாயமில்லையென அறிந்திருந்தும் இலஞ்சம் கொடுக்க அதிகாரிகளிடம் செல்லாதீர்கள்.

அல்குர்ஆன் 2:188

இவ்வாறு இறை மறை எத்துணை தூர நோக்குடனும், தூய நோக்குடனும், நமக்கு நல்லுபதேசம் செய்கிறது. இதுவே இஸ்லாமியப் பொருளியல்.

-எம்.சி.கலீல், கல்முனை - 05.

## கவிதைப் போட்டி இல.613



பரிசுக்குரிய கவிதை

### நீ(ச)தியாளரே....!

எழுத்துச் சுதந்திரம்.....
இல்லாத.... நாட்டில்.....
ஏன்.....
நாங்கள்.....
இன்னும் உயிரோடு.....
வாழ வேண்டும்.....?
இப்பவே, தூக்கிலிடுங்கள்!

- கே. மகேஷ்,
ஆரையம்பதி - 01.

### தீர்ப்பு

ஐயோ......!
சமாதானத்திற்கு.......
தூக்குத்
தண்டனையா......?

- யோ. கோபிநாத்,
ஆரையம்பதி - 01.

### எதற்கு?

குற்றவாளியின்றியே
தீர்ப்புச் சொல்லும்
நீதி மன்றங்கள்.
மேன் முறையீட்டுக்கு
இடமளிக்காமலே
நிறைவேற்றப்படும்
மரண தண்டனைகள்.
இவையெல்லாமிங்கு
கிரமமாக நிகழும்போது
எதற்குச் சிறைச்சாலை?
எதற்குத் தூக்கு மேடை?

- அ. சந்தியாகோ,
கண்டி.

### தூக்கு

தூக்கிலிட வேண்டியவர்
உள்ளே இல்லை
உயிர் பறிப்பார் வீதியிலே
சுதந்திரமாய்....
உடனே கொண்டு
வாருங்கள் -
அந்தத் துரோகிகளை
உயிர் பிரியும்வரை
உயரத்தில் தூக்கிலிட.

- சீ.தங்கவடிவேல்,
மட்டக்களப்பு.

### துப்பாக்கிகளே....!

சட்டம், கோர்ட்டு, விசாரணை, தீர்ப்பு,
சிறை, தூக்கு இதற்கெல்லாம்
வேலையில்லாமல் போய்விட்டது.
இப்போது துப்பாக்கிகளே நீதிபதிகள்
விசாரணையின்றியே தண்டனைகள்.


- வ. சந்திரபிரசாத்,
மாமாங்கம்.

### சுற்றவாளியையும் இறுக்கும்....!

குற்றவாளி யார்....?
சுற்றவாளி யார்....? - என
தூக்குக் கயிறு அறியாது.
சட்டம் இறுக்கி மூடப்பட்டு
இருட்டறையாக மாறும்போது
சுற்றவாளியையும்
தூக்குக் கயிறு இறுக்கும்....!

- காமீம் செய்னுலாப்தீன்,
கிண்ணியா - 05.

## கவிதைப் போட்டி இல.616



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 08.06.2005.

கவிதைப் போட்டி இல.616
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### காலமே பதில் சொல்...

படுகொலை
செய்யப்படும்
ஊடகவியலாளர்களின்
கொலைகளுக்கு
உடந்தையானவர்களை
இனங்கண்டால்
பாகுபாடின்றி
கிடைப்பது
சிறையா?
தூக்குக் கயிறா?
காலமே பதில் சொல்....!

- கே. கமால்தீன்,
ஏறாவூர் - 03.

### புதுப்பிக்கப் படாதவை

சிறைகள்
தண்டனைகள்
சட்டங்கள் - இன்னும்
புதுப்பிக்கப்படவில்லை
குற்றங்கள் புதிதாகத்
தோன்றவே செய்கின்றன!

- எஸ்.பி.பாலமுருகன்.

### ?

இது
குற்றவாளிகளுக்கல்ல,
சுற்றவாளிகளுக்கு!

- இரா. இராமகிருஷ்ணன்,
பொகவந்தலாவை.

### கும்மியடி பெண்ணே!

சிதைவுற்ற சிறைக்கூடம்,
தூக்குக் கயிறு காட்சிப் பொருள்,
மரண தண்டனை,
தெரு ஓரத்திலே, நாற் சந்தியிலே.
கும்மியடி பெண்ணே.... கும்மியடி....
கொலை மலிந்த நாடென்று கும்மியடி.

- யூ. செல்லத்தம்பி,
கல்முனை - 03.

### தூக்கு மேடை!

தூக்கு மேடை சிலருக்கு
பஞ்சு மெத்தை;
அதுவே சிலருக்கு
ஆணி மெத்தை.
துணிந்தவனுக்கு தூக்கு
இன்பம்;
பயந்தவனுக்கு அதுவே
துன்பம்.

- சி. சிவதர்சன்,
சுன்னாகம்.

## உங்கள் பக்கம்

### பெருக்குவற்றான் அல்மின்ஹாஜ் மு.வி.யில் ஆசிரியர் பற்றாக்குறை...

புத்தளம் மதுரங்குளி கோட்டத்திற்குட்பட்ட அல்மின்ஹாஜ் முஸ்லிம் வித்தியாலயத்தில் தொடர்ந்து பல வருட காலமாக ஆசிரியர் பற்றாக்குறையாகவுள்ளது. இப்பாடசாலையானது முந்தல் பிரதேசத்தில் மிகவும் வறிய கிராமமான பெருக்குவற்றானில் அமைந்துள்ளது. ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாக அதிபர் ஏ.சீ. நஜுமுத்தீன் அவர்களிடம் கேட்ட போது, 435 மாணவர்களுக்கு 19 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றன. எனினும் இப்பாடசாலையில் 11 ஆசிரியர்களே கல்வி கற்றுக் கொடுக்கின்றனர்.

இக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு மேலும் 8 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். கணிதம், ஆங்கிலம், சிங்களம், ஆரம்பநெறி, சமூகக்கல்வி போன்ற பாடத்திற்கே ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவுள்ளனர். கடந்த 5 வருட காலமாக கணிதம், ஆங்கிலம், போன்ற பாட ஆசிரியர்கள் இல்லாது மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கினர் எனத் தெரிவித்தார்.

பொருளாதாரம், போக்குவரத்து போன்ற துறைகளில் மிகவும் கஷ்டமான நிலையிலுள்ள இப்பாடசாலை ஆசிரியர்களின் தியாக மனப்பாங்கினால் 5ஆம் தரம் புலமைப்பரிசில், க.பொ.த சாதாரண தரம் போன்றவற்றில் கடந்த பல வருடங்களாக அதி கூடிய மாணவர்கள் சித்தியடைந்து வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். பௌதீக வளங்களும். ஆசிரியர் பற்றாக்குறையும் காணப்படுகின்ற இப்பாடசாலைக்கு பௌதீக வளப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதோடு மற்றுமன்றி உடனடியாக ஆசிரியர் பற்றாக்குறையையும் நிவர்த்தி செய்து தருமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

றஸீன் தஸ்மின், றஹ்மத்புரம்.


மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -4-514282
தொலை நகல் (Fax):-4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk




## வாசக[ர்] சாலை

### தேனமுதூட்டும் தினமுரசுக்கு,

கோபுரமாக உயரும் உனது வளர்ச்சி யில் சிறு கல்லாக நான் இருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன் முரசே - தித்திப் பையும் காரசாரத்தையும் சரி விகிதத்தில் பகிர்ந்து எமக்குக்கூட்டும் உன் சேவை வையகம் போற்ற வாழ்க. காரசாரமான அரசியல் கட்டுரைகளாகட்டும் தித்திப்பூட்டும் சினிமாப்பகுதியாகட்டும், ஸ்போட்ஸ் பகுதியாகட்டும் எதையும் சிறப்பாகத் தருவதில் உனக்கு நிகர் யாருமில்லை. நள்ளிரவு மல்லிகை மேலும் உனக்கு மணம் சேர்க்கிறது. வியாழனே சீக்கிரம் வாராய், முரசை வாங்க.

அப்ஸரா - கிண்ணியா.

### சபாஷ் முரசே

கடல் கடந்து வாழும் தமிழரின் காயங்கள் ஆற்ற வந்த வண்ண முரசே நீ வாழ்க. முரசு இல. 613இல் நீ சுமந்து வந்த எக்ஸ்ரே ரிப்போட்டில் ஊடகவியலாளரின் இன்னல்களை விபரித்தாய். தமிழினம் எத்தனை சிறந்த ஆற்றல் உள்ள ஊடகவியலாளரை இழந்துள்ளது என்பதை அறியும் போது மலைப்பாக உள்ளது. மாற்றுக் கருத்துக்களை மன உறுதியுடன் வாரி வழங்கும் உன் வீரத்திற்கு சிரம் தாழ்த்துகிறேன். ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை. அது போல் உன்னை வீழ்த்த எவர் முயன்றாலும் அது நடக்கப்போவதில்லை. இலங்கையில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றிய உண்மையான தகவல்களை உன்னை வாசிப்பதன் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. உன் பணி மேலும் தொடர வாழ்த்துக்கள்.

லண்டன் - விஜிதன்.

வணக்கம்
வளர்ந்து வரும்
கவிஞர்களின்
கவிப்பசிக்கு பாலூட்டிக்
கொண்டிருக்கும்
கவிதைப் போட்டிக்கு
வாழ்த்துக்கள்.
படத்தைப் பார்த்துக்
கவிதை
எழுதுவதென்பது ஒரு
வித்தியாசமான முறை
தான் அதனை
இலங்கையில் அறிமுகம்
செய்த பெருமை
தினமுரசையே சாரும்.

சங்கம ஹிஷாம்,
திருகோணமலை.

### என்னிதய முரசே......

தொலைந்து போன
பொழுதுகளில் நிறைவினில்
இருண்டவானின் விடிவெள்ளியாய்
கீற்றுக்களின் இனிய உதயமாக
வியாழன் தோறும்
சிங்க நடை போடும் முரசே.....
நீ கொண்டு வரும் அனைத்து
அம்சங்களும் வரவேற்கத் தக்கது.
அதிலும், எக்ஸ்ரே Report ,
சிந்தியா பதில்,
அதிரடி அய்யாத்துரை,
சினிமா பகுதி,
இன்னொருவர் பார்வையில்,
அனைத்தும் சுப்பரோ சுப்பர்
உனது சேவை மேலும் மேலும்
உயர எனது பல கோடி
வாழ்த்துக்கள்.

புதிய நிலா. சரவணன்,
கொட்டகலை.

## சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம்

ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, பலவீனமான ஓர் அரசியல் கூட்டணியுடன் கடந்த வருடம் ஏப்ரலில் நடைபெற்ற தேர்தல் மூலம் பதவிக்கு வந்தது. இத்தேர்தல் வேலைகளின் போது ஈ.பி.டி.பி.யின் அங்கத்தவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர், ஐ.தே.க. வேட்பாளர் ஆகியோர் கொல்லப்பட்டதுடன் வன்முறை, பயமுறுத்தல், வாக்கு மோசடி ஆகியவற்றுக்கு மத்தியில் புலிகளின் ஆதரவிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு, கிழக்கில் மிக அதிகப்படியான ஆசனங்களைக் கைப்பற்றியது என்று சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## இலங்கை அரசின் மௌனம் மேலும் படுகொலைகளுக்கு வழிவகுக்கும்

### -ஆசிய மனித உரிமைகள் அமைப்புப் பணிப்பாளர்

தமிழ் மக்கள் மத்தியில் இடம்பெற்று வரும் அரசியல் ரீதியான படுகொலைகள் குறித்து அரசாங்கம் தீவிரமாக விசாரணை செய்து, சந்தேக நபர்களை இனங்கண்டு,அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்து, குற்றவாளிகளைத் தண்டிக்க முன்வர வேண்டுமென்று மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் பிராந்திய பணிப்பாளர் பிராட் அடம்ஸ் தெரிவித்தார். மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள் கொலை செய்யப்படுவது குறித்து விசாரணை நடத்தப் போவதாக இலங்கை அரசாங்கம் கூறியிருப்பது வரவேற்கத் தக்கது. ஒவ்வொரு படுகொலை குறித்தும் தீவிர விசாரணை நடத்தி குற்றவாளிகளைச் சட்டத்தின்முன் நிறுத்த வேண்டும். இதுகாலவரை அரசு எவ்வித பயன்மிக்க நடவடிக்கையையும் எடுக்கவில்லையென்றும் அவர் சொன்னார். தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளே நீடித்த, சிக்கலான சிவில் யுத்தத்துக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. அரசியல் நோக்குடன் தமிழ் மக்கள் மத்தியில் படுகொலைகள் புரியப்படுவது பெரும் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் மக்கள் மத்தியில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து அரசு நடவடிக்கை எடுக்கத் தவறுவது பல சந்தேகங்களை எழுப்புகிறது என்றும் அவர் சொன்னார். கடந்த வருடம் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவை தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மூலம் கொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சி குறித்து ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த அரசாங்கப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ், அதனைச் சர்வசாதாரணமான ஒரு விடயமாகக் கருதியே கருத்து வெளியிட்டார். "தனது அரசியல் எதிரியைப் புலிகள் இயக்கம் தேடித் தாக்குகிறது. இந்த முயற்சியும் அத்தகையதே; வேறொன்றுமில்லை" என்று வெறுமனே தட்டிக் கழித்தார். 2003ஆம் ஆண்டு ஜூன் மாதம் யாழ்ப்பாணத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப். முக்கியஸ்தர் சுபத்திரன் கொல்லப்பட்டபோது, பிரதான சந்தேகநபரை விசாரணைக் குட்படுத்தப் பொலிஸார் தயங்கினர். 2004ஆம் ஆண்டின் பிற்பகுதியிலேயே அரசாங்கம் அரசியல் படுகொலைகளைக் கண்டிக்கத் தொடங்கியது. ஆனாலும் திட்டவட்டமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இப்படுகொலைகளை அசட்டை செய்ய மறுப்பதே அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான ஒரே வழியாகும். எதிர்ப்புக் குரல்களை மழுங்கடிப்பதற்கான திட்டமிட்ட இயக்கத்தின் ஒரு பகுதியே இப்படுகொலைகள் குறித்து மௌனம் சாதிப்பது, மேலும் படுகொலைகள் இடம்பெறவும் பயமின்றிப் படுகொலைகள் இடம்பெறவுமே வழிவகுக்கும் என்றும் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

## சம்பந்தருக்குப் பதிலாக ஜோசப்

திருமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பாக ஹர்த்தால், கடையடைப்பு நடத்துமாறு விடுக்கப்பட்ட உத்தரவை தட்டிக் கழித்த திருமலை தேசியக் கூட்டமைப்பு எம்.பி. இரா. சம்பந்தன் விரைவில் மேற்படி கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் பதவியிலிருந்து நீக்கப்படலாமெனப் புலிகள் இயக்கத்துக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. பிரபா - கருணாப் பிளவு புலிகள் இயக்கத்துக்குள் ஏற்பட்டபோது ஈடாடாமல் பிரபா அணிப் புலிகளை ஆதரித்த மட். மாவட்ட தேசியப் பட்டியல் எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம் தலைவராக நியமிக்கப்படலாமெனத் தெரிவருகிறது.

## சிறுவர்கள் கடத்தல் தொடரவே செய்கிறது

புலிகள் சிறுவர், சிறுமிகளை வலுக்கட்டாயமாகக் கடத்திச்சென்று யுத்த நடவடிக்கைகளுக்காகத் தமது படையணிகளில் சேர்க்கும் சம்பவங்கள் குறைவடைந்துள்ளதாக 'யுனிசெப்'பின் (ஐ.நா.வின் சர்வதேச சிறுவர் நிதியம்) இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ரெட் சாய்பான் தெரிவித்தார். கடந்த காலங்களோடு ஒப்பிடுகையிலேயே இந்த வீழ்ச்சி காணப்பட்டுள்ளதாகவும், இதற்கு சர்வதேச அமைப்புகளின் அழுத்தம் காரணமென்றும் அவர் சொன்னார்.

## மூன்று முக்கிய விடயங்கள் குறித்து ஜனாதிபதி இந்தியத் தலைவர்களுடன் பேச்சு

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, இலங்கையிலும் இந்தியாவிலும் பொதுநலன்கள் சார்ந்த மூன்று முக்கிய விடயங்கள் குறித்து முக்கியமாகப் பேச்சுவார்த்தை நடத்துவாரென்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கடற்பேரழிவு நிவாரணம், மீள்கட்டுமானப் பணிகளைக் கையாள அமைக்கப்படவிருக்கும் வடக்கு, கிழக்குக்கான உத்தேச பொதுக்கட்டமைப்பு, சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம், இலங்கை - இந்தியப் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஆகியவையே இந்த மூன்று விடயங்களுமாகும். வடக்கு, கிழக்குக்கான உத்தேச பொதுக்கட்டமைப்பில் இலங்கை அரசாங்கத்தோடு புலிகளும் சமபங்குதாரர்களாக சேர்க்கப்படுவதால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் குறித்தும் குறிப்பாக இலங்கைக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கும் இதனால் ஏற்படக்கூடிய பாதுகாப்புகள் குறித்து பிரதமர் மன்மோகன்சிங், பாதுகாப்பமைச்சர் ப்ரநாப் முகர்ஜி, காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி ஆகியோருடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்துகிறார். புலிகள் இயக்கத்திடம் விமானப்படையணி இருப்பது குறித்து இரு நாடுகளும் கவலையும் அக்கறையும் கொண்டுள்ள நிலையில் சுனாமி பணத்தைப் புலிகள் ஆயுதக் கொள்வனவுக்குப் பினாமியாகப் பயன்படுத்தக் கூடிய ஆபத்து இருப்பதாகவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. எனவே ஜனநாயக விழுமியங்களுக்கேற்பப் பன்முகத் தன்மையுடன் பொதுக்கட்டமைப்பு அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் ஆராயப்படும். இதேவேளை கிடப்பில் போடப்பட்டிருக்கும் இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் பற்றியும் இருதரப்பும் பேசலாமென விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. இலங்கை - இந்தியக் கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிப்பது குறித்தும்



சந்திரிகா

ஆராயப்படுகிறது. 1860 ஆம் ஆண்டு இலங்கையும் இந்தியாவும் பிரிட்டிஷ் ஆளுகைக்கு உட்பட்டிருந்த காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் பற்றியும் பரிசீலிக்கப்படுகிறது.

இராமநாதபுரத்தில் இம் மாதம் இதற்கான அடிக்கல் நாட்டப்படவுள்ள நிலையில் இலங்கையில் சூழலியலாளர்களும் கப்பல் பயணத்துறை சம்பந்தப்பட்டோரும் எழுப்பும் அச்சங்கள் குறித்தும் ஜனாதிபதி உயர் மட்டத்தினரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். ஜனாதிபதியின் பொதுக்கட்டமைப்பு யோசனைக்கு ஆளும் தரப்பில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி.யின் 39 எம்.பிக்களில் எட்டு பேர் ஆதரவளிப்பதாலும் ஜாதிக ஹெல உருமய எம்.பிக்கள் மூவர் ஆதரவளிக்க முன்வந்திருப்பதாலும் ஐ.தே.க. பொதுக்கட்டமைப்பை எதிர்க்கப் போவதில்லையென அறிவித்திருப்பதாலும் பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் அரசை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்குமெனத் தெரிவித்திருப்பதாலும் ஜனாதிபதி நாடு திரும்பியவுடன் சில மாற்றங்களுடன் பொதுக்கட்டமைப்பு பற்றி அறிவிப்பாரெனத் எதிர்பார்க்கப்படுகிறது.

## கொடிவாரம்

வட கொழும்பு இந்து இளைஞர் சங்கத்தின் முதலாவது கொடி வாரத்தை இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, கடந்த 23ஆம் திகதி பௌர்ணமி தினத்தன்று தனது வாசஸ்தலத்தில் சம்பிரதாயப் பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். கொழும்பு முகத்துவாரத்தை தளமாகக் கொண்டு செயற்படும் இந்து இளைஞர் சங்கம், சமய, சமூக மற்றும் கல்வி நடவடிக்கைகளில் கடந்த 18 வருடங்களாகப் பணி செய்து வருகிறது. வைவைத்தில் இந்து விவ காரங்களுக்கான ஆலோசகர் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு.சிவதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தூக்குத் தண்டனையைத் தூக்கிய தீர்ப்பு

பண்டாரவளை, பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் 27 தமிழ் இளைஞர்களின் படுகொலைகளுக்குக் காரணமாக விருந்தாரென்று குற்றச்சாட்டின்பேரில் கொழும்பு மேல் நீதிமன்றினால் குற்றவாளிகளாகக் காணப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட நால்வரும், உயர் நீதிமன்றத்தினால் கடந்த 27ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்த சகல குற்றச்சாட்டுகளிலிருந்தும் இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கப் போதிய சாட்சியங்கள் இல்லையென்பதே நீதிபதிகளின் தீர்ப்புக்கான ஆதாரமாகும். ஆயுத கலாசாரப் பிடியிலிருந்து விடுபட்டுப் புனர்வாழ்வு பெறுவதற்காகப் பிந்துனுவெவ முகாமில் தங்கியிருந்த தமிழ் இளைஞர்கள் மீது 2000ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22ஆம் திகதி நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலில் 27 இளைஞர்கள் கொல்லப்பட்டனர். 14 பேர் காயமடைந்தனரென்பதும் குறிப்பிடத்தக்கது.

திறந்தவெளிச் சிறையாக பிந்துனுவெவ முகாம் அமைந்திருந்ததால் சிங்களக் கிராமங்களுக்குள் நடமாடிய தமிழ் இளைஞர்களை, புலிகளெனக் கூறி வெறிபிடித்த கிராமவாசிகள் சிலர் ஒன்று திரண்டு தாக்கிய போது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து தடுக்க முனையாமல் பார்த்துக் கொண்டிருந்தனரென்று தப்பிய இளைஞர்கள் குற்றஞ்சாட்டியமை குறிப்பிடத் தக்கது.

## கெக்கிராவையில் பனை அபிவிருத்தி கண்காட்சி

அனுராதபுரம், குருநாகல், மாகோ ஆகிய பகுதிகளிலும் தற்போது பனை சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகளும் பனம் பொருள் உற்பத்திப் பயிற்சி நெறிகளும் அளிக்கப்பட்டு வருவதாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் எஸ்.சிவதாசன் தெரிவித்தார். கெக்கிராவை, ஹிரிபிட்டியாவ ஜிதேந்திராராம விகாரையில் பனை சார்ந்த கைப்பணிப் பொருள் கண்காட்சியையும் விற்பனைச் சந்தையையும் அண்மையில் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். பனை சார்ந்த கைப்பணிப் பொருட்கள் தயாரிப்பது சம்பந்தமாக ஆறு மாத காலப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

## திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு மின்பிறப்பாக்கி

சுமார் 3,000 வருட கால பண்டைய சரித்திர பிரசித்தி பெற்ற மன்னார் கேதீச்சர ஆலயத்தின் பயன்பாட்டுக்கென கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்து கலாசார அமைச்சரும் மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழில் பயிற்சிக்கு உதவும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா 12 இலட்சம் ரூபா பெறுமதியான மின்பிறப்பாக்கி ஒன்றை வழங்கியுள்ளார். இந்த ஆலயம் இராவணனின் மனைவி மண்டோதரியினால் வணங்கப் பெற்றதாக அறியப்படுவதுடன் முற்காலத்தில் மாகாதேவராஜப் பெருங்கோயில் என்று அழைக்கப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது.

## யாழ். சட்டத்தரணி கோடீஸ்வரனுக்கு எதிராகப் புகார்

யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த வருடம் ஜூன் மாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட விவகாரத்து வழக்கொன்று சம்பந்தமாக சட்டத்தரணி செ.கோடீஸ்வரனுக்கெதிராக சட்டத்தரணிகள் சங்கத்துக்கும் உயர் நீதிமன்றத்துக்கும் புகார் செய்யப்பட்டுள்ளது. எதிராளியும், எதிராளி சார்பில் சட்டத்தரணியும் ஆஜராகாத நிலையில் வழக்காளி சமர்ப்பித்த சத்தியக்கூற்றையும், வழக்காளியின் சட்டத்தரணி முன்வைத்த சமர்ப்பணத்தையும் ஏற்றுத் தீர்பளித்து பின்னுறுதித் தீர்வு வழங்கப்பட்டிருந்தது. தனக்கெதிராக யாழ். நீதிமன்றில் வழங்கப்பட்ட பின்னுறுதித் தீர்ப்புப் பற்றித் தெரிந்துகொண்ட கொழும்பிலிருந்த எதிராளியான யாழ்ப்பாணத்திலுள்ள சட்டத்தரணி கோடீஸ்வரனுடன் தொலை பேசி மூலம் இவ்வழக்கு சம்பந்தமாக கலந்தாலோசித்துள்ளார். அதனடிப்படையில் எதிராளி சார்பாக விசாரணையில் தான் தோன்றுவதாக தெரிவித்த குறிப்பிட்ட சட்டத்தரணி அவ்வழக்கின் விசாரணையின் போது வழக்காளியின் சார்பாகத் தோன்றி எதிர் மனுதாரரை குறுக்கு விசாரணை செய்துள்ளார். இதனால் குழப்பமடைந்த மனுதாரர் உண்மையை நீதிமன்றில் நிரூபிக்கு தெரிவித்ததுடன் உயர் நீதிமன்றத்திற்கும் சட்டத்தரணிகள் சங்கத்திற்கும் முறைப்பாடு செய்ததை அடுத்து தொடர்ந்து 3 நாட்கள் விசேட விசாரணைக்காக நியமிக்கப்பட்டிருக்கும் இவ்வழக்கு உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு வரும்வரை தள்ளிப் போடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சட்டத்தரணிகள் இச்செயலை அறிந்த சட்டத்தரணிகள் சிலர் விசனம் தெரிவித்ததோடு ஆத்திரமும் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்து இளைஞர் சங்கத்துக்கு நிதியுதவி

வட கொழும்பு இந்து இளைஞர் சங்கத்துக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒரு இலட்சத்து எழுபத்தி ஐயாயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்தார். கடந்த வாரம் அமைச்சரைச் சந்தித்து உரையாடிய சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட்ட பிரதிநிதிகள் தமது சங்கத்தின் அடிப்படைத் தேவைகள் குறித்து கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். சங்கத்துக்கான காரியாலயத்தை அமைத்துக் கொள்வது, காரியாலய தளபாடங்கள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக்கொள்வது, அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான வசதிகளைப் பெறுவது, இலவச கணனி வகுப்புகளை ஆரம்பிப்பதற்கான நிதி மற்றும் ஏனைய வசதிகளைப் பெற்றுக் கொள்வது, சங்கீத உபகரணங்களைப் பெற்றுக்கொள்வது. நூல்க வசதிகள் பெற்றுக் கொள்வது என்பன அவர்களது முக்கிய அடிப்படைக் கோரிக்கைகளாக இருந்தன.

## ஜெயலலிதாவுக்குப் பாதுகாப்பு ஜரூர்

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவைக் கொலை செய்வதற்குப் புலிகளின் தற்கொலைப் பெண் குண்டுதாரியொருவர் சென்னைக்குள் ஊடுருவியுள்ளாரென்று தமிழகப் புலனாய்வு அதிகாரிகள் விடுத்த எச்சரிக்கையையடுத்து ஜெயலலிதாவின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. ஜெயலலிதாவின் உத்தியோகபூர்வ அலுவலகம் அமைந்திருக்கும் செயலகப் பகுதியிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. மேலதிகமாக முப்பது பொலிஸார் கடந்த வாரம் முதல் செயலகப் பகுதியில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 1991ஆம் ஆண்டு தமிழகத்திலுள்ள ஸ்ரீபெரும்புதூரில் பிரதமர் ராஜீவ் காந்தி புலிகளின் தற்கொலைக் குண்டுதாரியால் கொல்லப்பட்டதையடுத்து தமிழகத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்ட அதே பாணியிலேயே முதல்வரின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருப்பதாகத் தமிழகப் பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன. காமராஜர் சாலையில் சிவிலுடையில் நிறுத்தப்பட்டிருக்கும் இரகசியப் பொலிஸார் சந்தேகத்துக்கு கிடமானவர்களைத் துருவித் துருவி விசாரித்து வருகின்றனர். செயலக வளவுக்குள் வருவோர் போவோரும், வாகனங்களும் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

## முரசம்

### புகைத்தலை தடுத்து ஆயுளை நீடிப்போம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

சர்வதேச புகையிலைத் தினமாக, வைகாசி மாதம் 31ஆம் திகதி நினைவு கூரப்படுகிறது. அத்தினமானது கடந்தவாரம் எம்மைத் தாண்டிச் சென்றபோது பல அதிர்ச்சித் தகவல்களையும் விட்டுச் சென்றுள்ளது. இலங்கையில் வருடமொன்றுக்கு புகைப் பழக்கத்தால் இருபதாயிரம் பேர் மரணமடைகின்றனர் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. விபத்துக்கள், கொடிய நோய்கள், தற்கொலைகள், ஏனைய சம்பவங்கள் காரணமாக இறப்புகள் நிகழ்கின்ற போதும், அவற்றையும் தாண்டி புகைப் பழக்கத்தால் இருபதாயிரம் பேர் இறக்கின்றனர் என்பது கவனத்தில் கொள்ளத் தக்கது.

புகைத்தலானது இரண்டு தரப்பாரையும் தாக்குகிறது. அதாவது புகைப்பவரையும், புகையைச் சுவாசிப்பவர்களையும். புகை பிடிப்பவர் ஒவ்வொரு புகைத்தலின் போதும் தனது ஆயுளில் ஒரு நாளைக் குறைத்துக் கொள்கிறார் என்று கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. அதேயளவு தாக்கத்தைப் புகை பிடிக்காமல் புகையைச் சுவாசிப்பவரும் எதிர்கொள்கிறார் என்றும் அதே கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

வாழ்தலின் மீது பற்றில்லாமல் தெரிந்தே புகைக்கும் பலர், அவர்களைச் சூழ இருப்பவர்களையும் பலிப் பீடத்துக்கு இட்டுச் செல்கின்றனர். புகை பிடிப்பதை ஆணும், பெண்ணும் நாகரீகமாகக் கருதும் துர்ப்பாக்கியமான நிலையும் அதிகரித்துள்ளது. ஆகவே, இந்த ஆபத்திலிருந்து மக்களைப் பாதுகாக்க சில புதிய சட்ட திருத்தங்கள் செய்யப்பட்டு, அவை மிக இறுக்கமாக அமுல் படுத்தப்படவும் வேண்டும்.

புகைத்தல், பொது இடங்களில் புகைத்தல், புகைக்கத் தூண்டுதலான புகையிலை கலப்பான பொருட்களின் பாவனை என்பவை தொடர்பில், அரசு தேவையான திருத்தங்களைச் செய்ய வேண்டும். அதே நேரம், சட்டங்களைப் போடுகிறவர்களை விடவும், அச் சட்டங்களை மதிக்கின்றவர்களே சிறந்த பிரஜைகளாக மதிக்கப்படுவர் என்பதையும் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும். இல்லாவிடில் போடுகின்ற சட்டத்தைப் போடு, நான் ஆடுகின்ற ஆட்டத்தை ஆடியே தீருவேன் என்று ஆடுகிறவர்கள், அநாதைப் பிணங்களாக அல்ப ஆயுளில் மரணிப்பதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# செல்நெறி காட்டும் புத்தரும்

"புத்தம் சரணம் கச்சாமி
தம்மம் சரணம் கச்சாமி
..................................
..................................
தானதிபதி வேரமணி
சிக்காபதங் சமாதியாமி"

ஞானம் பெற்ற போதிசத்துவப் புத்தன் போதித்த அறநெறிகள் இவை. சித்தார்த்த கௌதமன் என்ற இளம் அரச குமாரன் இந்த உலகின் அவலங்களைப் பார்த்து, மனம் நொந்து, மனைவியையும் மகனையும் மட்டுமல்ல, அரச போகத்தையே கைவிட்டு அரச மரத்தின் கீழ் சென்றமர்ந்து ஞானம் பெற்றதோடு, பரிநிர்வாணமும் பெற்றார். அறநெறிகளையே அவர் போதித்தார். செத்துக் கிடந்த பசுவைப் பார்த்து மனம் நொந்தார் சித்தார்த்தர். இறந்து போன தன் மகனுக்காக அழுது புலம்பிய தாயாரிடம் "மரணம் நிகழாத வீட்டிலிருந்து கடுகு எடுத்து வா. உன் மகனை உயிர்ப்பிக்கிறேன்" என்று கூறி ஞான போதனை ஊட்டிய மகாஞானி அவர். ஞானம் பெற்ற பின்னர்தான் சித்தார்த்தர், கௌதம புத்தரானார். இந்தத் தத்துவ ஞானியை சிலர் அவரைக் கடவுளாக்கிக் கொண்டார்களென்று புத்த சமய வரலாறு கூறுகிறது. இதனால்தான் இலங்கையில் பின்பற்றப்படும் தேரவாத பௌத்தத்துக்கும் திபெத், ஜப்பான், கொரியா, சீனா போன்ற நாடுகளில் பின்பற்றப்படும் மகாயான பௌத்தத்துக்குமிடையில் முரண்பாடுகள் காணப்படுவதாக பௌத்த வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள்.

இலங்கையில் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் என்ற நான்கு சமய நெறிகள் மக்களால் பின்பற்றப்படுகின்றன. சகல சமயங்களுமே வாழ்க்கைக்குச் செல்நெறி காட்டுபவைதான். காருண்ய சீலத்தைப் போதித்தவர் கருணாமூர்த்தி புத்தர். "அன்பே சிவம்" என்று வலியுறுத்துவது இந்துமதம். "அயலான் பசித்திருக்க, நீ புசியாதே" என்கிறது இஸ்லாமியர்களின் புனித குர்ஆன். "உன்னைப் போல் அயலானையும் நேசி" என்கிறது கிறிஸ்தவம். ஆக, அன்புதான் இந்த மதங்கள் அனைத்தினதும் இன்ப ஊற்று. பௌத்தத் துறவிகள் புராதன

# கொலைவெறி ஊட்டும் பித்தர்களும்


இந்திய மொழியான பாளியிலும், இந்துக் குருமார் புராதன இந்திய மொழியான சமஸ்கிருதத்திலும், கிறிஸ்தவ மதகுருமார் இலத்தீன் மொழியிலும், இஸ்லாமிய மௌலவிகள் அரபு மொழியிலுமே ஆண்டவர்களுக்கு அர்ச்சனை செய்கிறார்கள் அல்லது நன்னெறி போதிக்கிறார்கள். என்னதான் நன்னெறிகள் போதிக்கப்பட்டாலும் சமயங்களின் பேரால் உலகெங்கும் நடைபெறும் சண்டைகள், சமயங்களின் அடித்தளங்களையே தகர்த்துக் கொண்டிருக்கின்றன.

இந்த அடித்தளத்தில்தான் திருமலையை எரிமலையாக்கிக் கொண்டிருக்கும் புத்தர் சிலை விவகாரத்தை நாம் பார்க்க வேண்டியுள்ளது. திருகோணமலை மணிக்கட்டுக் கோபுரத்துக்கு முன்னால், நகரசபைக்குச் சொந்தமான வளவில் கடந்த பதினைந்தாம் திகதி இரவோடிரவாகப் புத்தர் சிலையொன்று நிறுவப்பட்டது. திருமலை பஸ் நிலையத்துக்கு அருகில் மூன்றடி பீடத்தில் நான்கு அடி புத்தர் சிலை நிறுவப்பட்டது. திருமலை முச்சக்கரவண்டிச் சாரதிகள் சங்க முக்கியஸ்தரான கீர்த்தி என்பவரும் வேறு இரு பிக்குகளுமே இந்த நிர்மாண வேலைகளின் சூத்திரதாரிகளாவர். மறுநாளே திருமலைத் தமிழர் பேரவை என்ற முன்னர் அறியப்படாத லேபல் அமைப்பொன்று புத்தர் சிலையை அகற்றக் கோரி ஹர்த்தால், கடையடைப்பு நடத்துமாறு திருமலை வாழ் தமிழ் மக்களைக் கேட்டது. ஐந்து நாட்கள் இடம்பெற்ற ஹர்த்தாலின்போது ஏட்டிக்குப் போட்டியாக இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் தமிழர்களும் சிங்களவர்களும் படுகாயமுற்றனர்.

இந்தப் புத்தர் சிலை விவகாரம் கடந்த 18ஆம் திகதி திருமலை நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வந்தபோது இரு தரப்பினரையும் அழைத்த நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராஜா, சமரச முயற்சிகளை மேற்கொண்டார். யுத்தகளத்தில் வீழ்ந்து கிடந்த சடலங்களைக் காட்டி, அசோகச் சக்கரவர்த்திக்கு அஹிம்சையின் அவசியத்தைப் போதித்து அவரின் மனதை மாற்றிய புத்தபிரானின் போதனைகளை எடுத்துக்கூறிய நீதிவான், சமரசமாகப் பிரச்சினையைத் தீர்க்குமாறு இருதரப்பினரையும் கேட்டுக்கொண்டார். புத்தர் சிலையைத் தற்காலிகமாக அகற்றுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். ஆனால், என்ன காரணமோ நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றப் பொலிஸாரால் முடியவில்லை. புத்தர் சிலைக்கு பாதுகாப்பாக மண்மூடைகள் அடுக்கி, கம்பி வேலி போட்டு, சீருடை அணிந்த அதிரடிப்படை வீரர்கள் துப்பாக்கிகள் சகிதம் நிறுத்தப்பட்டனர். ஆண்டவர் விக்கிரகங்களுக்கே ஆயுதப் பாதுகாப்பு வழங்கவேண்டிய அவல நிலை இந்த நாட்டில்! ஐம்பதாயிரம் பௌத்த சிங்கள மக்களின் இரத்த ஆறு இந்த நாட்டில் ஓடினாலும் கூட, புத்தர் சிலையை அகற்ற விடமாட்டோமென்று பௌத்த பிக்கு ஒருவர் சூளுரைத்தார். சிலையை அகற்றினால் தீக்குளிப்போமென வேறு சில பிக்குகள் மிரட்டினர். இதேவேளை 21ஆம் திகதி திருமலை கேணியடியில் மற்றொரு புத்தர் சிலை இரவோடிரவாக நிறுவப்பட்டது. ஆனால் மறுநாளே கேணியடிப் புத்தர் சிலையை அகற்றிய பொலிஸாரால் மணிக்கூண்டுக் கோபுரத்துக்கு முன்னாள் அமைக்கப்பட்ட புத்தர் சிலையை இன்றுவரையும் அகற்ற முடியவில்லை. கேணியடிப் புத்தர்சிலை அகற்றப்பட்டபோது ஐந்து பேரையாவது பலி கொடுத்து அதனைக் காப்பாற்றமுடியாத பிக்குகள், தீக்குளிக்க முனையாத பிக்குகள், பஸ் நிலைப் புத்தர் சிலையை அகற்றினால் மட்டும் தீக்குளிப்போமென மிரட்டுவதன் மர்மம் என்ன?

திருமலையில் திடீர் திடீரெனப் புத்தர் சிலைகள் அமைக்கப்படுவதற்கு எந்த மத ரீதியான காரணங்களும் கிடையாது. ஒன்றில் மத வெறி பிடித்தவர்களின் அல்லது அரசியல் சந்தர்ப்பவாதிகளின் திருவிளையாடலாகவே இவை இருக்க முடியும். ஏற்கனவே பொத்துவில் உல்லையிலும் புத்தர் சிலையை நிறுவி, முஸ்லிம்களின் மன உணர்வைப் புண்படுத்திய அதே சக்திகள்தான் இந்த அநாகரீகமான செயல்களில் ஈடுபடுகின்றனரென்பது இங்கு குறிப்பிடக் கூடியது.

சமய நம்பிக்கையின் காரணத்தினால்தான் இந்தப் புத்தர் சிலைகள் நிறுவப்படுகின்றனவென்றால், அதைச் சந்திக்குச் சந்தி சட்டவிரோதமாக நிறுவாமல் ஏன் சட்ட ரீதியான இடங்களில் நிறுவ முடியாது? மதுபானச் சாலைகளுக்கு அருகே புத்தர் சிலை நிறுவப்பட்டதை திருமலையின் முக்கிய பௌத்த தேரரான வண. இந்ததிஸ்ஸ வன்மையாகக் கண்டித்துள்ளார். இரு மதுபானச் சாலைகளுக்கு மத்தியில் இந்தப் புத்தர் சிலை அமைக்கப்பட்டமை பௌத்த தர்மத்துக்கு விரோதமானதென்று அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.



புத்த பிரானின் போர்வைக்குள் புகுந்து கொண்டு சட்ட விரோதமான இடங்களில் பௌத்த சிலைகளை அமைப்பவர்களின் உள் நோக்கம் என்னவென்பதைக் கண்டறிவது ஒன்றும் கஷ்டமான காரியமல்ல. உண்மையிலேயே அவர்கள் சமய அனுஷ்டானங்களுக்காகவோ அல்லது சமய பக்தி காரணமாகவோ புத்தர் சிலைகளை அவர்கள் அமைக்கிறார்களென்றால் சட்ட விரோதமான இடங்களை தேர்ந்தெடுப்பது ஏன்? குழப்பங்கள் ஏற்பட வேண்டுமென்பதே இவர்களின் நோக்கமாகும். திருமலையில் இனவெறித் தீயை மூட்டினால் இலங்கையெங்கும் மிக விரைவாகப் பற்றிப் பிடித்து விடுமென்பது இந்தத் தீயசக்திகளின் கபட நோக்கமாகும்.

திருகோணமலை, இந்து சமுத்திரப் பிராந்தியத்திலேயே

> **சமய நம்பிக்கையின் காரணத்தினால்தான் புத்தர் சிலைகள் நிறுவப்படுகின்றனவென்றால், அதைச் சந்திக்குச் சந்தி சட்டவிரோதமாக நிறுவாமல் ஏன் சட்ட ரீதியான இடங்களில் நிறுவ முடியாது?**

மிக முக்கியமான இயற்கைத் துறைமுகத்தைக் கொண்டுள்ளது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட எண்ணெய்க் குதங்கள் இந்தியாவுக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டு விட்டாலும் மேலாதிக்க சக்திகளின் கண்களில் இன்னமும் எண்ணெய் ஊற்றி எரிச்சலை ஏற்படுத்திக் கொண்டிருப்பதும் உண்மைதான். இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னரும் பிரித்தானியப் படைகள் திருமலையை விட்டு வெளியேறாதிருந்தமையையும் இங்கு குறிப்பிட்டுத்தானாக வேண்டும்.

இலங்கையிலும்கூட வடக்கு, கிழக்கின் தலைநகராகத், தமிழர்களின் தாயக பூமியாகத் திருகோணமலையைத் தமிழ் இயக்கங்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் வலியுறுத்துவது பல பேரினவாத சக்திகளின் வயிற்றில் புளியைக் கரைத்து வார்த்திருக்குமென்பதில் சந்தேகமில்லை.

தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகப் பிரதேசமான வடக்கு, கிழக்கைப் பிரிப்பதற்காகவும் இனப்பரம்பலை சீர்குலைப்பதற்காகவும் வடக்கு-கிழக்கின் எல்லைப் பகுதிகளான திரியாய், முல்லைத்தீவின் எல்லைக் கிராமங்களில் சிங்கள பேரினவாத அரசுகள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டன. சுதந்திர இலங்கையின் முதலாவது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் டி.எஸ்.சேனநாயக்கா காலத்தில் கிழக்கின் கல்லோயாவில் மேற்கொள்ளப்பட்டது. மணலாறு (வெலிஓயா) வடமுனை எனப் பல சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. திருமலையிலும் கூட பதவி சிறிபுர, சேகுவாவில, கோமரன்கடவல ஆகிய இடங்களிலும் சிங்கள குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆசியுடனேயே திருமலையில் சேருவாவில என்ற சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தொகுதி அமைக்கப்பட்டது.

திருமலை புத்தர் சிலை விவகாரத்தை இன்னுமொரு கோணத்திலும் நாம் பார்க்க வேண்டியுள்ளது. இங்கு கடைசியாக 1981ஆம் ஆண்டிலேயே சனத்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. 2001ஆம் ஆண்டு தமிழர் தரப்பினரின் எதிர்ப்புக் காரணமாகச் சனத்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை. சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்னர் நடத்தப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி 36.4 சதவீதம் தமிழர்களும் 33.4 சதவீதம் சிங்களவர்களும் 23.3 சதவீதம் முஸ்லிம்களும் திருமலை மாவட்டத்தில் உள்ளனர். இந்த சனத்தொகைப் போட்டா போட்டி காரணமாகவும் அங்கு சிங்கள மேலாதிக்கத்தை உருவாக்குவதற்காகப் பேரினவாத சக்திகளால் திட்டங்களும் சதிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. நான்கு பாராளுமன்ற அங்கத்தவர்களைக் கொண்ட திருமலை மாவட்டத்தில் 2001ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தமிழர் ஒருவரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்டமைப்பின் சார்பில் சிங்களவர் ஒருவரும் முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் முஸ்லிம் ஒருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 68, 955 வாக்குகளும், முஸ்லிம் காங்கிரசுக்கு 65, 187 வாக்குகளும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு 31, 053 வாக்குகளும் கிடைத்தன. ஐக்கிய தேசிய முன்னணி 15, 693 வாக்குகளைப் பெற்றுக் கொண்டது. முஸ்லிம் வாக்குகளும் சிங்கள வாக்குகளும் தேசியக் கட்சிகளுக்குப் பிரிந்து சென்றிருக்கும். வெறும் இரண்டாயிரத்துச் சொச்ச வாக்குகளைக் கூடுதலாகப் பெற்ற தமிழர் கூட்டமைப்புக்கு தேசியப் பட்டியல் ஆசனம் கிடைத்தது. சேருவாவிலத் தொகுதியில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 47.22 சதவீத வாக்குகளையும் மூதூர் முஸ்லிம் தொகுதியில் முஸ்லிம் காங்கிரஸ் 69.56 சதவீத வாக்குகளையும் திருமலைத் தொகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 65.16 சதவீத வாக்குகளையும் பெற்றுக் கொண்டமை திருமலை மாவட்டத்தின் மூன்று தொகுதிகளிலும் எவ்வாறு மூவினமக்களும் செறிந்து வாழ்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது. எனவே திருமலை மாவட்டம் பொருளாதார, அரசியல், துறைமுக மையமாக இருப்பதும் இனரீதியான போட்டிக்கு ஓர் முக்கிய காரணமாகும். இந்தப் பின்னணியிலும் மேலாதிக்க சக்திகளின் புத்தர் சிலை விவகாரத்தை நாம் நோக்க வேண்டும். தமிழ் மக்கள் பேரவை போல வடக்கு, கிழக்கு சிங்கள அமைப்பு என்ற லேபல் இயக்கமும் ஆர்.எம்.ஏ.பண்டார என்பவரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. புத்தர் சிலை விவகாரத்தோடு சம்பந்தப்பட்ட முச்சக்கர வண்டிச் சாரதிகள் உட்பட மற்ற இரு தமிழ், சிங்கள அமைப்புகளின் முக்கியஸ்தர்களும் அடுத்த தேர்தலில் போட்டியிடுவார்களென்பதும் அல்லது போட்டிக்கு நிறுத்தப்படுவார்களென்பதும் சர்வ நிச்சயம்.

பாராளுமன்ற ஆசனங்களைப் பிடிப்பதற்காக பச்சை வகுப்புவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டதே இந்த நாட்டிலுள்ள பெரும்பாலான அரசியல் கட்சிகளின் வரலாறாகும். இது இனியும் தொடரும்.

சட்டவிரோதமாகத் தனது காணியில் புத்தர் சிலை அமைக்கப்பட்டமை குறித்து நீதிமன்றத்துக்கு முதலில் முறைப்பாடு செய்த நகரசபை, அந்தச் சிலையைத் தற்காலிகமாக அகற்றுமாறு நீதிமன்றம் விடுத்த உத்தரவை அமுலாக்கத் தயங்குவது ஏன்? புத்தர் சிலை பெரும் 'டைம் பொம்ப்' பாக வைக்கப்பட்டுள்ளது. மண்மூடைகளும் கம்பி வேலிகளும் ஆயுதங்களும் மட்டும் அந்தச் சிலைக்குப் பாதுகாப்பாக இருக்கவில்லை. அரசியல், சமூக, சமய சக்திகளும் பின்புலத்தில் நாக்கைத் தொங்க விட்ட வண்ணம் காத்துக் கிடக்கின்றன.

மனித வாழ்வுக்குச் செல்நெறி காட்டிய புனிதர் புத்தர். அந்தப் புத்தரையே பயன்படுத்தி மனித அழிவுக்குக் கொலைவெறி ஊட்டுகிறார்கள் பித்தர்கள்.

"புத்தம் சரணம் கச்சாமி
நித்தம் மரணம் ஏன் சாமி?"
என்று கேட்கத் தோன்றுகிறதா?

# நீளும் கொலைப் பட்டியல்

*சென்ற வாரத் தொடர்ச்சி.....*

கிழக்கு மாகாணத்தின் தலைவிதியை தீர்மானிப்பவர்களாக ஆயுதப்போராட்டத்தின் போராட்ட வலு இப்பகுதி மக்கள் மீது பலாத்காரமாகவே திணிக்கப்பட்டு வந்துள்ளது. தமது தலைமைகளை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கும், இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் கிழக்கு மக்களின் உழைப்பை, போர்க்குணத்தை பாவித்துக்கொள்ளும் பச்சை சுயநலமே இதுவரையும் வெளிப்பட்டுள்ளது. இதனை மறைத்து கிழக்கு மாகாணத்திலிருந்து தலைமை மிக்க ஒரு சக்தியை வளரவிடாத அதேவேளை, போராளிகளை உணர்ச்சியூட்டி, மக்களை திசைதிருப்பும் கைங்கரியத்தை புலிகள் நேர்த்தியாகச் செய்து வந்துள்ளனர்; செய்தும் வருகின்றனர். இவ்வாறாக சொந்த இனத்தின் - உறவுகளின் கருவறைக்குள்ளேயே வெடிகுண்டு வைத்த அதேவேளை, சகோதர முஸ்லிம் சமூகத்தையும் காலத்துக்குக் காலம் சூறையாடி வந்துள்ளனர். கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை முஸ்லிம்கள் புலிகளால் கொல்லப்பட்டது மிக அதிகமாகும். இச்சம்பவங்கள் கூட முஸ்லிம் - தமிழ் சமூகங்களுக்கிடையில் முறுகலை தோற்றுவித்ததோடு, பல விரும்பத்தகாத வன்செயல்களுக்கும் வழிவகுத்தது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை புலிகள் தவிர்ந்த ஏனைய அமைப்புகளினாலும் பலர் கொலை செய்யப்பட்டுள்ளனர். அதுபோல அந்த அமைப்பிலிருந்தும் பலர் இறந்துள்ளனர். இப்போது அந்த அமைப்புகள் செயல் இழந்து போய்விட்டன அல்லது தமது சுய அடையாளங்களை இழந்து நிற்கின்றன எனலாம். ஆகவே இற்றை வரையும் கிழக்கில் படுகொலை செய்துகொண்டு வரும் புலிகளின் கொலைப் பட்டியலை முழுமையாக இல்லாவிட்டாலும் ஓரளவாவது மீட்டிப்பார்க்க வேண்டிய கட்டாயத்தை தொடரும் கொலைகள் வற்புறுத்துகின்றன.

1965ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியில் இருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த சம்பந்தமூர்த்தியை சுட்டனர். பின்னர் தமிழரசுக் கட்சியின் தீவிர ஆதரவாளராக இருந்த வந்தாறுமூலை சிவலிங்கம் மாஸ்டர் புலிகளுக்கு கப்பம் தர மறுத்ததற்காகச் சுடப்பட்டார். 1990ஆம் ஆண்டு மட்டக்களப்பைச் சேர்ந்த பா.உ. சேம் தம்பிமுத்துவும், அவரது மனைவியும் கொழும்பில் வைத்து சுடப்பட்டனர். இவர் முன்பு ஈ.பி.ஆர்.எல்.எப்.இன் உறுப்பினராக இருந்தவர் என்றும் கூறப்படுகிறது.

ஊடகவியலாளரும் ரெலோ சார்பில் மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வராக்வும் இருந்த செழியன் பேரின்பநாயகத்தை புலிகள் சுட்டுக்கொன்றனர். 2002ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுத் செய்யப்பட்ட நிமலன் சௌந்தரநாயகம் சுடப்பட்டார். இவர் பாராளுமன்றத்துக்கு முதன் முதலாகப் போகும் போதே மூன்று புலிகளை அழைத்துச் செல்லவேண்டும் எனப் புலிகள் வற்புறுத்தினர். அதை மறுத்தார். பின்னர் அவருக்கு மோட்டார் சைக்கிள் தலைக்கவசம் ஒன்றை புலிகள் வாங்கிக்கொடுத்தனர். எங்கு செல்வதென்றாலும் அதை அணிந்து கொண்டுதான் செல்ல வேண்டும். அதுதான் உங்களைப் பாதுகாக்க தமக்கு உதவியாக இருக்கும் என்று கொடுத்து இரண்டாம் நாள் மோட்டார் சைக்கிளில் போகும்போது சுட்டுக் கொன்றனர். பின்னர்தான் தெரிந்தது அவரை அடையாளங்கண்டு சுடுவதற்கே புலிகள் அந்த தலைக்கவசத்தை வாங்கிக் கொடுத்துள்ளனர் என்று. 2004ஆம் ஆண்டு தொழிற்சங்கவாதியும் கருணாவின் தீவிர ஆதரவாளரும் பாராளுமன்ற வேட்பாளருமான ராஜன் சத்தியமூர்த்தியைப் புலிகள் சுட்டுக்கொன்றனர். இவருக்கு கருணா 'மாமனிதர்' பட்டம் சூட்டி நல்லடக்கம் செய்தார். அதையும் பொறுக்காத புலிகள் இவரது சடலத்தை தோண்டி எடுத்து அழுகிய நிலையிலும் டயர் போட்டு எரித்தனர். அதுபோல கடந்த பாராளுமன்ற தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட கிங்ஸ்லி ராசநாயகம், இவர் கருணாவுக்கு ஆதரவு என்பதால் பதவியை ராஜினாமாச் செய்யவைத்து அப்பதவியை புலிகளுக்குப் புகழ்பாடும் இன்னொருவருக்கு கொடுத்ததோடு மட்டுமல்லாமல் கிங்ஸ்லி ராசநாயகத்தை சுட்டுக் கொன்றனர். இவரது விடயத்தில் மக்களின் ஏகோபித்த ஜனநாயகத்தை மறுத்ததோடு மட்டுமல்லாமல் அநாவசியமான படுகொலைகளையும் செய்தனர்.

> **அண்ணளவாகப் பார்த்தால் 6435 பேரின் மரணம் உறுதிசெய்யப்படுகிறது. இவர்களில் 3435 பேரின் உருவப்படங்களைத் தவிர தமது பிள்ளைகளின் உருவப்படங்களை புலிகள் ஏன் வைக்கவில்லை என அப்போராளிகளின் பெற்றோர்கள் இன்றும் அழுதுபுலம்புகிறார்கள். இந்த அழுகைகளின் சாட்சியாக திருகோணமலையிலும், மட்டக்களப்பு, அம்பாறையிலும் கல்லறைகள் விதைப்பகங்கள் என்ற வீர வசனத்துடன் புலிகளால் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.**

கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் தம்பையா சுடப்பட்டார். கருணாமீது மட்டக்களப்பு மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்துவதற்காக இவரைச் சுட்டனர். அதேபோல மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மோனகுருசாமியும் புலிகளினால் இலக்கு வைக்கப்பட்டவராவார்.

திருகோணமலையைப் பொறுத்தவரை புலிகள் இயக்கத்துக்கு பிரபாகரனைப்போல ஆளுமைமிக்க தலைவராக தன்னை வளர்த்துக் கொண்ட பிரபாகரனின் மிக நெருங்கிய சகாவான அன்ரன் என்பவரை படுக்கையில் ஒன்றாகப் படுத்திருந்தபோது பிரபாகரனால் சுடப்பட்டார். பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கியஸ்தர் தங்கத்துரை மூதூரில் வைத்து சுடப்பட்டார். கிண்ணியா ஆலங்கேணியில் செல்லக்கிளி, ஈ.பீ.ஆர்.எல்.எப்., ஜோர்ஜ், ஈ.பி.டி.பீ. பாண்டியன் (ரமணி) கடைசியாக முன்னாள் நகர சபைத் தலைவர் சூரியமூர்த்தி இவ்வாறு நீளும் தமிழர் தரப்புக் கொலைப் பட்டியலில் இன்னும் பலர் உள்ளனர். இது மிகச் சொற்பமான விபரங்களேயாகும். இவர்கள் யாரும் தனிப்பட்ட காரணங்களுக்காக இறந்தவர்களில்லை. ஏதோ ஒரு வகையில் கிழக்கு மாகாணத்தில் விடுதலைக்காகவும், அபிவிருத்திக்காகவும் அவர்களுக்கு நியாயமான வழியில் போராடியவர்கள். தமிழர் வரலாற்றில் மறக்கப்பட முடியாதளவுக்கு தம்மை கிழக்கு வாழ் தமிழ் மக்களின் தலைவர்களாக வளர்த்துக் கொண்டவர்கள்.

மறுபக்கத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுடன் இரண்டறக்கலந்து வாழ்ந்து வரும் முஸ்லிம் சமூகத்திலும் புலிகளின் கொலை வெறியாட்டம் நடத்தப்பட்டு வருகின்றது. அதிலிருந்தும் குறிப்பிட்ட சில விபரங்களைப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

திருமலை மூதூர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த மஜீத், அவரது வீட்டு வாசலில் சுடப்பட்டார். இது நடந்தது 1987ஆம் ஆண்டு. இவர் இந்திய இராணுவம் கிண்ணியா பகுதிக்கு வரக் காரணமாக இருந்ததற்காக புலிகளால் சுடப்பட்டதாக அறியமுடிகிறது. 1990 இல் முஸ்லிம் காங்கிரஸின் மாகாணசபை உறுப்பினர் மன்சூர் சம்மாந்துறையில் சுடப்பட்டார். 1991ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் வை.அகமட் மற்றும் நான்கு முஸ்லிம்கள் சுடப்பட்டனர்.

காத்தான்குடி பள்ளிவாசல் மற்றும் மீராமுகைதீன் ஹுசைனிய தைக்கா இரண்டிலுமாக 103 முஸ்லிம்கள் தொழுகையின் போதே புலிகளால் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டனர். 1992ஆம் ஆண்டு மட்டக்களப்பு உதவி அரசாங்க அதிபராக இருந்த உதுமான் புனாணையில் வைத்து சுடப்பட்டார். அவரோடு மேலும் மூன்று முஸ்லிம் புத்திஜீவிகளும் சுடப்பட்டனர். 1990.07.14 அன்று புனித ஹஜ் கடமைக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்த அறுபதுக்கும் மேற்பட்ட முஸ்லிம்களை புலிகள் சுட்டனர். 1990.07.19 அன்று அம்பிலாந்துறையில் வாகனங்களில் பயணித்த சுமார் 210 முஸ்லிம்களை ஆண், பெண், குழந்தைகள் என அனைவரையும் கொலை செய்தனர். 1990.07.07 அன்று பொலநறுவை எல்லைக் கிராமமான புதூரில் 17 முஸ்லிம்களைச் சுட்டுக் கொன்றனர். 1990ஆம் ஆண்டு அக்கரைப்பற்றில் 8 பேரையும், 1992.06.02 அன்று பொத்துவிலில் 58 பஸ் பிரயாணிகளையும் கொன்றனர். 1992.09.01 அன்று சாய்ந்தமருது குண்டு வெடிப்பில் 23 பேர், 1992.10.05 அன்று பொலநறுவை எல்லைக் கிராமமான அக்பர் புறத்தில் சுமார் 200 பேரை கொலை செய்தனர். 1987ஆம் ஆண்டு மூதூரிலும் கிண்ணியாவிலும் 11பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். தவிரவும் போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்குப் பின்னர் வாழைச்சேனையில் 12 பேர், மூதூர் கலவரத்தில் 8 பேர், கிண்ணியா நடுஊரில் 3 பேர் என்று தொடர்கிறது.

இதுதவிர, புலிகள் இயக்கத்திலிருந்து பலியான ஏனைய இயக்கப் போராளிகளைவிடவும் புலிகளாக இறந்தவர்கள் 4,535 பேர் எனத் தகவல்கள் உண்டு. இது தெரியவந்தவை மட்டுமே. தெரியாமல் இம்மாதிரியான ஒரு தொகையினர் கொல்லப்பட்டிருக்கலாம். இதில் 4090 பேர் ஆண்கள் என்றும், 445 பேர் பெண்கள் என்றும் அந்தத் தகவல் கூறுகிறது. ஆனால், போன மாவீரர் தின நாளில் மட்டக்களப்பில் பலியானவர்களாக 1,500 பேரின் உருவப்படங்களும், அம்பாறையில் 1,300 பேரின் உருவப்படங்களும் திருகோணமலையில் 635 பேரின் உருவப்படங்களும் வைக்கப்பட்டன. ஆனால் திருமலையில் 1900 பேருக்கும் அதிகமான இளைஞர், யுவதிகள் பலியாகியுள்ளனர் என புலிகளின் முன்னாள் பொறுப்பாளர் கூறுகிறார். அண்ணளவாகப் பார்த்தால் 6435 பேரின் மரணம் உறுதிசெய்யப்படுகிறது. இவர்களில் 3435 பேரின் உருவப்படங்களைத் தவிர தமது பிள்ளைகளின் உருவப்படங்களை புலிகள் ஏன் வைக்கவில்லை என அப்போராளிகளின் பெற்றோர்கள் இன்றும் அழுதுபுலம்புகிறார்கள். இந்த அழுகைகளின் சாட்சியாக திருகோணமலையிலும், மட்டக்களப்பு, அம்பாறையிலும் கல்லறைகள் விதைப்பகங்கள் என்ற வீர வசனத்துடன் புலிகளால் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மொத்தமாக கிழக்கு மாகாணத்திலிருந்து போராட்டத்துக்காக புறப்பட்டு புலிகளின் தவறான வழிகாட்டலில் மடிந்தவர்களின் தொகை பத்தாயிரத்துக்கும் அதிகம் என அறியமுடிகிறது. மொத்தமாக புலிகளில் 17800 பேர் இறந்ததாகக்கூறும் புலிகள், கிழக்கு மாகாணத்துடன் இழப்பை உணரவேண்டும். இவ்விறப்புகளில் கருணா - பிரபா மோதலில் பலியான முன்னூறுக்கும் அதிகமான புலிகளையும் பிரபா அணிப்புலிகளால் கைதுசெய்யப்பட்டு கொலைசெய்யப்பட்டவர்களையும், இனந்தெரியாதவர்கள் என்றபோர்வையில் தொடரும் படுகொலைகளையும் கூட்டிப்பார்த்தால் புலிகள் எவ்வளவுக்கு கிழக்கு மாகாணத்தை கபளீகரம் செய்துள்ளார்கள், செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ளமுடியும். இப்படியாகத் தமிழினத்துக்கு குறிப்பாக கிழக்கு மாகாண மக்களுக்கு புலிகள் புரியும் துரோகத்தனத்தை மக்கள் புரிந்து கொண்டு இதற்குப் பரிகாரம் தேட முயற்சிக்க வேண்டும்.

இதேவேளை புலிகளின் வரலாற்றுப் பதிவுகள் இவ்வாறு நீண்டு கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களுக்கு மாற்றுப் பாதையைக்காட்டுவதாகக் கூறும் ஈ.பி.டி.பீ.யினர் கிழக்கு மாகாணத்தையும் மக்களையும் எவ்வாறு வழிநடத்துகின்றனர், அதன் சாதக பாதகங்கள் எவ்வாறு உள்ளது என்பதை சில விபரங்களோடு அடுத்தவாரம் பார்ப்போம். ◎

அலசுவது
**- மதியூகி -**

---

# அதிரடி அய்யாத்துரை



**சிவமானராமர்** கொலை செய்யப்பட்டு ஒரு மாதத்தினை நினைவு கூர்ந்த விதத்தை கேட்டியள் எண்டால் புல்லரிச்சுப் போவியள். அவருடைய சடலம் கிடந்த இடத்தில ஒரு போட்டோவை வைச்சு 100க்கும் மேற்பட்டவை வாயில கறுப்புத்துணி கட்டிக் கொண்டு நிண்டிச்சினமாம். மொத்தமா நிண்ட 125 பேரில எட்டே எட்டு பேர்தானுங்கோ தாய் மொழி பேசிறவையள். அதிலையும் 4 பேர் கறுப்பு வார் மணிக்கூடு கட்டின பெடியள். காலில டொயலட் பாட்டாவோட நின்டிச்சினம் பாத்தியளோ. மாமனிதர் எண்டிச்சினம் அவர் இவர் எண்டிச்சினம் கடைசியில எத்தின பேர் நினைவு கூரிச்சினமெண்டு. அதுசரி சகோதர மொழிக்கார ஊடகக்காரர்கள் ஏன் இப்புடி முக்கியத்துவம் குடுக்கினமெண்டு விசாரிச்சால் அது சும்மா பொலிரிக்ஸ்சாம். இருந்தா தராக்கி இல்லாட்டில் துரோகியோ!

**வன்னிக்கு** போன தங்கட பொறுப்பாளர்கள் மீண்டும் திரும்ப கால தாமதம் எடுக்கினமெண்டு சாதாரண உறுப்பினர்களுக்கு சந்தேகத்துக்கு மேல சந்தேகமாம். பிறகு என்னடா எண்டால் பெடியள் குழம்பி விடுவினம்மெண்டு வந்தவையளுக்கு போங்கோ எண்டு கடுமையான வோர்னிங் பண்ணி பெமிஷன் குடுத்திருக்கினமாம். ஹெலி தருகினமில்லை எண்டினம் ரெண்டெழுத்தாருக்கு கிலி பிடிச்சதால தான் ஹெலி கேட்டு இப்புடி கொக்கு நிற்குமாப் போல ஒற்ற காலில நிக்கினமாம். படையினர்தான் யுத்த நிறுத்தத்தை மீறினம் அவையளோடை சேர்ந்து துணைப்படையும் தங்களுக்கு எதிரா செயல்படுகினமெண்டு விழுந்து விழுந்து அறிக்கை விடுறவை படையினர் தான் தங்களுக்கு பாதுகாப்பு தர வேண்டுமெண்டு எவ்வளவு வசதியாக் கேக்கினம் இப்புடி நான் சொல்லேல்ல புலம் பெயர்ந்து போறத்துக்கு வீசா கேட்டு அப்பிளிகேஷன் போட்டிருக்கிற பேராசிரியர் ஒருவர் வாய் கூசாமல் சொல்றாருங்கோ!

**உலக** பொலிஸ்கார நாட்டின்ர முன்னால் அதிபரும் இந்நாள் ஐ.நா.வின்ர சுனாமி புனரமைப்பு பணிகளுக்கான விசேட பிரதிநிதியுமான மிஸ்டர் பில் அடுத்த தடவை நாட்டுக்கு வரேக்க ரெண்டெழுத்தாரிண்ர பகுதிகளுக்கு போவன் எண்டு சொன்னவரெல்லோ இந்தச் செய்தி சனத்துக்கு சந்தோஷம்தானாம் ரெண்டெழுத்தாருக்கு தான் கெடிக்கலக்கமா இருக்குதாம் ஏனெண்டு யோசிக்கிறியளோ மிஸ்டர் பில் கல்முனைக்கு போகேக்க அந்த ஏரியாவில செல்போன் தொர்புகளை துண்டிச்சினமாம் அது போலை ரெண்டெழுத்தாரிண்ர கட்டுப்பாட்டு பகுதிக்கு போகேக்க அதிகூடின பாதுகாப்பைக் கருதி சகல சட்டலெட்களையும் அந்தப் பக்கம் திருப்பி 'வோச்' பண்ணுவினமே எண்டுதான். என்னடா இது வில்லங்கமா கிடக்கு வராட்டில் புறக்கணிப்பு எண்டினம் வாறதெண்டால் சட்டலெட் எண்டினம். ஏறச் சொன்னால் எருதுக்கு கோபம் இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம் அப்படியெண்டால் என்னதானுங்கோ செய்றதாம்.

**தங்கத்தை** விடவும் எரிபொருட்களின் விலை ஏறுமுகத்தில இருக்குதுங்கோ போகிறபோக்கைப் பார்த்தால் இன்னும் எகிறும் போல இருக்கு. இப்புடியே ஏறிக் கொண்டிருந்தால் இருட்டில தான் நிக்க வேண்டி இருக்குமோ எண்டு சனம் அஞ்சுதுகள். பகட்டுக்கு வாகனம் வேண்டினவைக்கு பொக்கெட் கடிக்குதாம் நாகரீக உலகத்தில மனுசன் திரும்பவும் நடராசாவோ எண்டு அங்கலாய்கினம். மூலிகைப் பெற்றோலைக் கண்டு பிடிக்க எந்த இராமர் வரப்போறாரோ.

**சிவப்புச்** சட்டைக்காரர் ஜப்பானுக்கு போனவையெல்லோ, அங்க இவைக்கு நல்ல கவனிப்பாம் பொதுக்கட்டமைப்பில் ரெண்டெழுத்தாரை சேர்க்கக்கூடாது அப்புடிச் சேர்த்தால் அதை எதிர்ப்போம் எண்டு சொன்னவை, இப்ப தங்களிடம் கேட்காம அதிகார அம்மணி பொதுக்கட்டமைப்பை நிறுவினால் அதை எதிர்ப்போம் எண்டினம் அதுமட்டுமே குறைந்த பட்சம் ரெண்டெழுத்தார் டோக்கியோ உடன்பாட்டையாவது மதிச்சு நடந்திச்சினமெண்டால் நல்லாய் இருக்கும் எண்டும் கேட்டிருக்கினம் ரெண்டெழுத்தாரை பொதுவான கட்டமைப்புக்கு கொண்டு வாரதே உலகப் பெரும் முயற்சியா இருக்கேக்க இவையின்ர வேண்டுகோள் எக்ஸ்ரா தலையிடியா கிடக்கெண்டு அதிகார அம்மணி அடிக்கடி அலுத்துக் கொள்றாவாம் என்ன செய்வது எதுக்கோ வாழ்க்கைப்பட்டால் எதையோ சுமக்கத் தானே வேணுமெண்டு ஒரு பழமொழி இருக்குங்கோ!

**அதிகார** அம்மணி அண்மைக்காலமாக தெரிவித்து வரும் கருத்துக்கள் சாதாரண சனத்துக்கு நல்லாய்ப் பிடிச்சுப் போயிருக்காம் உள்ளதை உள்ளபடி சொல்லேக்கதான் உண்மையான பிரச்சினைகளை சனம் புரிஞ்சு கொள்ளுதாம். இதை அம்மணி கடந்து போன 9 வருஷத்திலயும் கற்றுக் கொள்ளாத ஞானத்தை இப்ப தெளிவா புரிஞ்சு கொண்டிருக்கிறா. அவா எடுக்கிற முயற்சிக்கு ஆதரவு குடுக்கத்தான் வேணுமெண்டு சனம் பரவலா கருத்துச் சொல்லுதுகளாம். சனத்தின்ர உந்த மன மாற்றம் தான் எதிரான கட்சிக்காரரையும் சிவப்புச் சட்டைக்காரரையும் திங் பண்ண வைச்சிருக்குதாம். பாத்தியளோ மக்களுக்கு உண்மை தெரிஞ்சால் தங்கட பொலிரிக்ஸ் லைப்புக்கு சங்கு தான் எண்ட பயத்திலை நிண்டு முழிக்கினமாம். மேடம் இது தான் சரியான சந்தர்ப்பம் அடிங்கோ சிக்ஸர் சிக்ஸரா! அப்பிடியெண்டாத்தான் குறைஞ்ச நாளில கூடின இலாபம் பெறுவியள். சொரி சொரி குறைஞ்ச ஓவரில கூடின ரன் அடிப்பியள் ●

# சரியும் சர்வாதிகாரிகளின் சாம்ராஜ்யங்கள்

இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்ட இந்த இருபதாம் நூற்றாண்டு உலகின் பலபாகங்களிலும் பல்வேறுபட்ட குணாம்சங்களைக் கொண்ட சர்வாதிகாரிகளைச் சுமந்து நின்றது. குறிப்பாக இலத்தீன் அமெரிக்கா மோசமான சர்வாதிகார வரலாறுகளைக் கொண்டுள்ளது. இந்த இராணுவச் சர்வாதிகாரிகள் ஆர்ஜென்டினாவில், பொலிவியாவில், பிரேஸிலில், சிலியில், பராகுவேயில், உருகுவேயில் தமது விஷக் கரங்களைப் பதித்தார்கள். எதிர்க் கருத்துள்ளோரை வேட்டையாடினார்கள். இந்த நாடுகளில் எல்லாம் கொலை, கைது, காணாமல் போதல் என்பனவே அன்றாட வாழ்க்கையாயிற்று.

சென்ற வாரத் தொடர்ச்சி......

அதே வருடம் டிசம்பர் மாதம் பினாசெ, சிலிக் குடியரசின் ஜனாதிபதி தானே என்று அறிவித்தார். ஒரு இராணுவ அதிகாரி, இராணுவச் சர்வாதிகாரியாக மாறி அமெரிக்க மற்றும் மேற்குலக ஆசீர்வாதங்களுடன் 17 வருடங்கள் தமது இரும்புக்கர ஆட்சியால் சிலி மக்களின் சிரங்களை நெரித்தார். 1987ஆம் ஆண்டு பெரும்பான்மையான சிலி மக்கள் இராணுவ ஆட்சியை நிராகரித்ததனால் 1989ஆம் ஆண்டு தேர்தலை நடத்தவேண்டிய நிலை பினாசெயிற்கு ஏற்பட்டது. மாறிவரும் உலக அரசியல் சூழ்நிலைகள் காரணமாக அமெரிக்காவினால்கூட தமது கைக்கூலி சர்வாதிகாரியின் ஆட்சியைத் தொடரச் செய்ய முடியவில்லை. தேர்தலில் வெற்றி பெற்ற கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த பற்றீசியோ அயல்வீன், சிலியின் ஜனாதிபதியாகப் பதவியேற்றார். இருப்பினும் இராணுவம் பினாசெயின் செல்வாக்குக்குக் கட்டுப்பட்டே இருந்தது. ஆயினும் 1998ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பினாசெயின் நிலையில் மாற்றம் ஏற்பட்டது. இதே ஆண்டு மார்ச் மாதம் பினாசெ இராணுவத்தின் சகல பொறுப்புகளிலிருந்தும் ஓய்வு பெற்றார். 1980ஆம் ஆண்டு தானே மேற்கொண்ட அரசியல் சட்ட சீர்திருத்தத்தின்கீழ் தமது எதிர்காலப் பாதுகாப்புக் குறித்து வலதுசாரிகள் பலம் வாய்ந்த சிலியின் செனட் சபையில் ஆயுட்கால செனட்டர் பதவியை 1998இல் பினாசெ ஏற்றார். சிலி அரசின் முற்போக்கான அரசியல் சட்டச் சீர்திருத்தங்களை இச்சபையே தடுத்துவருவது குறிப்பிடத் தக்கது. அதிகாரபூர்வமான கணக்கீடுகளின்படி பினாசெயின் ஆட்சிக்காலத்தில் 3,197 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 1,102 பேர் காணாமல் போயுள்ளனர். ஆனால் உண்மையில் இவ்வெண்ணிக்கை இதைவிடப் பலமடங்கு அதிகம் எனக் கருதப்படுகிறது. பினாசெயின் கைது குறித்து அமெரிக்க அதிகாரிகள் கருத்துக் கூறும்போது, "இது அமெரிக்கா சம்பந்தப்பட்ட விடயம் இல்லை. சிலியும் பிரித்தானியாவும் தீர்த்துக்கொள்ள வேண்டிய விடயம்" என்று நழுவிவிட்டனர். வழமையாக தமது கைக்கூலிச் சர்வாதிகாரிகளைப் பாதுகாத்துவரும் அமெரிக்காகூட மாறி வரும் உலக அரசியல் காரணமாகப் பினாசெயின் பிரச்சினையில் நழுவிவிட்டது.

பினாசெயின் கைது உலகின் பல பாகங்களில் வாழ்ந்துவரும் முன்னாள் - இந்நாள் சர்வாதிகாரிகளுக்கு கிலியைக் கொடுத்துள்ளது. இன்னும் தம் சொந்த நாட்டிலும், வேறு நாடுகளிலும் வாழ்ந்துவரும் மேலும் சில சர்வாதிகாரிகளின் கடந்தகால, நிகழ்காலப் பக்கங்கள் எப்படி இருக்கின்றன என்பதையும் சற்று நோக்குவோம். ஆசியப் பிராந்தியத்தை எடுத்துக்கொண்டால் குடிசனத்தொகைமிக்க நாடான இந்தோனேசியாவின் சர்வாதிகாரி ஜெனரல் சுகார்த்தோ. இவருக்கு இப்போது 76 வயது. 1965ஆம் ஆண்டு மேற்கொண்ட ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் இந்தோனேசியாவின் ஜனாதிபதியானவர். கடந்த வருடம் மாணவர்கள் மேற்கொண்ட கிளர்ச்சிகளின் மூலமே இவரது பதவி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இவரது குடும்ப உறுப்பினர்கள் உயர் அரச பதவிகளில் இருந்துகொண்டு இந்தோனேசியாவின் வளங்களையும் சொத்துக்களையும் சூறையாடி, இன்றைய இந்தோனேசியாவின் பொருளாதாரச் சீரழிவுகளுக்குக் காரணமாயினர். அதுமட்டுமல்ல, தம்மைப் பாதுகாத்துக்கொள்ள சுகார்த்தோ மூட்டி வைத்த இன, மத முரண்பாடுகள், இன்று பூதாகரமாகியுள்ளன. இந்தோனேசியாவில் 1965ஆம் ஆண்டுக்கும் 1966ஆம் ஆண்டுக்கும் இடையில் சுகார்த்தோ மேற்கொண்ட படுகொலைகளின் எண்ணிக்கை 5 இலட்சத்திலிருந்து 10 இலட்சம் வரையிலானதாகும். இத்துடன் சுகார்த்தோவின் கொலைக்கரங்கள் ஓயவில்லை.

1975ஆம் ஆண்டு கிழக்குத் திமோரை ஆக்கிரமித்த சுகார்த்தோவின் படைகள் திமோர் மக்களின் சுதந்திரப் போராட்டத்தை அடக்கி இதுவரை 2 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களைப் படுகொலை செய்துள்ளன. இவ்வளவு படுகொலைகள், கொள்ளைகள் புரிந்தும் தமது பதவி முடிவுக்கு வந்தபின் தமது ஆதரவாளர் ஒருவரையே ஜனாதிபதியாக்கிவிட்டு தமக்கு எதிரான மக்கள் எதிர்பார்ப்புகள் குறித்தோ, நீதி விசாரணைகள் குறித்தோ அலட்டிக் கொள்ளாமல் சர்வாதிகாரி சுகார்த்தோ இந்தோனேசியாவில் சுகபோக வாழ்க்கையைத் தொடர்கிறார். ஆனால் நிகழும் அரசியல் மாற்றங்கள் விரையில் சுகார்த்தோவைக் கூண்டுக்குள் தள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. காரணம் சுகார்த்தோவின் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற சர்வதேச அழுத்தம் தற்போது இந்தோனேசியா அரசின் மீது பாரியளவில் பிரயோகிக்கப்படுகின்றது. ஆசியப் பிராந்தியத்தின் இன்னுமொரு இராணுவச் சர்வாதிகாரி பர்மாவின் ஜெனரல் நெவின். இவருக்கு இப்போது வயது 87.

1988ஆம் ஆண்டில் பர்மாவின் ஜனநாயகத்துக்கான போராட்டத்தை

## அமரர் உமாகாந்தன் எழுதியதிலிருந்து.....

முன்னெடுத்தவர்களில் 3000 பேரை நெவினின் அரசு படுகொலை செய்தது. இவரது அரசுக்கும் அமெரிக்கா அனுசரணையாக இருந்தது. 1988 ஜுலை மாதத்தின் பின் இவர் எந்தப் பதவியையும் வகிக்காத போதும் பர்மாவின் இராணுவ அரசிடம் செல்வாக்கு மிக்கவராகவே இருக்கிறார். பர்மிய மக்கள் தொடர்ந்தும் ஊழலும் கொடுமையும் நிறைந்த இராணுவ ஆட்சியார்களிடமே சிக்கித் தவிக்கிறார்கள்.

நன்றி :- தோற்றுத்தான் போவோமோ...

(தொடர்ச்சி அடுத்த வாரம்...)


## லண்டன், பாரிஸ்
### இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும் இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்

**டாக்டர் ஆர். தியாகராஜன்** DHMS, AMRSH (LON)

01.06.2005 முதல் லண்டன், பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார். மாறி மாறி வரும் ஆஸ்துமா (Asthma) சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Diabetes), எக்ஸிமா (Eczema) மலட்டுத்தன்மை, பேறின்மை (Strillity), ஆண்மைக் குறைபாடுகள் (Impotency) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும். ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற் கொண்டு மனம் மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்று நோக்கி ஒரு முழுமையான சிகிச்சையான பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (Side effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்கவல்லது.

முன்கூட்டிய பதிவுக்கு - லண்டன் தொலைபேசி:
**02087678004 - 07984803488 - 07833341693**
**E-mail : homoeocare@rediffmail.com**
இந்தியா - 0091-9843051099 இலங்கை - 0094-777602513
ஜுன் மாத இலங்கை விஜயம் 21.06.2005 முதல் 25.06.2005 வரை


## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.
- ஆசிரியர்

## தினமுரசு சந்தா விபரம்
### சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3500 | ரூ.1750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4400 | ரூ.2200 | ரூ.1100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3100 | ரூ.1550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1050 | ரூ.525 | ரூ.265 |


சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06 . Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் "Manager Thinamurasun" என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத்தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06 .என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.




ம லை யா ள மா ந் தி ரீ க ச க் தி





(1) மலையாள தேசத்தில் வசிப்பவளே ஸ்ரீ துர்க்கா தேவி ! ஸ்ரீ துர்க்கா தேவியின் பீடம் மலையாளமே! மலையாள தேசத்தின் தனி மகத்துவம் மலையாள மாந்திரீகம். அது மட்டுமா? விதியின் விபரணம் சாஸ்திரம், சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளமே! **மலையாள மாந்திரீக பேரரசர் டாக்டர் P.K. சாமி (J.D.G.A.N) J.P ஐயா அவர்களே**

(2) இலங்கையில் தொண்டு தொட்டு 46 வருடகாலமாக நுவரெலியாவிலும் கொழும்பிலும் ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயங்களை அமைத்து அன்றாடு 6 மணித்தியால அக்கினி குண்டலி பூஜை நடை பெருவதாலேயே! எண்ணியது எண்ணியவாறு நிறைவேறுகிறது

(3) உண்மைக்கு எடுத்து காட்டாக இது ஒரு வரையருக்கப்பட்ட தனியார் துரை P.K. Saamy Associate (Pvt) Ltd நிறுவனமாக இயக்கி வருவதால் வாங்கும் பணத்திற்கு ரசீதும் மாந்திரீக சித்த ஞானத்தால் காரியம் நிறைவேறும் திகதியை உடனே கூறிவிடும் சக்தி இங்கு இருக்கிறது.

(4) மேலும் ஐயாவின் பிரதான அனுசரனையுடன் வழங்கும் ஞாயிறு தோறும் சக்தி தொலை காட்சியில் இரவு 7 மணிக்கு **வேலன்** தொடரை தொடர்ந்து பார்த்து வேலன் மகிமையை கண்டறியுங்கள். மேலும் **கை அளவு உலகு** ஐரோப்பா முழுவதும் வெள்ளிதோறும் London நேரப்படி காலை 9.30 மணிக்கு கை ரேகை தொடர் நிகழ்ச்சியை Vectone TV பார்க்க தவறாதீர்கள். மேலும் விபரம் அறிய வெப்தலத்தை நாடுங்கள் www.drpksamy.com www.gangatharan.com

(5) இங்கு தீய வேலைகளுக்கு ஒருபோதும் இடமில்லை மனித ரூபத்தில் ஸ்ரீ துர்க்கா தேவியின் மகிமையை கண்டறிய மாதம் தோறும் இறுதியில் நடைபெறும் 11 மணித்தியால அக்கினி குண்டலி யாக பூஜையில் கலந்து கொண்டால் இவ் அற்புதத்தை கண்டறியலாம். அன்று அன்னதானமும் அடியார்களுக்கு வழங்கபடும்

(6) **இனி உங்கள் பிரச்சனை என்ன?**
தீராத நோய் தீர வேண்டுமா? ஆஸ்மா நோயால் அவஸ்தையா? பாரிச வாதமா? பக்க வாத விளைவுகளா? கை கால் உளைச்சலா? மன பேதளிப்பா? விரக்கிதியா-பட படப்பா? பில்லி சூனியமா? பேய் சேட்டையா? எதிரிகளின் சதிட்டத்தில் விடுபட வேண்டுமா?

(7) மற்றும் பிரிந்து போன கணவன்-மனைவி-காதலன் காதலி ஒன்று சேர, கணவன் மனைவி பிணக்கு தீர, பிரயாணத்தடை நீங்க, மது போதையில் இருந்த விடுபட, குபேர வாழ்வு அச்சர கூடு அணிந்து கொள்ள, கல்வி ஞான கவசம் பெற, தலைமுடி உதிர்வதை தடுத்து கொள்ள, இளம் நரையை போக்க, தலைமுடி வளர, சோம்பலை தவிர்க்க, வியாபாரம் விருத்தியடைய, ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தில் நன்மை பெற, கடற் தொழில் வியாபாரம் முன்னேற, வண்டி (வாகனம்) இலாபத்துடன் செயல்பட, விரும்பிய தொழில் கிட்ட, சென்றவர்கள் தேடிவர, முன்வினை தோஷம் கரும தோஷம் செவ்வாய் தோஷம் பரிகாரம் செய்து கொள்ள, குழந்தை பேறு கிட்ட, அதிஸ்டகல் மோதிரம் அணிந்து கொள்ள, இன்னும் உங்கள் குறைகளுக்கு நேரில் என்னை சந்தித்து ஆலோசிக்கவும். (வெள்ளி ஞாயிறு கிழமை தவிர்த்து)

(8) இன்னும் அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே! பிழைத்தது இல்லை நடந்தது நடக்கபோவது, நடக்க இருப்பது, எத்தனையாம் திகதி திருமணம், எத்தனை மணிக்கு எத்தனையாம் திகதி பிரயாணம், எத்தனையாம் திகதி-எண்ணியது நடக்கும், சரிவருமா? சரிவராதா? என்பது இத்தனையாம் திகதி சரிவந்து விடும், என்று அறிந்த தெரிந்து செயல் பட முன்னறிவித்தலுடன் என்னை சந்திக்கவும்.

(9) தொலைபேசியில் விளக்கம் பெற விரும்புவோர் எனது சிரேஸ்ட தெளிவுரையாளர் சிவா விடம் நேரத்தை ஒதுக்கி கொண்டு தெளிவு பெறலாம் அணைத்து தொலை பேசிக்கும் எம்மிடம் (C.L.I) உண்டு வெளிநாட்டவருக்கு விஷேட தொலைபேசி வசதியுண்டு.

**உலக மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி**

**பேராசிரியர் டாக்டர் P.K. சாமி (J.D.G.A.N.) J.P.**

ஸ்ரீ துர்க்கா தேவி மாந்திரிக உச்சாடன பீடம் 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு - 13.
தொலைபேசி (CLI) :- (0094 -11)- 2342463,2342464,2470615,2449110, 2431137, 4616331, 4616127, 46131124, 4613133, Fax: 2344831
Mobile :- +0094 777-588405 E-mail:- drpksamy@sltnet.lk web:- www.drpksamy.com, www.gangatharan.com

கிளைகள் } நுவரெலியாவில் (P.T.R ஐயாவை சந்தியுங்கள்) ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம் 33, கண்டி வீதி, தொ.பே: 0094-052-2222508/4490031/2223093
வெள்ளவத்தையில் 107/B, காலி வீதி, கொழும்பு-06. தொ.பே :- 0094 -11- 2552485

# இன்னொருவர் பார்வையில்



"அவர்களின் அமைதியும் கொல்கிறது" என்ற தலைப்பில் 'த ஐலண்ட்' பத்திரிகை கடந்த 25ஆம் திகதி வெளியிட்ட ஆசிரியத் தலையங்கம் இது.

யுத்தம் ஆட்களைக் கொல்லும் என்பது உண்மையே. யுத்தம் இல்லையென்றாலும் ஆட்கள் கொல்லப்படலாம் என்பது முரண்பாடான கூற்று என்றாலும் அதுவும் உண்மையே. இலங்கையில்

## ஊமைகளாகி நிற்கும் உதவி வழங்கும் நாடுகள்

நிலவும் இந்த நிலைமை சுட்டிக்காட்டப்படத்தக்க ஒரு விடயமாகும். சகல விதமான படுகொலைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்பது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் உறுதியான இலக்குகளில் ஒன்றாகும். ஆயினும் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், மேலாதிக்கத்துக்காகப் போராடும் வன்னிப் புலிகளினதும், கிழக்குப் புலிகளினதும் கைகளால் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த இரு குழுக்களுமே ஒரு கொலையாவது செய்யாமல் ஒரு நாள் கூடக் கழிந்ததில்லை. புலிகள் இயக்கத்துக்குள் பிளவு ஏற்பட்டு கிழக்குப் புலிகள் தோற்றம் பெறுவதற்கு முன்னரும் படுகொலைகள் பல இடம்பெற்றுள்ளன.

இப் படுகொலைகள் இலங்கை வாழ் தமிழர்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளதால், இவை குறித்து விசாரணை நடத்துமாறு அரசாங்கத்தையும் புலிகள் இயக்கத்தையும் நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு' கோரியுள்ளது. பயங்கர மோதல்களுக்கு மத்தியில் சிக்கியுள்ள அப்பாவி மக்களின் நிலை குறித்து வேதனை அடைந்துள்ளதாலேயே இக் கோரிக்கையை அந்த அமைப்பு விடுத்துள்ளதென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால் இப்படுகொலைகள் குறித்து விசாரணைகள் நடத்துமாறு புலிகளையும் கோரியிருப்பது, கொலையாளியின் வழக்கை விசாரிப்பதற்கு கொலையாளியையே நீதிபதியாக நியமிப்பதைப் போன்ற முட்டாள்தனமான கோரிக்கையாகும்.

தாக்கிவிட்டுத் தப்பியோடும்போது அல்லது கண்ணிவெடித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும்போது இடம்பெறும் கொலைகள் குறித்து அரசாங்கத்தினால் பெரிதாக ஒன்றும் செய்ய முடியவில்லை. இக் கொலைகளில் சில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் இடம்பெற்றுள்ளன. எவ்வாறெனினும் கிழக்கில் வன்னிப் புலிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. வன்னிப் புலிகளோ அல்லது கிழக்குப் புலிகளோ ஆணைக்குழு முன் வந்து சாட்சியமளிக்கத் தயாரில்லாததால் இந்த விசாரணை அர்த்தமற்றுப் போய்விடக்கூடிய நிலையில் உள்ளது. இலங்கை அரசாங்கம் இப் படுகொலைகள் குறித்து காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை என்ற மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் அவதானிப்புக்கு எந்தவித ஆதாரமும் இல்லை. விசாரணைகள் நடத்தப்பட்டு, கொலையாளிகள் உத்தியோகபூர்வமாக இனங்காணப்பட்டாலும், வேறொன்றும் செய்யமுடியாது. மறுபுறத்தில் வெறுமனே உண்மையைக் கண்டறியும் விசாரணைகளை நடத்துவது நிதி, சக்தி, நேரம் ஆகியவற்றை வீணடிக்கும் செயலாக அமையும்.

"கிடைக்கக்கூடிய சாட்சியங்கள் இப் படுகொலைகளில் பெரும்பாலானவற்றுக்கு வன்னிப் புலிகளே பொறுப்பென்று காட்டுகின்றன. கொலையுண்ட பலருக்கு, கொலை செய்யப்படுவதற்கு முன்னதாகவே கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சந்தர்ப்ப சூழ்நிலைகளை வைத்துப் பார்க்கையில், கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் புலி இயக்க எதிர்ப்பாளர்கள்" என்று கூறும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு, கொலையாளிகள் யாரென ஏற்கனவே தெரிந்துவிட்ட நிலையில் உண்மையைக் கண்டறியும் விசாரணைகள் நடத்துமாறு கூறுவது அர்த்தமற்றதாகும். சில கொலைகளுக்கு கருணா அணியினரே பொறுப்பென்று இந்த அமைப்பு சரியாகவே கண்டனம் தெரிவித்திருக்கிறது.

யார் கொலையாளிகள் என்பதை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்திருக்கும் இந் நிலையில், அவர்கள் குறித்து நாம் என்ன செய்யப் போகிறோம்? சமாதான முன்னெடுப்புகளுக்கு அனுசரணையாளர்களாகச் செயற்படுகிறோம் என்ற போலியான போர்வையின் கீழ் இலங்கையின் உள்விவகாரங்களில் வெளிநாட்டுத் தலையீடு மேற்கொள்ளப்படுவதால் அரசாங்கம் சக்தியற்று இருக்கிறது. இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்களில் ஏற்படக்கூடிய முன்னேற்றத்தோடு வெளிநாட்டு உதவி பிணைக்கப்பட்டுள்ளது. எனவே புலிகளைப் பாதிக்கக்கூடிய எதனையும் செய்வதற்கு அரசாங்கம் முன்ஜாக்கிரதையோடு நடந்து கொள்கிறது. சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியெனக் கூறப்படும் பிரதேசத்தில் ஆயுதங்களோடு ஆறு புலி உறுப்பினர்களைப் பொலிஸார் கைது செய்தனர். பின்னர் அவர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

இலங்கையின் பீனல் கோர்ட் சட்டத்தின்படி சட்ட விரோதமாகச் சுடுகலன்களை வைத்திருப்பது பிணை பெறமுடியாத குற்றமாகும். ஆனால் தமது உறுப்பினர்கள் விடுவிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி இரு சிப்பாய்களைப் புலிகள் கடத்திச் சென்றனர். அரசாங்கம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை பாதிக்கக்கூடிய எதனையும் செய்யக்கூடாதென்ற அழுத்தத்திற்கிணங்க விட்டுக் கொடுத்தது. புலி உறுப்பினர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இதற்குப் பதிலாக இராணுவத்தினர் விடுவிக்கப்பட்டனர். இதன் மூலம் பிழையான முன்னுதாரணமொன்று ஏற்படுத்தப்பட்டது. இந்த நாட்டில் சட்டத்தை மீறுபவர்களைக் கையாளுவதற்கு அரசாங்கம் கொண்டிருந்த செயல்திறன் இதுதான்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்கள், பொலிஸாரைப் போன்று செயற்படுவதற்கு ஆணையைக் கொண்டிராததால் அவர்கள் வக்கற்றிருக்கின்றனர். அவர்கள் செயற்பட்டாலும் கூட, வன்னிப் புலிகளுக்கு அவர்கள் சாதகமாக இருப்பதால், அவர்களால் சுதந்திரமாகச் செயற்பட முடியாது. அவர்களால் செய்யக்கூடியதெல்லாம் வெறுமனே புள்ளிகளைக் கணிப்பீடு செய்து, ஒப்பந்தத்திற்கிணங்க நடந்து கொள்ளுமாறு சகல தரப்பினரையும் வற்புறுத்துவது மட்டும்தான். யுத்த நிறுத்த மீறல்கள் குறித்து எவருமே அக்கறை செலுத்துவதில்லை. சர்வதேச சமூகம் "தீயதைக் கேட்காதே; தீயதைப் பார்க்காதே; தீயனவற்றைச் சொல்லாதே" என்ற பழமொழியில் வரும் மூன்று குரங்குகளைப் போல் நடந்துகொள்கிறது.

எனவே கொலையாளிகளைத் தடுக்க முடியாது. தமது விருப்பு வெறுப்புக்கேற்ப அவர்கள் எதிரிகளைக் கொன்று விடுகிறார்கள்.

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பும், ஏனைய மனித உரிமைகளுக்கான பாதுகாப்பு அமைப்புகளும் புலிகள் மீது கடதாசிப் பந்துகளை வீசுவதை விடுத்து அதற்கும் அப்பால் செயற்பட வேண்டும். இலங்கை மக்களைப் பாதுகாப்பதற்கும் இங்கு நீடித்த சமாதானம் ஒன்று ஏற்படவேண்டுமென்றும் அவர்கள் விரும்பினால், 'வன் செயல்களைக் கைவிட வேண்டுமென்று புலிகளுக்கு உதவி வழங்கும் நாடுகள் அழுத்தம் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டும்'. சில வாரங்களுக்கு முன்னர் சின்-பெய்ன் இயக்கத் தலைவர் ஜெரி அடம்ஸ்"க்கு வெள்ளை மாளிகை தனது கதவை அடித்து மூடிக்கொண்டது.

ஜனாதிபதி புஷ், ஜெரி அடம்ஸ"க்குக் கொடுத்த மருந்து காரியசித்தியுள்ளதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இப்போது அடம்ஸ் வன்செயலைக் கைவிடுமாறு ஐ.ஆர்.ஏ.யை வலியுறுத்தி வருகிறார். சிந்தனைக்குரிய ஒன்றல்லவா இது?

# பாவிகளுக்குப் புனித காவி போர்த்தும் (சு)தந்திர ஊடக அமைப்பு

## சமாதானமும் மக்களைக் கொல்லும்

**இலங்கையின் வடக்கு, கிழக்கில் இடம்பெறும் பயங்கரமான படுகொலைகளின் தாக்கம் தமிழ்ப் பத்திரிகையாளர்களின் உயிருக்கே உலை வைக்கும் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. பலர் புனை பெயருக்குள் மறைந்து நின்று எழுத வேண்டிய அளவுக்கு மரண அச்சுறுத்தல் ஆதிக்கம் செலுத்துகிறது. இலங்கையில் 'சுதந்திர ஊடக இயக்கம்' என்று தன்னை அழைத்துக் கொள்ளும் அமைப்பு, என்றுமே சுதந்திரமாகச் செயற்பட்டதில்லை, செயற்படுவதுமில்லை. பக்கச்சார்பாகவே பார்வையைச் செலுத்துகிறது என்பதை அம்பலப்படுத்தி 'ஆசியன் ட்ரிபியூன்' வெளியிட்ட அறிக்கை இங்கே தரப்படுகிறது. அத்துடன் இலங்கைத் தமிழ் அரசியல் தரப்பில் இடம்பெறும் அடாவடித்தனமான படுகொலைகள் குறித்து நியூயோர்க்கில் இயங்கிவரும் மனித உரிமைகளுக்கான கண்காணிப்பு அமைப்பு கடந்த 24ஆம் திகதி விடுத்த அறிக்கையும், அந்த அறிக்கையை விமர்சித்து மறுநாள் 25ஆம் திகதி 'த ஐலண்ட்' என்ற ஆங்கிலப் பத்திரிகை எழுதிய ஆசிரியர் தலையங்கமும் இங்கே தரப்படுகின்றன.**

கொலை அச்சுறுத்தலுக்கும் மரண பீதிக்கும் மத்தியில் வாழும் தமிழ்ப் பத்திரிகையாளர்களின் பரிதாப நிலை குறித்துப் பக்கச் சார்பாகவும், பாரபட்சமாகவும் சுதந்திர ஊடக அமைப்பு அறிக்கை வெளியிட்டதாக விமர்சித்து 'ஆசியன் ட்ரிபியூன்' வெளியிட்ட அறிக்கை கீழே தரப்படுகிறது.

இலங்கையில் பத்திரிகையாளர்கள் எதிர்கொள்ளும் ஆபத்துக்களைச் சுட்டிக் காட்டி சுதந்திர ஊடக இயக்கம் தனது பிந்திய அறிக்கையை வெளியிட்டுள்ளது. பத்திரிகையாளர்கள் தமது கடமைகளைச் செய்யும்போது எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள், மரணம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு இந்த அறிக்கையில் விபரமான ஆய்வுகள் வெளியிடப்பட்டுள்ளன. ஈடாட்டமான சமாதான முயற்சிகளுக்கு மத்தியில் பெரும்பாலான அத்துமீறல்களில் புலிகளே ஈடுபட்டுள்ளனரென்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. இந்த அத்துமீறல்களுக்குள் இலங்கையிலுள்ள பத்திரிகையாளர்கள் சிக்கியுள்ளனர். வெளிநாட்டு நிதிகளைப் பெறும் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களைப் போன்று, சுதந்திர ஊடக இயக்கமும் தென்னிலங்கையிலுள்ள தீவிரவாத சிங்களக் குழுக்களைக் குற்றஞ்சாட்டுகிறது. "நாட்டின் தென்பகுதியிலுள்ள சிங்களத் தீவிரவாதக் குழுக்கள் சமாதான முன்னெடுப்புகளுக்கும், இனப் பிரச்சினைக்கு ஜனநாயக ரீதியாகவும் பேச்சுவார்த்தைமூலமும் தீர்வு காண்பதற்கான சாத்தியங்களுக்குப் பாரிய அச்சுறுத்தலாக விளங்குகின்றன" என்று சுதந்திர ஊடக இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

புலிகளின் யுத்தநிறுத்த் மீறல்கள் பற்றி நியாயபூர்வமாக எதனையும் குறிப்பிட்டு பாரபட்சமற்ற முறையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்வில்லை. "நாட்டின் தென் பகுதியிலுள்ள தீவிரவாத சிங்கள அரசியல் குழுக்களென" சுதந்திர ஊடக அமைப்பினால் வர்ணிக்கப்படுபவை ஜனநாயக சமூக அமைப்பொன்றில் உத்தரவாதப் படுத்தப்பட்ட தமது அடிப்படை உரிமைகளை (அது எவ்வளவுதான் மீறப்பட்டாலும்) தமது எதிர்ப்பைக் காட்டுவதற்காக அவர்கள் பிரயோகிக்கிறார்கள். ஆனால், ஜனநாயக மரபுகளுக்குப் புறம்பாக செயற்படும் புலிகளின் படுமோசமான வன்செயல்கள் இந்த அறிக்கையில் பாரபட்சமற்ற முறையில் குறிப்பிடப்படவில்லை. தமிழ் மக்களினதும், சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழரினதும் அடிப்படை உரிமைகளை மீறி, அதனூடாக தனது அரசியல் மற்றும் இராணுவ தளங்களை விஸ்தரிக்கும் நடவடிக்கைகளுக்காக சகோதரப் படுகொலையில் ஈடுபடும் புலிகளின் அத்துமீறல்களை சுதந்திர ஊடக அறிக்கை சுட்டிக் காட்டவில்லை.

புலிகளின் தனிமனித அதிகாரக் கோட்பாட்டாளர், ஏனைய தமிழ் போராளிகளைப் போல் ஜனநாயக நீரோட்டத்தில் இணையும் போதுதான் "சமாதான முன்னெடுப்புகளுக்கான பிரதான அச்சுறுத்தல் இல்லாமல் போவதோடு இனப் பிரச்சினைக்கு ஜனநாயக ரீதியில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணக்கூடிய சாத்தியம் ஏற்படும்" என்று அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

இலங்கை அரசியலில் பிரபாகரனின் காலகட்டத்துக்கு முன்னைய காலத்தில் நிலவிய கருத்துச் சுதந்திரம், செயற்பாட்டுச் சுதந்திரம் ஆகியவற்றை அனுபவிக்க வேண்டும் என்று கோரும் தமிழர் சமூகத்தின் இந்த ஏகக் கோரிக்கை குறித்து சுதந்திர ஊடக அறிக்கை சுட்டிக் காட்டத் தவறி விட்டது.

சுதந்திரத்திற்காக குரல் எழுப்பும் அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக எழுந்து நிற்கத் தயங்கியமை சுதந்திர ஊடக இயக்கத்தின் பக்கச்சார்பான மனோபாவத்தைச் சுட்டிக் காட்டுகிறது. இதனால் தான் தனது அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்புடையதற்ற உண்மைகளை சுதந்திர ஊடக இயக்கம் மூடி மறைக்கிறது. கருத்துச் சுதந்திரத்தை யார் அடக்கினாலும், அது அரசாங்கமாக இருந்தாலென்ன அல்லது அரசோடு சம்பந்தப்படாத அமைப்பாக இருந்தாலென்ன எவ்வித வித்தியாசமுமின்றி அவற்றை நாம் கண்டிக்கிறோம். மிகக் கொடூரமான புலி முகவர்களிடமிருந்து கூடுதலான கருத்துச் சுதந்திரத்தை வேண்டி நிற்கும் தமிழர்களின் துயரநிலை குறித்து சுதந்திர ஊடக இயக்கம் மேலும் கவனம் செலுத்த வேண்டும். மாற்றுக் கருத்துக் கொண்ட தமிழ் பத்திரிகையாளர்கள், கல்விமான்கள் மற்றும் அரசியல்வாதிகள் தமிழர் மத்தியில் இடம்பெறும் சகோதரப் படுகொலைகளில் சிக்குவது மட்டுமல்ல, கிடைக்கின்ற முதல் சந்தர்ப்பத்திலேயே கொல்லப்படுகின்றனர் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் நன்கு அறியும். சுதந்திரமாக குரல் எழுப்பும் தமிழர்களையும், பத்திரிகையாளர்களையும் பலிவாங்கும் முறையில் கொல்வதற்கு போட்டித் தமிழ்க் கட்சிகள் தயங்குவதில்லை. புலி இயக்கத்தினரையோ அல்லது ஏனைய தமிழ்க் கட்சிகளையோ இக் குற்றச்சாட்டிலிருந்து விலக்கிவிட முடியாது.

இதற்கிடையே சுதந்திர ஊடக அமைப்பு புலிகளின் பாவங்களை மறைத்து மன்னிப்புக் கோருபவர்களாக தம்மைக் காட்டிக் கொள்ளக்கூடாது. மரணப் பயமின்றி சுதந்திரமாகத் தமிழர்கள் பேசுவதற்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதை அவர்கள் கூடியளவு வற்புறுத்த வேண்டும். "பன்முகத்தன்மையையும் விமர்சனத்தையும் ஏற்றுக் கொள்வதற்கு புலிகளை வலியுறுத்துங்கள்" என்ற எல்லைகளற்ற செய்தியாளர்களின் ஒரு வரியையும் 'ஆசியன் டரிபியூன்' சுட்டிக் காட்டியுள்ளது.

# சிவராம் உட்பட 200 பேர் கொலை

"இலங்கையில் மக்கள் கொல்லப்படுவதற்கு முடிவு கட்டப்பட வேண்டும். இலங்கை வாழ் தமிழ் மக்கள் மத்தியில் இப் படுகொலைகள் பீதியை ஏற்படுத்தியுள்ளதால், இவைபற்றி விசாரணை நடத்துவதற்கு சுயாதீன ஆணைக்குழுவொன்றினை நியமிப்பதற்கு அரசாங்கமும் புலிகளும் ஆதரவு வழங்க வேண்டும்" என்று நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டியங்கும் 'ஹியூமன்ஸ் ரைற் வோச்' என்றழைக்கப்படும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு கோரியுள்ளது. கடந்த 24ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்த அறிக்கையின் முக்கிய பகுதிகள் வருமாறு:

"அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தம் வரவேற்கக் கூடியதே. ஆனால், சிலர் தமது எதிரிகளைக் கொல்வதற்கான ஒரு சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்துகின்றனர். சகலருமே ஒரு நீடித்த தீர்வு கிட்ட வேண்டுமென எதிர்பார்க்கின்றனர். ஆனால், புலிகளுக்கு அல்லது ஏனைய குழுக்களுக்கு ஆதரவாகவில்லாமல் முரண்பட்டுக் கொள்ளும் தமிழர்களுக்கு எவ்வகையான சமாதானம் கிட்டப் போகின்றதென்ற பாரதூரமான கேள்வியை இப் படுகொலைகள் எழுப்புகின்றன.

பிரபல பத்திரிகையாளர் டி.சிவராம், இனந்தெரியாதவர்களால் கொலை செய்யப்பட்டார், அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்குப் பின்னர், வெளிப்படையாகப் பேசும் தமிழர்கள் பலர் கொல்லப்பட்டனர். இந்த நீண்ட பட்டியலில் ஒருவர் மட்டுமே சிவராம். 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் யுத்த நிறுத்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், அரசியல் காரணங்களுக்காக சுமார் 200 தமிழர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனரென்று மதிப்பிடப்பட்டுள்ளது.




இவற்றில் பெரும்பாலான கொலைகளுக்குத் தமிழ்ப் புலிகளே பொறுப்பெனக் கிடைக்கக்கூடிய ஆதாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. இவ்வாறு கொலையுண்டவர்களில் பெரும்பாலானோர் புலிகளின் எதிர்ப்பாளர்களாகக் கருதப்படுகிறார்கள். கொலைகளைப் புரிவதற்கு முன்னர் புலிகளால் அச்சுறுத்தப்பட்டமை போன்ற சந்தர்ப்ப சூழ்நிலைச் சாட்சியங்கள் இவற்றுக்குச் சான்று பகிர்கின்றன. இவற்றில் சில கொலைகளுக்குக் கருணா தரப்பே பொறுப்பு. இப் படுகொலைகள் குறித்து சர்வதேச சமூகமும், இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் கூட மௌனம் சாதிக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இப் படுகொலைகளில் தாம் எந்த வகையிலும் சம்பந்தப்படவில்லையெனப் புலிகள் மறுப்புத் தெரிவிக்கின்றனர். இலங்கை அரசாங்கம் இப் படுகொலைகள் குறித்து காத்திரமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை. வெளிப்படையாகத் தெரியும் இலக்குகளைக்கூடப் பாதுகாக்கத் தம்மால் பெரிதாக ஒன்றும் செய்ய முடியவில்லையென அரசாங்கம் கூறுகின்றது. சில படுகொலைகள் குறித்து அரசாங்கம் நடத்திய விசாரணைகளும் பயனற்றவையென நிரூபிக்கப்பட்டிருக்கிறது."

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

ஒரு புத்தனையும் சித்தனையும் கற்றுணராமலே, பட்டறிவைக் கொண்டு நாம் பல்வேறு நன்மை தீமைகளைப் பகுத்தறியலாம். காலம் கற்பிப்பதைக் கணக்கு வாத்தியார் கற்பிப்பதில்லை.

***'தப்பித்து வந்தானம்மா! - இன்று தனியாக நின்றானம்மா! - காலம் கற்பித்த பாடத்தின் அடிதாங்க முடியாமல் தப்பித்து வந்தானம்மா!'***



அடடா! என்ன அற்புதமான பாடல் இது!

ஆம், எதுவும் ஆகுநாளன்றி ஆகா எனும் உண்மையை எனக்குக் காலம்தான் கற்பித்து. முயன்றாலும் முயலாவிடினும், நிகழும். நாள் வரும்போதுதான் எதுவும் நிகழும் நிகழ்த்துவது இறைவனாக இருப்பதால், நாளும், தேதியும் நாம் குறித்து நிகழுமா எதுவும்? எந்த வாய்க்காலை எப்போது வகுப்பது என்பது வல்லான் மட்டுமே அறிந்த விஷயம்.

பாரதி பாடுகிறான் : 'கண்ணன் என் அரசன்' என்னும் பாடலில், 'சக்கரம் எடுப்பது ஒருகணம்; ஆங்கே, தருமம் தழைப்பது மறுகணம். இந்த இரண்டு கணங்களுக்கிடையே இன்னொரு கணமுண்டோ' என வியக்கிறான் அந்த வரகவி.

நமக்கு நல்ல காலமே வாரதே! என நான் நொந்தும் வெந்தும் போனேன். FAG END என்று சொல்லுவார்களே, அதுபோல் நம்பிக்கை முக்காலே மூணு வீசும் பொசுங்கிப் புகைந்து சாம்பலாகி, சொச்சமும் மிச்சமும் நெஞ்சில் ஒட்டிக் கொண்டிருக்கும் வேளையில், முக்தா ஃபிலிம்ஸ் மூலமாகக் கடவுள் என்னைக் கை தூக்கிவிட்டான்.

'இன்றோடு உன் தரித்திரம் விடிந்தது' என்று முக்தா சொன்னது முக்காலும் மெய்யாயிற்று.

1963 ஜனவரி ஒன்றாம் தேதி சோற்றுக்கு வழியில்லை; ஜனவரி 31 தேதி, சோறு தின்னப் பொழுதில்லை.

இந்த அதிசயம் எவரால் நிகழும்? எவ்வாறு நிகழும்? ஆயினும், இதை நிகழ்த்திக் காட்டினான் நான் வணங்கும் கந்தவேள்.

அப்போது நான் எழுதிய பாட்டை இப்போது சொல்கிறேன்.

***'தாய்க்குள்ளிருந்து புறப்பட்டேன்; தரை தவழ்ந்தேன்; தாய் தந்தை நோய்க்குள் விழுந்து போனார்கள்; நொடித்துப் போய் நானிலத்தார் வாய்க்குள் விழுந்து புறப்பட்டேன்; வருந்துங்கால் வந்து இந்த நாய்க்குள் புகுந்து நலஞ்செய்தாய் நான் வணங்கும் கந்தவேளே!'***

ஆம்! கந்தவேள் கந்தனாக வராமல், விஸ்வநாதனாக வந்து வாழ்வளித்தான். மெல்லிசை மன்னர் விஸ்வநாதன் அண்ணனைத்தான் சொல்லுகிறேன்.

முக்தா ஃபிலிம்ஸில் விஸ்வநாத அண்ணனோடு பணிபுரிந்த முதல் நான் இரவே, என்னைத் தேடி இன்னொரு கம்பெனிக் கார் வந்தது; மறுநாள் மற்றொரு கம்பெனிக் கார் வந்தது.

'பச்சை விளக்கு' படத்திற்குப் பாட்டெழுத பீம்சிங்கின் உதவியாளர் சடகோபன் வந்து கூப்பிட்டார்.

அத்துணை கார்களையும் விஸ்வநாத அண்ணன்தான் அனுப்பி வைத்தார்

ஒரு மனிதனுக்கு வறுமை வந்தாலும் வரிசையாக வருகிறது. வாழ்வு வந்தாலும் வரிசையாக வருகிறது. பருவங்களைப் போல் இவை மாறிமாறி வருவது ஒரு சிலரது வாழ்க்கையிலே வேண்டுமானால் நிகழலாம்.


முன்வினை என்னும் பதிவேட்டில், பாவக்கணக்கு முடிந்தவுடன் புண்ணியக்கணக்கு தொடருகிறது.

என் புண்ணியக் கணக்குக்கான Pass Book ஐ எம்அபருமான் முருகன் எம்.எஸ் விஸ்வநாதன் மூலம் என்கையில் சேர்த்தான். விஸவநாதன் - ராமமூர்த்தியோடு நான் பணியாற்றத் தொடங்கிய உடனேயே, கோடப்பாக்கம் என்னை கவனிக்கத் தொடங்கிவிட்டது.

(தொடரும்.......)

---

**உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....**




**CIAவிற்கு** அரசாங்கம் அளிக்கிற நிதியுதவியைக் கட்டுப்படுத்த அமெரிக்க அரசியல் அமைப்பில் தெளிவான சட்டம் எதுவுமில்லை. இதை எல்லாம் கண்காணிக்கும் அதிகாரம் படைத்த காங்கிரஸும் காலப்போக்கில் எதையும் கண்டு கொள்ளாத நிலையினை மேற்கொள்ளத் தொடங்கியது.

1947இல் CIA உருவானபோது அதன் வேலைகளாகக் கீழ்க்கண்டவை சொல்லப்பட்டன:

1. தேச பாதுகாப்புப் பற்றியும் அரசாங்க அலுவல்கள் பற்றியும் என்னென்ன இரகசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது பற்றி தேசிய பாதுகாப்புக் கவுன்ஸிலுக்கு ஆலோசனை வழங்குவது.

2. இந்த நடிவடிக்கைகளை எவ்வாறு ஒருங்கிணைப்பது எனத் தேசிய பாதுகாப்புக் கவுன்ஸிலுக்குத் தேவையான சிபாரிசுகளைச் செய்வது.

3. கிடைக்கின்ற தகவல்களை ஒப்பிட்டுப் பார்த்து, சரிபார்த்து தேவையான தகவல்களை மட்டும் பிரித்தெடுத்து அரசாங்கத்திற்குக் கொடுப்பது.

4. ஏற்கனவே செயல்படுகின்ற உள்நாட்டு உளவு நிறுவனம் (FBI) மேலும் திறமையாகச் செயல்பட உதவுவது.

5. தேசிய பாதுகாப்புக் கவுன்ஸில் மேற்கொள்ளுகின்ற முடிவுகள் செம்மையாக நிறைவேற்றப்படுவதற்கு ஒத்துழைப்புக் கொடுப்பது.

ஐந்தாவதாகச் சொல்லப்பட்டுள்ள விடயம் ராஜதந்திரமானது. உள்நாட்டுப் பாதுகாப்புக்கென FBI செயல்பட்டுக் கொண்டிருக்கும் நிலையிலும் அதே காரியத்தில் CIAவும் தலையிட இந்த ஐந்தாவது பகுதி உரிமையளிக்கிறது.

### CIA செயல்முறை

CIA தனது ஆதரவாளர்களைப் பல நாடுகளிலிருந்தும் திரட்டுகிறது. இவர்கள் பல்வேறு துறைகளிலிருந்தும் திரட்டப்படுகிறார்கள். குறிப்பாக இந்தியாவின் மிகப் பெரிய பத்திரிகையாளர்களுக்கு CIA நிதியுதவி அளித்து, தங்களுடைய ஆதரவாளர்களாக ஆக்கி வைத்திருக்கிறது என்பது ஒரு நீண்ட காலக் குற்றச்சாட்டு. அதைப் போலவே விஞ்ஞானிகள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசுத்துறைச் செயலாளர்கள் ஆகிய பலரும் CIA ஆதரவில் செயல்படுவதாகவும் சொல்லப்படுவதுண்டு. ஒரு சமயம் பிலுமோடி என்கிற பாராளுமன்ற உறுப்பினர் "நான் ஒரு CIA ஏஜென்ட்" என்கிற பேட்ஜை குத்திக் கொண்டு பாராளுமன்றக் கூட்டத்திற்கு வந்தார். CIA நடவடிக்கைகள் பற்றி அப்போது பாரதப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி அடிக்கடி பேசி வந்ததற்கு எதிர்ப்புக் காட்டும் வகையில் அவர் இதைச் செய்தாராயினும், இது ஒரு கோமாளித்தனமான நடவடிக்கையாகவே இருந்தது. ஆனால் இந்தியாவிலுள்ள பல்வேறு துறைகளிலும் CIA ஊடுருவி இருப்பதை அலட்சியப்படுத்துவதற்கில்லை.

CIA திறமையான உளவு ஸ்தாபனம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர்களும் சில சமயங்களில் தவறுகள் செய்து ஏமாற்றமான முடிவுகளுக்கு வருவதுண்டு.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

---

# உலகை வசீகரிக்கும் ரோபோ யுவதிகள்

மனிதர்களின் அதிகாரங்கள் ரோபோக்களின் கைகளுக்கு மாறினால் மனிதனின் நிலைமை என்னவாகும்? ஆமாம், அப்படி ஒரு நிலை தோன்றி வருகிறது.

புதிய தொழில்நுட்பத்துடன், மனிதர்களால் மேற்கொள்ளப்படக் கூடிய அனைத்து கருமங்களையும் ரோபோக்கள் செய்து வருகின்றன.

இந்த நிலையில் மனிதர்களால் மேற்கொள்ளக் கூடிய காரியம், அனைத்து கடமைகளையும் ரோபோக்களிடம் ஒப்படைத்துவிட்டு, வெறுமனே உட்கார்ந்து கிடப்பது மாத்திரம்தான்.

புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய கருவிகள்



பெரும்பாலும் ஜப்பானிய தயாரிப்புகளாக உருவாக்கப்பட்டு வருகின்றன. இதனால் தற்போதுள்ள தலைமுறையினர்க்கு ரோபோக்களுடன் இணைந்து செயற்படக் கூடியதொரு நிலை தோன்றியுள்ளது. குறிப்பாக ஜப்பானிய தாய்மார்களுக்கு பெரும் தலையிடியாக இருந்து வரும், தங்களது குழந்தைகளைப் பராமரிப்பது தொடர்பில் தற்போது ரோபோக்களின் உதவிகள் பெறப்படுகின்றன.

தனது 3 வயது குழந்தையைப் பராமரிக்கும் பொறுப்பை ரோபோ தாயிடம் ஒப்படைத்துள்ள நொரிக்கோ எனும் மனிதத் தாய், அந்த ரோபோத் தாய் பற்றி இப்படிக் கூறுகின்றார்.

குழந்தைகளின் தேவைகளை இனங்கண்டு அதன்படி செயற்படுகின்றது. கொஞ்சும் வார்த்தைகளைக் கொண்டு பேசி, குழந்தையை அணைத்து முத்தமிட்டு, அரவணைத்துக்கொள்கின்றது. அத்துடன், குழந்தை நித்திரை கொண்டதன் பின்னர் அது என்னுடன் பேசி, பொழுதைப் போக்குகின்றது. இவ்வனைத்து செயற்பாடுகளையும் பார்க்கும்போது ரோபோ தாய் ஓர் உண்மையான தாயைவிட திறமையாகச் செயற்படுகின்றது.

உலக விஞ்ஞானிகளின் அவதானங்கள் இப்போது மனித உயிர்களைப் பணயம் வைக்கக் கூடிய வகையிலான நடவடிக்கைகளில் ரோபோக்களைப் பயன்படுத்துவது தொடர்பில் செலுத்தப்பட்டு வருகின்றன. அதாவது யுத்த நடவடிக்கைகள், ஆழ் கடல் ஆய்வுகள் மற்றும் பயங்கர விபத்துக்களின் போது உதவுவது போன்ற செயற்பாடுகளிலும் ரோபோக்களைப் பயன்படுத்த அவர்கள் முயன்று வருகின்றனர்.

கடந்த இரு தசாப்தங்களுள் கைத்தொழில் சார்ந்த தேவைகளுக்காக ரோபோக்களை உருவாக்கும் முயற்சியில் ஜப்பானிய தொழில் நுட்பம் வெற்றி கண்டுள்ளது. இதனிடையே இப்போது சமூகத் தொடர்புகளைக் கொண்ட வகையிலான ரோபோக்களை உருவாக்குவதில் ஜப்பானிய தொழில்நுட்பம் ஈடுபட்டு வருகின்றது.

அதுமட்டுமல்லாது, அன்றாட வாழ்க்கையில் அடிக்கடி ஏற்படக்கூடிய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளக் கூடிய ரோபோக்களை அறிமுகம் செய்வதும் அவர்களது ஒரு நோக்கமாக இருக்கின்றது.

ரோபோக்களை இவ்வகையில் அறிமுகம் செய்வதன் மூலம், கைத்தொழில்துறை சார்ந்த பிரச்சினைகள் குறைந்து, மனித செயற்பாடுகளுக்கான எல்லையற்ற வசதிகள் கிட்டும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதே நேரம் மனிதர்களைப் போலல்லாது எந்நேரமும் சுறுசுறுப்பாக ரோபோக்களால் செயற்பட இயலும். ஆகவே, உணர்ந்து செயற்படாத மனிதர்களைவிட, உணர்வுடன் உரிய நடவடிக்கைகளை ஒழுங்காக மேற்கொள்ளக் கூடிய ரோபோக்கள் மேலானவை என்ற கருத்தும் ஆய்வாளர்களிடையே காணப்படுகின்றன.

இதே நேரம் இந்த ரோபோக்களால் பெரும்பாலான மொழிகளில் கருமமாற்ற இயலும் என்பதால், தொழில்சார்ந்த குறைபாடுகளையும் மிக இலகுவாகவே கண்டு பிடித்துக் கொள்ளவும் முடியும்.

இதனடிப்படையில் கடந்த மார்ச் மாதம் தொடங்கி செப்டெம்பர் மாதம் வரை நடைபெறுகின்ற உலக 'எக்ஸ்போ' வர்த்தக கண்காட்சியின் போது விருந்தினர்களை வரவேற்கும் பொறுப்பு ரோபோ யுவதிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது 'ரோபோ' வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும்.

மிகுந்த அழகான தோற்றத்தைக் கொண்டுள்ள இந்த ரோபோ யுவதிகள், விருந்தினர்கள் கேட்கின்ற அனைத்துக் கேள்விகளுக்கும் நட்பு முறையில் பதிலளிக்கும் திறனைப் பெற்றுள்ளன.

"Actroid" என்ற பெயரில் அழைக்கப்படுகின்ற இந்த ரோபோ யுவதிகள் ஆங்கில, ஜப்பானிய, கொரிய மற்றும் சீன மொழிகளில் கருமமாற்றுவதில் மிகுந்த திறமை கொண்டுள்ளனர்.


இந்த ரோபோ யுவதிகள் கண்களைச் சிமிட்டி சிரித்துக் கொண்டே நிஜப் பெண்களைப் போலவே செயற்படுவதால் 6 மாத காலமாக நடைபெறுகின்ற இந்த கண்காட்சியானது மிகுந்த ஈர்ப்பினை ஏற்படுத்தக் கூடுமென அதன் அமைப்பாளர்கள் கருதுகின்றனர்.

இதே நேரம் இந்தக் கண்காட்சிக்கு வருகை தருகின்ற பிரதம விருந்தினர்களை வரவேற்று அழைத்துச் செல்வதற்காகவும் விஷேடமான ரோபோ குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ரோபோக்கள் தங்களது செயற்கை உறுப்புகளின் துணைகொண்டு இசைக் கருவிகளை இசைப்பதைப் பார்க்கும்போது அது மிகுந்த ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறது.

என்னதான் இருந்தாலும் மனித உழைப்புக்கு பதிலாக இவ்வாறான கடமைகளில் செயற்திறனுடன் கூடிய ரோபோக்களை மக்கள் தொடர்பாடல்களுடன் கூடிய விடயங்களில் பயன்படுத்துவதானது மிகுந்த பயனைக் கொண்டு தருவதாகவே விமர்சகர் கூறுகின்றனர்.

இந்த வகையிலான ரோபோ பெண்களின் உடல் பகுதிகளை எடுப்பாகவும், மென்மை கொண்ட தோற்றத்துடனும் காட்டுவதற்காக ஒருவகை சிலிக்கன் இரசாயனம் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் மென்மையான இதங்களை வெளிக்கொணரக் கூடிய உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதே நேரம் காண்போர் இதயங்களைக் கவரக் கூடிய அழகான உரையாடல்களை வெளிப்படுத்துகின்றன. இவை



யெல்லாம் இணைந்து மனித வர்க்கத்திற்கே சவால் விடுவதாக விமர்சகர்கள் கூறுகின்றனர்.

இவை மட்டுமல்ல, பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் நடவடிக்கைகளிலும் இப்போது ரோபோக்கள் ஈடுபடுத்தப்படுகின்றன.

தற்போது ஆரம்ப வகுப்புகளில் கல்வி கற்பிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற இந்த ரோபோ பெண்கள், மாணவ, மாணவியர்களது பெயர்களை, கூறி அழைத்து, அவர்களுடன் தனித்தனியாக நட்பு ரீதியில் அளவலாவுகின்றன.

இந்த நிலையில் நிஜ ஆசிரியைகளை விட மாணவர்கள் இந்த ரோபோ ஆசிரியைகளின்பால் அதிகமான விருப்பம் கொண்டுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஜப்பான் ஆரம்ப காலத்தில் அறிமுகம் செய்து வைத்த கார்ட்டூன் ஓவியங்கள் தற்போது உலகம் முழுவதிலுமுள்ள பிள்ளைகளிடையே மிகுந்த அன்புக்குப் பாத்திரமானவையாக உள்ளன. இதே போன்றே, ஜப்பான் தற்போது அறிமுகப்படுத்தியுள்ள புதிய ரோபோ பெண்களும் வயது வித்தியாசமின்றி எல்லோர் மத்தியிலும் அன்புக்கும் கௌரவத்துக்கும் பாத்திரமாகக் கூடும் என்றே விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

-பாரூக்

# எந்த அளவையால் அளக்கிறீர்களோ, அந்த அளவையால்

## உங்களுக்கும் அளக்கப்படும்! ஏடு இட்டோர் இயல்

கொலைகளைக் கண்டு ஆனந்தக் கூத்தாடுகின்ற கூட்டம் திடீரென்று வயிற்றிலும் மார்பிலும் அடித்துக் கொண்டு குய்யோ முறையோ, இந்த அநீதியைக் கேட்பாரே இல்லையா என்று மண் அள்ளித் திட்டாத குறையாக ஒப்பாரி வைக்கிறது. அடுத்தடுத்து தினசரி அங்குமிங்குமாய் கொலைகள் நடக்கும் போது, அவையெல்லாம் 'உயிர்களல்ல' என்ற நினைப்பில் 'ஆகா, துரோகிகள் அழிகின்றனர், இலட்சியத்திற்கான தடைகள் நீங்கி தமிழீழம் மலர்ந்து விடும், தலைவரின் கனவு மெய்ப்படும்' என்று மகிழ்ந்தவர்களுக்கு தராக்கி சிவராமின் கொலை, கௌசல்யனின் கொலைக்குப் பின்னால், மனித நேயத்திற்கு எதிரானதாகவும் ஜனநாயகத்திற்கு சாவுமணியாகவும் தமிழ்த் தேசியத்துக்கு ஏற்பட்ட ஈடு செய்ய முடியாத இழப்பாகவும் தெரிந்திருக்கிறது.

இதே சிவராம் ஒரு நான்கு வருடங்களுக்கு முன்னால் கொல்லப்பட்டிருந்தால், இன்று ஒப்பாரி வைக்கின்ற இதே கூட்டம், அன்றைக்கு ஆனந்தக் கூத்தாடியிருக்கும். புலிகளின் ஊடகங்களான உலகத் தமிழரும், புலிகளின் பெயரைச் சொல்லி பிழைப்பு நடத்துகின்ற முழக்கங்களும், ஈழநாடுகளும், இன்று தூக்கிக் கொண்டாடுகின்ற இதே சிவராமை, துரோகி என்றும் அன்னிய உளவாளி என்றும் பக்கம் பக்கமாய் திட்டித் தீர்த்ததை வசதிக்காக தற்போதைக்கு மறந்திருக்கலாம். தலைவர் கூட 'பழையன கழிந்து' தற்போதைக்கு 'சிங்களப் பேரினவாதத்தின் கோட்டையில் நின்று கொண்டே, அது தமிழர் தேசத்திற்கு எதிராகப் புரிகின்ற அநீதிகளையும் அக்கிரமங்களையும் உலகிற்கு உறுதியாக எடுத்துக் கூறினார். ஆபத்துக்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்ட போதும் அஞ்சா நெஞ்சுடன் அநீதியை எதிர்த்து நின்றார்' என்று மாமனிதர் பட்டமும் வழங்கலாம்.

ஆனால் இன்றைய இந்த மாரடிப்பு எல்லாம் உண்மையாகவே, நெருங்கிப் பழகிய ஒரு மனிதன் இறந்ததற்கான துயரத்தின் வெளிப்பாடல்ல. பிணத்தில் வியாபாரம் செய்து பழகிப் போன புலியின் முதலைக் கண்ணீர்! இந்தக் கொலையைக் கொண்டு இலங்கை அரசுக்கும் கருணாவிற்கும் பாதிப்பை ஏற்படுத்துவது தான் இன்றைய இந்த மாமனிதர் பட்டமும் பிண ஊர்வல முயற்சியும்.

### அரசியல் லாபம் தேடும் புலிகள்

மாகாணசபைக் காலத்தில் ஊடகத்திற்குப் பொறுப்பாக இருந்த நடேசனைக் கைது செய்து சித்திரவதை செய்த பின்னால், அவர் புலிகளுக்கு வக்காலத்து வாங்கப் புறப்பட்ட பின்னர், கருணாவினால் கொல்லப்பட்டபோது அவருக்கு மாமனிதர் பட்டம் கொடுத்து, ஊருராய் ஊர்வலம் கொண்டு சென்றதெல்லாம் அவரது இழப்பின் துயரத்தினால் அல்ல, அதைக் கொண்டு கருணாவிற்கு கிழக்கில் இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் செல்வாக்கை உடைப்பது தான். இதே போன்றதுதான் இன்றைக்கு சிவராமுக்கு செய்யும் அதே 'இராணுவ' மரியாதைகள்!

நடேசனுக்கு புலிக் கொடி போர்த்தப் போக, அதைக் குடும்பத்தினர் தடுத்தபோது, 'புலிக் கொடி போர்த்துவதன் மூலம் அவரது நடுநிலைத் தன்மைக்கு களங்கம்' என்று தடுத்ததாக விளக்கம் சொன்ன புலிகள், இன்றைக்கு சிவராமின் மனைவி ஊர்வலத் திற்கான கோரிக்கையை நாகரீகமாக நிராகரித்த போதும், புலிக் கொடி போர்த்ததன் காரணம் சிவராமின் இழப்பின் மீதான துயரமல்ல! அதைக் காட்டி அரசியல் லாபம் தேடுவது தான்.

இயக்கத்தோடேயே வளர்ந்து இயக்கத்தின் பெயரால் கொலைகள் செய்த மாத்தையாவை துரோகி என்று இரகசியமாகக் கொலை செய்த புலிகள், ஒரு கால கட்டத்தில் புலிகளை அழிப்பதற்கு கங்கணம் கட்டிக் கொண்டிருந்த அமைப்பின் முக்கியஸ்தராகவும், பின்னால் புலிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் பத்திரிகையாளராகவும் விளங்கி, புலிகளாலேயே துரோகி என்றும், உளவாளி என்றும் குற்றம் சாட்டப்பட்ட சிவராமை மன்னித்து மறுவாழ்வு கொடுத்திருப்பார்கள் என்பது நம்பக் கூடியதொன்றல்ல.

சிவராம் 'Tiger Brand' 'தமிழ்த்தேசியத்தின்' பொழிப்புரைஞராக ஞானஸ்நானம் பெற்று பாவ மன்னிப்பு அடைந்தது, எம் பெருமான் கடைக்கண் கருணையினால் அல்ல, தமிழ்நெட் மற்றும் ஊடகங்கள் மூலமாக தங்கள் கருத்துக்களை அவர் மூலமாக வெளியில் கொண்டு வரக்கூடிய தேவையினால் எழுந்தது. வழமை போல, எல்லோரையும் பயன்படுத்திய பின்னால் குதறுகின்ற புலிகளின் பாரம்பரியத்தில் ஒரு காலகட்டத்திற்கு பயன்படுத்தப்பட்ட வர் தான் சிவராம். அந்த வசதிக்காக, புலிகள் சொன்ன 'துரோகம்' சில காலம் மறக்கப்பட்டிருந்தது. இதனால் தான் உலகத்தமிழர்களும், ஈழமுரசுகளும், முழக்கங்களும், ஈழநாடுகளும் சிவராமை மேற்கோள் காட்டவும் மறுபிரசுரம் செய்யவும் முண்டியடித்தது மாத்திரமின்றி, புலம் பெயர் புலி ஊடகங்களின் ஆஸ்தான ஆய்வாளராக, புலிகளின் Spin doctor ஆக சிவராம் மறுபிறவி எடுக்க முடிந்தது.

ஆழிப்பேரலை அழித்த பின்னால் நீண்ட காலத்தின் பின்னர் அறிக்கை, பாப்பரசர் இறந்த பின்னர் சில நாட்களின் பின்னர் அனுதாபம்... ஆனால் சிவராமுக்கு மறுநாளே மாமனிதர் பட்டம். புலிவால் சும்மா ஆடாது!

சமீபத்திய சிவராமின் எழுத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்களும் தொடர்ந்திருந்தால், இன்னும் சில நாட்களில் புலிகளே ஆனந்தக் கூத்தாடியிருக்கவும் கூடும். இன்றைக்கு இந்த மாரடிப்பு புலிகளுக்குப் பயன் தரக் கூடும் என்பதால், அரசாங்கத்திற்கு இக்கட்டான நிலையும் இராணுவத்தினால் கருணாவிற்கு கிடைக்கும் பாதுகாப்புக்கு நெருக்கடியும் வரக்கூடும் என்பதால் தான் இன்றைக்கு சிவராம் 'புனிதர்' பட்டம் பெற்றிருக்கிறார். தாங்கள் சுட்டுக் கொல்லும் போதெல்லாம் 'இனம் தெரியாதவர்களால்' என்று சொல்கின்ற புலிகள், தங்களைச் சுடும் போது மட்டும் 'இராணுவப் புலனாய்வுப் பிரிவு' என்று உடனடியாகவே கண்டுபிடிக்கின்ற மர்மத்திற்கான காரணம் இதுதான். நாட்டில் மரணங்கள் மலிவானவை மட்டுமல்ல, மர்மமானவையும் கூட!

### தம்பி சண்டைப்பிரசண்டன்

ஆயுதம் இல்லாதவர்களை, சாப்பிட்டுக்கொண்டிருந்தவர்களை, பிள்ளையோடு போனவர்களை, திருவிழாவில் நின்றவர்களை எல்லாம் பிஸ்டல் குழு மூலம் கேட்டுக் கேள்வியில்லாமல் 'இனம் தெரியாமல்' 'போட்டுத் தள்ளி' தங்களை 'அழித்தல்' கடவுளாக நினைத்துக் கொண்டு, கொலை செய்வது தங்கள் மீது சுமத்தப்பட்ட தெய்வீகக் கடமை என்று கொலையைக் கூட புனிதமாகக் கருதுகின்ற கூட்டமாகத்தான் புலிகள் இருக்கிறார்கள். மற்றவர்களைத் தாங்கள் கொலை செய்வதை நியாயப்படுத்துவது, மற்றவர்கள் தங்களைக் கொல்வதற்கான நியாயத்தை வழங்குகிறது என்ற உண்மை இதுவரை காலமும் புலிகளுக்குப் புரிந்ததில்லை. காரணம் இதுவரையும் புலி தான் வேட்டையாடிக் கொண்டிருக்கிறது. மற்ற இயக்கங்கள் அன்று முதல் இன்று வரை புலியின் கோரப் பசிக்கு இரையாகிக் கொண்டிருக்கின்றனவே தவிர, எதுவும் தீவிரமாக புலிகளைத் திருப்பித் தாக்குவதில், பயம் காரணமாகவோ அன்றி நியாயம் காரணமாகவோ, முயற்சிக்கவில்லை. எனவே தட்டிக் கேட்க ஆளில்லாததால் தம்பி சண்டப் பிரசண்டன் ஆன நிலை வந்தது.

ஆனால், ஆழ ஊடுருவும் படையணியும் கருணாவின் குழுவும் புலி வேட்டையில் இறங்கிய பின்னர்தான், தன்னையும் குறி வைத்து வேட்டையாட முடியும் என்ற எண்ணம் புலிக்கு உறைத்திருக்கிறது. இதுவரையும் யுத்தத்தில் 'கும்பலோடு கோவிந்தா'வான ஆயிரக் கணக்கான போராளிகளைவிட, தனித்தனியே புலியைக் குறி வைத்து வேட்டையாட ஒரு கூட்டம் இருக்கிறது என்றவுடன் தான் Shrek படத்தில் வருகின்ற 'சப்பாத்துப் போட்ட பூனை' போல, பரிதாபகரமாக 'இந்தப் பூனையும் பால் குடிக்குமா?' போன்று முகத்தை வைத்துக் கொண்டு, இந்த 'ஒன்றுமறியா அப்பாவிக்கு' இப்படி அநியாயம் செய்யலாமா? என்று புலி கண்ணீர் விட்டு நீதி கேட்கிறது. தானும் உயிரைப் பாதுகாக்க தப்பி ஓட வேண்டிய நிலை வரும் என்றோ, பொலிஸாரிடம் பாதுகாப்புக் கேட்கும் நிலை வரும் என்றோ சமீப காலம் வரை புலி கனவிலும் நினைத்திருக்காது.


கண்ணகி பாண்டியனிடம் நீதி கேட்டது போல, எந்தக் காலத்தில் புலி மக்களிடம் நீதி கேட்டது? எல்லா இயக்கங்களையும் அழித்த போது மக்களிடம் நீதியா கேட்டது? கருணா பிரிந்து போனபோது, அதை முறியடிக்க கிழக்கே புலிகளை அனுப்பிய போது மக்களிடம் நீதி கேட்டதா? தனக்கு வெற்றி ஏற்படும் என்ற நிலையில் புலி மக்களைப் பற்றி எந்த அக்கறையும் கொண்ட தில்லை. இன்றைக்கு உயிரைக் கையில் பிடித்து வாழும் நிலை புலிக்கு ஏற்பட்டதால் தான் இன்று இந்தப் புலம்பல் எல்லாம். மற்றவர்களுக்கு தான் கொடுத்த கசப்புக் கசாயத்தை கட்டாயமாக விழுங்க வேண்டிய நிலை புலிக்கு.

### துயரமான மரணம்

புலிகளின் இந்த மாரடிப்புக்கும் அப்பால் ஒரு மனிதனின் இழப்பு என்ற வகையில் சிவராமின் இழப்பு துயரமானதுதான். மனித நேயம் கொண்டவர்களால் எந்த உயிர் பறிப்பையும் கண்டு களிபேருவகை கொள்ள முடியாது.... அது புலியின் உயிராக இருந்தாலும் கூட!

பத்திரிகையாளர் சின்னபாலா கொல்லப்பட்ட போது, ஏதும் புரியாத அவரது குழந்தை தன் தங்கையை மடியில் வைத்துக்கொண்டிருக்கும் காட்சி எப்படி இதயத்தைப் பிழிந்ததோ, அதைப் போன்றதுதான் சிவராமின் உடலை அடையாளம் காட்டிய மனைவியும் மகளும் கதறும் காட்சி. புலிகளுடைய கொலை வெறியை கண்டிக்கும் எங்களில் பலர் எங்கள் குடும்பத்தினரை அங்கே கற்பனை பண்ணிப்பார்க்க முடியும். கொள்கை, இலட்சியம் என்ற பொய்மைகளுக்கும் மேலாக, மனிதம் என்பதை மதிக்கின்ற ஒவ்வொருவருக்கும் இந்தக் காட்சிகள் துயரத்தை வருவிக்கா விட்டால், அவர்களில் மனிதம் இல்லை என்பது தான் அர்த்தம். இந்த நிலையில் இவ்வாறான காட்சிகளைக் கண்டு ஆனந்தக் கூத்தாடும் மிருகக் கூட்டம் திடீரென்று கண்ணீர் வடிக்கும் கோமாளித் தனத்தை என்னவென்பது?

சிவராமின் நிலைப்பாடுகள், கருத்துக்கள், அதன் மீதான உறுதிப்பாடுகள், எழுத்து நேர்மைகள் பற்றி எல்லாம் பலருக்கு கேள்விகள் இருந்தன. அவரது ஆரம்ப இயக்க வாழ்வில் உட்கட்சிக் கொலைகளில் நேரடியாக ஈடுபட்டது, ஒழுக்கக் கேடாக நடந்து கொண்டது என்றெல்லாம் கண்டனங்கள் எழுந்தும் இருந்தன. அது எங்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் பாதிப்பு பற்றியெல்லாம் எழுத்து மூலமாக வெளிக்கொணர்வது எமது சமூக அரசியலின் ஒரு தவிர்க்க முடியாத தேவையாகத்தான் இருந்தது. எங்களுடைய நிலைப்பாடுகள் பற்றியும் அவருக்கு இருக்கக்கூடிய



புலிகளால் ஊடகவியலாளர்கள் என்று தூக்கிக் கொண்டாடப்படுபவர்கள் எல்லாம், தங்களை பரமசிவன் கழுத்துப் பாம்புகளாக நினைத்துக் கொண்டு, தமிழ்த்தேசியம் என்ற மாயைக்குள் புலிகளின் கொலைகளை கண்டும் காணாமலோ, நியாயப்படுத் தியோ வாழ்ந்தவர்கள்.... அதுமட்டுமின்றி எதிர்த் தரப்பினருக்கு சவால் விட்டவர்கள். நிமலராஜனும், நடேசனும், சிவராமும் இந்த அடிப்படையில் தான் புலிகளால் போற்றிப் பாடப்படுகிறார்கள். அந்தப் பரமசிவனால் இந்தப் பாம்புகளைப் பாதுகாக்க முடியவில்லை, கரு(ணா)டன் வந்ததால்! நாய் வேசம் போட்டால் குரைக்க வேண்டும், புலி வேசம் போட்டால் குதற வேண்டும் என்று என்ன கட்டாயம் இருக்கிறது?

நியாயமான கேள்விகளுக்கும் கண்டனங்களுக்குமான விவாதத்திற்கும் எம்மில் பலர் தயாராகத்தான் இருந்தார்கள். ஆனால் எந்தக் கட்டத்திலும் அவரது உயிர் பறிக்கப்படுவதுதான் சரியான முடிவு என்று யாரும் எழுதியதில்லை. அவரைக் கொலை செய்ய வேண்டும் என்ற கருத்தில் துரோகி, உளவாளி என்று புலிகள் எழுதிய அளவுக்கு கூட யாரும் எழுதவில்லை.

யாராவது சிவராம் எடுத்துக் கொண்ட நிலைப்பாட்டுக்கு மரணம் தான் சரியான தீர்ப்பு என்று நினைப்பார்களாயின், தங்களைப் புலிகள் கொல்வதற்கான நியாயத்தையும் தாங்களே வழங்குவதாகவே கருத முடியும். எங்களுக்கு கருத்துச் சுதந்திரம் என்பது எப்படி விட்டுக் கொடுக்க முடியாத ஒன்றோ, புலிகளுக்கும் அவர்களின் ஆதரவாளர்களுக்கும் கருத்துச் சுதந்திரம் இருப்பதை நாங்கள் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். ஆனால் பிரச்சினை கருத்துச் சுதந்திரம் பற்றியதல்ல, கருத்துச் சுதந்திரத்தைக் கொண்டிருப்பதாக ஒருவரைக் கொல்லலாம் என்ற தத்துவம் தான் இங்கே பிரச்சினை. சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட கருத்துச் சுதந்திரத்திற்காக எப்படிக் கொல்ல முடியும். அந்த அதிகாரத்தை யார் வழங்கினார்கள் என்பதில் தான் கருத்து முரண்பாடே வருகிறது. அதுகூட, எழுத்து மூலமானதே தவிர, சாப்பாட்டில் நஞ்சு வைத்துக் கொல்லும் அளவிலோ, ஆயுதம் ஏந்தி சுட்டுக் கொல்லும் அளவிலோ இல்லை.

ஒரு மனிதனின் வாழும் உரிமையை தன்னிச்சையாகப் பறிக்க யாருக்கும் உரிமையில்லை. சமூகம் நீதிவிசாரணைகளின் பின்னால் வழங்குகின்ற மரண தண்டனையைக் கூட நிறைவேற்றுவதில் பல்வேறு எதிர்ப்புகள் நாகரீக உலகில் இன்றும் இருக்கின்றன. இந்த நிலையில் கொலையை ஆதரித்து நியாயப்படுத்துவது என்பது மரண தண்டனைக்குரிய குற்றமாகாது.

### கருத்துச் சுதந்திரம் என்ற கருத்தின் திரிப்பு

ஆனாலும், கருத்துச் சுதந்திரம் என்ற கருதுகோள், கருத்துச் சுதந்திரத்தை மறுப்பவர்களால் தவறான அர்த்தத்தில் திரிக்கப்படுகிறது. கருத்துச் சுதந்திரம் என்பது கருத்து வெளியீட்டிற்கான அச்சுறுத்தலை, மரண பயமுறுத்தலை நிராகரிக்கிறது. அதிகாரத்தில் இருப்பவர்களை ஆதரிப்பவர்களுக்கு இந்த அச்சுறுத்தல் பெரிதும் இருப்பதில்லை.... போட்டியாக அதே மிருக உணர்வுள்ள எதிர்க்கூட்டம் வரும் வரைக்கும்!

சர்வதேச நியதிகளின்படி கருத்துச் சுதந்திரம் 'ஜனநாயக வரம்புகளுக்கு' உட்பட்டது என்பதை பலரும் மறந்து விடுகிறார்கள். ருவாண்டாவில் வானொலிகளில், பத்திரிகைகளில் மற்ற இனத்தவர்களைக் கொல்லும்படி பிரசாரம் செய்தவர்கள், அவர்கள் மறைந்திருக்கும் இடங்களை பகிரங்கமாக அறிவித்து கொலை செய்ய வைத்தவர்கள், வெறும் ஊடகவியலாளரின் கருத்துச் சுதந்திரம் என்ற போர்வைக்குள்ளால் தப்ப முடியவில்லை. பலர் இனஅழிப்புக் குற்றச்சாட்டு களுக்காக நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இதே போன்று புலிகளால் ஊடகவியலாளர்கள் என்று தூக்கிக் கொண்டாடப்படுபவர்கள் எல்லாம், தங்களை பரமசிவன் கழுத்துப் பாம்புகளாக நினைத்துக் கொண்டு, தமிழ்த்தேசியம் என்ற மாயைக்குள் புலிகளின் கொலைகளை கண்டும் காணாமலோ, நியாயப்படுத்தியோ வாழ்ந்தவர்கள்.... அதுமட்டுமின்றி எதிர்த் தரப்பினருக்கு சவால் விட்டவர்கள். நிமலராஜனும், நடேசனும், சிவராமும் இந்த அடிப்படையில் தான் புலிகளால் போற்றிப் பாடப்படுகிறார்கள். அந்தப் பரமசிவனால் இந்தப் பாம்புகளைப் பாதுகாக்க முடியவில்லை, கரு(ணா)டன் வந்ததால்! நாய் வேசம் போட்டால் குரைக்க வேண்டும், புலி வேசம் போட்டால் குதற வேண்டும் என்று என்ன கட்டாயம் இருக்கிறது?

### களத்தில் நின்றவரை விமர்சிப்பது சரியா?

வெளிநாடுகளில் பாதுகாப்பாக வாழ்ந்து கொண்டு, புலிகளின் கோட்டைக்குள் வாழ்ந்த இவர்களை சுலபமாக தீர்ப்பிடுவதாக பலரும் எங்களைக் குற்றம் சாட்டலாம். எங்களுக்கு வெளிநாடுகளில் ஒப்பீட்டளவில் இருக்கின்ற பாதுகாப்பு எங்கள் உயிருக்கு உத்தரவாதம் தர மாட்டாது. புலிகள் விரும்பினால் வெளிநாடுகளிலும், விளைவுகளைப் பற்றிய கவலை இல்லாமல், கொல்வார்கள் என்பதை நிருபித்துத்தான் இருக்கிறார்கள். புலிகளை விமர்சித்து சிவராம் ஐலண்டில் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்த சபாலிங்கத்தின் கொலை சரியான உதாரணம். வெளிநாடுகளிலும் உயிர்ப்பயத்தில் கட்சி மாறிக் கொடி பிடித்தவர்கள் எத்தனை? வாய் திறக்கப் பயந்து மௌனமானவர்கள் எத்தனை?

யாழ்ப்பாணத்தில் இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் இருந்து கொண்டே, முன்பக்கத்தில் தலைவர் பத்திரிகை வாசிக்கும் படத்தையும் பின்பக்கத்தில் இராணுவ அதிகாரியின் கருத்தையும் போட்டு, சிங்கத்திற்கு தலையும் புலிக்கு வாலும் காட்டுபவர்கள் இருக்கிறார்கள். இது உயிர்ப்பிரச்சினை. பிழைப்புக்கான வழியும் கூட. இந்தக் கயிறு திரிப்புகளும் கயிறு கொடுப்புகளும் கயிறு மேல் நடப்பது போன்ற நிலை. எந்த நேரமும் கழுத்தில் கயிறு விழலாம்.

பி.பி.சி.யின் நிருபராக இருந்தால்கூட, புலிகளின் உத்தியோகபூர்வ பிரசாரத்திற்கு மிஞ்சி எதுவும் சொல்ல முடியாத நிலை. இதனால் தான் பி.பி.சி.யின் சிங்கள சேவைக்கும் தமிழ்ச் சேவைக்கும் மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசங்கள்.

எனவே, புலிகளின் கோட்டையில் நின்று கொண்டே அது தமிழர் தேசத்திற்கு எதிராகப் புரிகின்ற அநீதிகளையும் அக்கிரமங்களையும் உலகிற்கு உறுதியாக எடுத்துக் கூறி போர்க்கொடி தூக்க வேண்டும் என்றும் யாரும் இவர்களைச் சொல்லவும் இல்லை. அதிலும் எழுத்தை நம்பிய வருமானத்தில் வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற நிலையில் 'சத்தியசோதனைகள்' வருவதும் இயற்கை. விட்டுக் கொடுப்புகள் அங்கே நிச்சயமானவை. அதிலும் 'ஒரு ஆட்டிலறி வாங்கச் செலவிடும் பணம் இணையத்தளத்திற்குச் செலவிடவேண்டும்' என்று சிவராம் புலிகளுக்கு புத்தி சொன்னபோதே, இவர் சம்பள உயர்வு கேட்கிறாரா? சொத்து சேர்க்க நினைக்கிறாரா என்று தான் தோன்றியது. ஊடகவியலாளர்கள் என்பதற்காக யாரையும் ஆதரிக்கக் கூடாதென்ற விதிமுறை எதுவும் இல்லை. நடுநிலைமை என்பதும் சாத்தியமானதில்லை. யாரும் கருத்துச் சுதந்திரத்திற்காக உரிரைக் கொடுக்கும் நிலையிலும் இல்லை. ஆனால். மௌனமாக இருந்திருக்கலாம். கொண்டிருந்த தொடர்புகளுக்கு குடும்பமாகவே வெளிநாடு போய் தஞ்சம் அடைந்திருக்கலாம். ஆனால் ஒரு படி மேலே சென்று கருடனைப் பார்த்து சவால் விட வேண்டிய தேவை இவர்களுக்கு ஏன் வந்தது? புலிகளின் கொலைகளை 'முந்தி விழுந்து' நியாயப்படுத்த வேண்டிய தேவை என்ன வந்தது?

(தொடரும்)

நன்றி :- www.Thayagam.info

### சங்கர மடத்துக் கிங்கரர்கள்

தவிர்க்க முடியாத காரணங்களினால் அடுத்த வாரம் பிரசுரமாகும்



இன்ப மாகி விட்டாய் - காளி! - என்னு ளேபு குந்தாய்?
பின்பு நின்னை யல்லால் - காளி! - பிறிது நானும் உண்டோ?
அன்ப ளித்து விட்டாய் - காளி! ஆண்மை தந்து விட்டாய்;
துன்பம் நீக்கிவிட்டாய் - காளி! தொல்லை போக்கிவிட்டாய்!

சுப்பிரமணிய பாரதியார்-

# ஆத்திசூடி

## கிழமைப் படவாழ்

நீ பிறருக்கு பயன் தரும் வகையில் நட்புறவுடன் வாழ்.

எஸ் நிரஞ்சலா, கண்டி. -ஔவையார்

# கொல்லைப் பிசாசு

பாப்பா முரசு சிறுகதை

சண்முகத்திற்கு திவ்யா என்ற தங்கை இருந்தாள். தன் தங்கையை பக்கத்து ஊரைச் சேர்ந்த ஆறுமுகத்திற்கு திருமணம் செய்து வைத்தான் சண்முகம்.

ஒரு நாள் தன் தங்கையைக் காண வேண்டி தன் மச்சான் வீட்டிற்கு வந்தான் சண்முகம்.

சண்முகத்தின் மச்சான் ஆறுமுகம் அந்த நேரத்தில் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தான்.

தன் மச்சான் சண்முகம் வந்திருப்பதை அறிந்ததும் உடனே படுக்கையை விட்டு எழுந்து கொண்டான்.

"மச்சான் வா! வா! நீ எப்போது வருவாய் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். நீ இல்லாமல் எனக்கு என்னவோ போல் இருக்கி றது. நீ அடிக்கடி என்னைப் பார்க்க வர வேண்டியதுதானே!" என்றான் ஆறுமுகம்.

"அதான் வந்து விட்டேனே! இன்னும் பத்து நாட்களுக்கு உன்னோடுதான் தங்கப் போகிறேன்!" என்றான் சண்முகம்.

"என்ன பத்து நாட்களுக்கு என்னோடு தங்கப் போகின்றாயா? இதனைக் கேட்கின்ற போது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது" என்றான் ஆறுமுகம்.

அன்றைய தினம் திவ்யா தன் அண்ணன் சண்முகத்திற்கு பலமான விருந்திற்கு ஏற்பாடு செய்திருந்தாள்.

ஆறுமுகத்திற்கும், சண்முகத்திற்கும் விருந்து பரிமாறினாள் திவ்யா.

சண்முகம் வயிறு முட்ட சாப்பிட்டான். "மச்சான் வீட்டு சாப்பாடென்றால் தனி ருசியா கத்தான் தெரிகிறது. எவ்வளவு வேண்டு மானாலும் சாப் பிட்டுக் கொண்டேயிருக்கலாம் போன்று தோன்று கிறது" என்றான்.

உடனே ஆறுமுகம் "இன்று ஒரு நாள் தானே ஆகிறது. இன்னும் ஒன்பது நாட்கள் இருக்கின்றது; மீதிச் சாப்பாட்டை அப்புறமாகச் சாப்பிட்டுக் கொள்ளலாம்" என்றான்.



"அதுவும் சரிதான். இனிமேல் அண்ணனுக்கு நான் அளவு குறைத்தே சாப்பாடு கொடுக்க வேண்டும்" என்று கூறினாள் திவ்யா.

அதனைக் கேட்டதும் ஆறுமுகமும், சண்முகமும் சிரித்துக் கொண்டனர்.

மறுநாள் ஆறுமுகம் தன் மச்சானோடு சந்தைக்குப் புறப்பட்டான்.

ஆறுமுகத்தைப் பார்த்த சண்முகம் "மச்சான் கொல்லையில் ஒரே ஒரு எருமை மாடுதான் நிற்கிறது. இன்னொரு எருமையை வாங்கி ஜோடி யாக விட வேண்டும். இரண்டு எருமைகளையும் வைத்துக் கொண்டு விவசாய வேலைகளை எளிதாக செய்து முடித்து விடலாம்" என்றான்.

"ஆமாம்! அதுவும் நல்ல யோசனைதான். அப்படியானால் நாம் இருவரும் சந்தையில் சென்று எருமை மாட்டைத் தான் வாங்கப் போகிறோமா?" என்று கேட்டான் ஆறுமுகம்.

"ஆமாம் மச்சான் நாம் எருமை மாட்டைத்தான் வாங்கப் போகிறோம்" என்று உற்சாகத்தோடு கூறினான் சண்முகம்.

இருவரும் சந்தையில் மாடுகள் விற்பனையாகும் பகுதிக்குச் சென்றனர்.

"மச்சான் அதோ பார்! அழகான எருமை மாடு ஒன்று நின்று கொண்டிருக் கிறது. அதனை நாம் விலைக்கு வாங்கி விடலாமா?" என்று கேட்டான் ஆறுமுகம்.

"மச்சான் எருமை மாட்டை வாங்குவதிலும் பல பக்குவம் இருக்கிறது. நாம் நினைத்தவுடன் அதனை வாங்கிவிட முடியாது. எருமை மாட்டிற்கு என்னென்ன குணாதிசயங்கள் இருக்கின்றன என்பதைப் பார்த்துத்தான் பொறுமையுடன் வாங்க வேண்டும்" என்றான் சண்முகம்.

"மச்சான் மாடு வாங்கி எனக்குப் பழக்கம் இல்லை! நீதான் மாடு வாங்குவதைப் பற்றி எல்லாமே அறிந்து வைத்திருக்கின்றாயே! நீ எப்படி மாடு வாங்குகிறாய் என்று உன்னைப் பார்த்து நானும் கற்றுக்கொள்கிறேன்" என்றான் ஆறுமுகம்.

"மச்சான் அதனைக் கற்றுக்கொள்வது சுலபமான வேலையல்ல! மாட்டைப் பார்த்த மாத்திரத்திலேயே அது நல்லதா கெட்டதா என்பதை அடையாளம் கண்டுபிடித்துவிட வேண்டும். இல்லையேல் நோய்பிடித்த மாட்டினை வாங்கி நாம் ஏமாந்து விடுவோம்" என்றான் சண்முகம்.

"ஓஹோ! மாடு வாங்குவதில் அப்படியும் ஒன்று இருக்கிறதோ! இனிமேல் நான் இதனைப் பற்றிக் கேட்காமல் அமைதியாக இருந்து விடுகிறேன்" என்றான் ஆறுமுகம்.

சண்முகம் அழகான எருமை மாடு ஒன்றைத் தேர்வு செய்தான். அதற்கானப் பணத்தை மாட்டுக்காரரிடம் கொடுத்து விலைக்கு வாங்கிக் கொண்டான்.

பின்னர் அந்த எருமை மாட்டின் கழுத்தில் கட்டப்பட்ட கயிற்றினை தன் மச்சான் ஆறுமுகத்தின் கையில் கொடுத்தான்.

"மச்சான் இந்த எருமை மாட்டைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்! நீ என்னை விடப் பலசாலியாக இருக்கின்றாய்! இந்த எருமை மாடு திமிறிக் கொண்டு ஓடினாலும் அதனை ஓடிச் சென்று பிடித்து விடுவாய்" என்றான் ஆறுமுகம்.

அதனைக் கேட்ட சண்முகமோ "மச்சான் வீட்டிற்கு வந்த கையோடு எனக்கு மாடு பிடிக்கின்ற வேலை கிடைத்து விட்டது" என்று சிரித்தபடியே கூறினான்.

"ஆமாம்! மச்சான் உனக்கு நான் மாடு பிடிக்கின்ற வேலையைக் கொடுத்து விட்டேன்" என்று கேலியாகக் கூறினான் சண்முகம்.

இருவரும் மாட்டோடு வீட்டை வந்தடைந்தனர்.

தன் அண்ணன் மாட்டை ஓட்டிக்கொண்டு வருவதைக் க்ண்டதும் திவ்யாவுக்கும் சிரிப்பு வந்தது.

"அண்ணா! வீட்டில் மாட்டைக் கண்டால் எட்டடி தள்ளி நிற்பாயே! இப்போது மச்சானுக்காக வேண்டி மாட்டைப் பிடிக்கும் வேலையும் செய்கின்றாயா? என் அண்ணனை நீங்கள் மாடு பிடிக்க வைத்து விட்டீர்களே!" என்று கூறினாள் திவ்யா.

திவ்யாவின் பேச்சைக் கேட்டதும் ஆறுமுகத்திற்கும், சண்முகத்திற்கும் சிரிப்பு வந்துவிட்டது. ஆறுமுகம், சண்முகத்திடமிருந்து எருமை மாட்டை வாங்கிக் கொண்டு கொல்லையின் ஓர் மூலையில் அதனைக் கட்டி அருகில் இருந்த வைக்கோல் போரையும் அள்ளிப்போட்டான்.

சண்முகமோ கொல்லைப் பக்கமே செல்லவில்லை.

சாணி வாடையைக் கண்டாலே அவனுக்கு குமட்டலாக வரும். அதனால், கொல்லையில் இருக்கின்ற தொழுவத்தின் பக்கம் செல்லாமல் அமைதியாக இருந்து விட்டான்.

அன்று இரவு சண்முகம் அளவுக்கு அதிகமாகச் சாப்பிட்டு விட்டான். அதனால் அவன் வயிறானது கட முட என்று சப்தம் எழுப்பியது.

எழுந்து கொல்லைப் பக்கமாகச் செல்ல முடிவு செய்தான்.

வீட்டின் பின் வாசல் வழியாக வந்து கதவைத் திறந்தபடி கொல்லைப் பக்கத்திற்கு வந்தான் சண்முகம்.

கொல்லைப் புறத்தில் உயரமாக ஏதோ ஒன்று இருப்பதைக் கண்டு திடுக்கிட்டான்.

இருட்டில் அது ஏதோ பெரிய உருவம் போன்று அவன் கண்களுக்குத் தோன்றியது.

'மச்சான் வீட்டுக் கொல்லையில் பேய் வந்து விட்டதோ!' என்று தன் கை, கால்கள் எல்லாம் நடுங்கியபடி "மச்சான்.... மச்சான்...." என்று கூக்குரல் எழுப்பினான்.

வீட்டின் உள்ளே படுத்திருந்த ஆறுமுகமும், திவ்யாவும் அந்த சப்தத்தைக் கேட்டு திடுக்கிட்டனர்.

"கொல்லைப் பக்கத்தில் நின்றபடி அண்ணன் உங்களை அழைக்கிறார். அவர் ஏன் இப்படிக் கூக்குரல் எழுப்புகின்றார் தெரியவில்லையே! ஓடிச் சென்று அவரைப் பாருங்கள்!" என்றான் திவ்யா.

ஆறுமுகம் வேகமாக கொல்லைப் பக்கத்திற்கு ஓடிச் சென்றான்.

ஆறுமுகத்தை ஓடிவந்து கட்டிப்பிடித்துக் கொண்டான் சண்முகம்.

"மச்சான் அதோ பார் பேய் நிற்கின்றது!" என்று பயத்தால் நடுங்கியபடியே கூறினான்.

அதனைக் கேட்டதும் ஆறுமுகத்திற்குச் சிரிப்பு வந்து விட்டது.

"மச்சான் அது பேய் அல்ல! அது என்ன வென்று வெளிச்சத்தில் உனக்குத் தெளிவாகக் காட்டுகிறேன்" என்றபடி வீட்டின் உள்ளே இருந்து லாந்தர் விளக்கை எடுத்து வந்தான் ஆறுமுகம்.

விளக்கு வெளிச்சத்தில் அந்த இடத்தை தெளிவாகக் காட்டினான்.

"மச்சான் இதோ நன்றாகப் பார்! நாம் சந்தையில் இருந்து வாங்கி வந்த எருமை தான் வைக்கோல் போரின் மீது ஏறிப் படுத்திருக்கின்றது. இங்கே பேய் ஒன்றும் கிடையாது. இதுவரையிலும் நீ கொல்லைப் பக்கம் வந்ததில்லைத் தானே. அதனால்தான் உனக்கு இருட்டில் தெரிந்த வைக் கோல் போர் மீது எருமை படுத்திருந்த காட்சி பேய் போன்று தெரிந்திருக்கிறது. இனிமேலாவது கொல்லைப் பக்கம் வந்து எருமைகளின் சாணத்தை அள்ளியெடுத்து சுத்தம் செய்யும் வேலையைச் செய்!" என்று சிரித்தபடியே கூறினான்.

ஆறுமுகம் கூறியதற்குப் பதில் எதுவும் கூற முடியாமல் அமைதியுடன் இருந்தான் சண்முகம்.

இதற்குள் அங்கு ஒலித்த சப்தத்தைக் கேட்டு பக்கத்து வீட்டினர் எல்லோரும் ஓடி வந்தனர்.

சண்முகத்தின் செயலைக் கண்டு அவர்களுக்கு அழுவதா? சிரிப்பதா என்று தெரியவில்லை.


அந்தக் கூட்டத்தில் ஒருவர் சண்முகத்தைப் பரிகாசம் செய்தார்.

"மச்சான் வீட்டுக் கொல்லையில் மலை எருமை படுத்துக் கிடப்பது உன் கண்களுக்குப் பேயாகத் தெரிந்ததா? ஆறுமுகம், உன் மச்சானை வீட்டிற்குள் வைத்துப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள். அவர் இன்னும் வேறு எதையெல்லாமோ கண்டு பயப்படப் போகின்றார்" என்றார்.

அதனைக் கேட்ட அனைவரும் 'கொல்' என்று சிரித்தனர்.

# அதிசய உலகம்

## டோர்னேடோ



**வே**கமாகச் சுழன்றபடி தரையிலிருக்கும் பொருட்களையெல்லாம் தூக்கி வீசும் சூறாவளிக் காற்றை டோர்னேடோ என்று அழைக்கின்றனர்.

கடுமையான டோர்னேடோக்கள் மணிக்கு 500 கிலோ மீட்டர் வேகத்தில் சுழற்காற்றை வீசும். அத்தகைய காற்று வீச்சின் சேதாரம் 100 கிலோ மீட்டர் வரை கூட நீண்டிருக்கும்.

**டோர்னேடோக்கள் எப்படி உண்டாகின்றன?**


தரைப்பகுதியிலிருக்கும் வெப்பக் காற்று மேலே உயரச் செல்கையில் குளிர்ந்து அதிலுள்ள நீர்த் துகள்கள் வேகமாக மாறுகின்றன. அவ்வாறு உருவாகும் போது அதிலிருந்து சக்தி வெப்பமாக வெளியிடப்படுகின்றது. மிகப் பெரிய கருமேகங்கள் உருவாகும்போது வெளியிடப்படும் சக்தி, கீழிருக்கும் காற்றை அதிகப்படியாக வெப்பப்படுத்துவதால், அந்த வெப்பக் காற்று லேசாகி மேல்நோக்கி சுழன்றபடி இழுக்கப்படுகிறது. ஆற்றில் சுழல் உண்டாகுகையில் தண்ணீர் சுழன்றபடி அங்கு மிதக்கும் பொருட்களை உள்ளே இழுத்துச் செல்வதைப் போல, டோர்னேடோ உருவாகும்போது காற்றில் சுழல் உண்டாகி தரையிலிருக்கும் பொருள்களெல்லாம் மேலிருக்கும் மேகத்தை நோக்கி வேகமாக இழுக்கப்படுகின்றன.

# உங்கள் பொது அறிவு எப்படி?

## இலங்கையை ஆண்ட மன்னர்கள் விபரம்

| மன்னன் பெயர் | காலம் | தலைநகர் | ஆண்டகாலம் (வருடம்) |
|---|---|---|---|
| விஜயன் | கி.மு.543 | தம்பபன்னி | 38 |
| உபதிஸ்ஸன் | கி.மு.505 | உபதிஸ்ஸபுரம் | 01 |
| பண்டுவாசுதேவன் | கி.மு.504 | உபதிஸ்ஸபுரம் | 30 |
| அபயன் | கி.மு.474 | உபதிஸ்ஸபுரம் | 20 |
| பண்டுகாபயன் | கி.மு.437 | அனுராதபுரம் | 70 |
| மூத்தசிவன் | கி.மு.367 | அனுராதபுரம் | 60 |
| தீஸன் | கி.மு.307 | அனுராதபுரம் | 40 |
| உத்தியன் | கி.மு.267 | அனுராதபுரம் | 10 |
| மகாசிவன் | கி.மு.257 | அனுராதபுரம் | 10 |
| சூரதிஸ்ஸன் | கி.மு.247 | அனுராதபுரம் | 10 |

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 08.06.2005.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 598
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 596

பரிசுக்குரியவர்:
ரி. சுகன், 'ஸ்ரீதேவி கோயில்',
கொம்மாதுறை, செங்கலடி

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ரா.திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. | ஆர். திவ்யா, தரம் 6B, தமிழ் மகளீர் வித்தியாலயம், பதுளை. |
| எம். பிரண்டன், புனித ஜோன் பொஸ்கோ கல்லூரி, ஹட்டன். | ர.நிரஞ்சனா, தரம் 10 E, மட்/செங்கலடி மத்திய கல்லூரி, T.V.K. மில் வீதி, செங்கலடி. |
| இ. கமினயா,தரம்4 C, யா/இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை, யாழ்ப்பாணம். | என்.மாலதி, 275, மாரியம்மன் கோயிலடி, மன்னார் வீதி, புத்தளம். |
| ஏ.ஜே. பாத்திமா பஸ்னா, 173/5B, கந்தவத்த, மல்வானை. | அ.ம. வபீஸ், 389, ஹாஜியார் வீதி, மருதமுனை, கல்முனை. |
| ர.வினோ, தரம் 7, மட்/செங்கலடி மத்திய கல்லூரி, T.V.K. மில் வீதி, செங்கலடி. | எல்.பி. கீர்த்தனா, 53/19 ஸ்ரீபிரியதர்ஷன மாவத்தை, கொழும்பு 10. |

# தகவல் பெட்டி

## மயிரிழையில் தப்பியது



நீங்கள் காணும் இப்புகைப்படம் சிறந்த புகைப்படமாக மாற இருந்த வாய்ப்பு நல்ல காலமாகக் கைநழுவியது. ஏனென்றால் அமெரிக்க இராணுவத்திற்குச் சொந்தமான சரக்கு விமானமொன்று விண்ணில் பறந்தபோது, அதற்கு மிகச் சமீபமாக மென்ரக விமானம் ஒன்றும் பறந்தது. இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று மோதாமல் மயிரிழையில் தப்பின. துரதிஷ்டவசமாக அவை ஒன்றுடன் ஒன்று மோதி இருந்தால் இப்படம் மிகச் சிறந்த புகைப்படமாகும் வாய்ப்பு இருந்தது.

## நாயார்க்கும் நல்ல கவனிப்பு




நாய்களுக்குப் பல நாடுகளில் கிடைக்கும் இராஜ மரியாதைகளைப்பற்றி இதற்கு முன்னர் பல தடவைகளில் நாம் உங்களுக்கு அறியத் தந்திருக்கிறோம். இவ்வாறு புதிதாக மரியாதை செலுத்தி இருப்பவர் கியூபா எஜமானியாவார். இவர் குளிர் காலத்தில் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அணியும் உடையைப் போலொன்றை தனது நாயாருக்கும் அணிவித்து உல்லாசமாகக் காரில் அழைத்துச் செல்கிறார்.

## மீசையால் தூக்கப்பட்ட மாமேதை




அல்பட் ஐயின்ஸ்டீன் என்பவர் உலக மாதா ஈன்றெடுத்த மாபெரும் விஞ்ஞான மேதைகளுள் ஒருவர் என்பதை நாம் அறிவோம். இம் மேதையை மீசையால் தூக்கிக்கொண்டு செல்லும் இக்காட்சியைக் காணக்கிடைத்தது லண்டனில் உள்ள விஞ்ஞான அருங்காட்சியகத்தில்.





## தேங்காய் பறிக்க மேசை

இங்கிலாந்து பார்லிமென்ட் ஹில் இல் உள்ள பூங்காவில் ஜூன் மாதம் 22ஆம் திகதி நடைபெறவுள்ள அபூர்வ கண்காட்சியில் வைப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஓர் தென்னை மர அளவு உயரமுடைய மேசையும் கதிரையுமே இது. மரமேறாமலே தேங்காய் பறிக்க முடியும். இது மாதிரி ஒன்று நமக்கும் இருந்தால்.......

## சாகசம்



அன்றாட உணவைத் தேடுவதற்காகப் பல்லைப் பயன்படுத்தி சாகசம் புரியும் மொங்கோலிய இனத்தவருக்கு, ஒவ்வொன்றும் 20 கிலோ கிராம் நிறையுடைய இரண்டு இரும்புக் குண்டுகளைத் தனது பல்லால் தூக்குவது சுலபமான காரியமாக உள்ளது. பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்பது எவ்வளவு உண்மை என்பது தெரிகிறதா?

உண்மையிலேயே இப்படம் சம்பந்தமான தகவல்களை வாசிக்கத் தேவையில்லை. பார்த்தாலே பரவசமடையலாம். சீனாவின் குவாங்டோங் சர்க்கஸ் குழுவினர் ஷங்காய் நகரில் பயிற்சியில் ஈடுபட்டபோது பிடித்த படம்.



ரமேஷ் - பூஜா
ஜித்தன்


‘தீண்ட தீண்ட’ படத்தில் முகன் இயக்கத்தில் நடித்துவரும் ஷ்ராவ்யாவின் தம்பி ஷாவன். இந்த ஷாவன்தான் இன்டர் நெட்டில் ஆபாச படம் காட்டி வலைவிரித்து பலரிடம் பணம் மோசடி செய்ததாகக் கைதான பாடகர் மனோவின் மகனுடன் சேர்ந்து கைதானவர். தன் தம்பியின் இதுமாதிரி செயல் களால் மனரீதியாகப் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளாராம் ஷ்ராவ்யா. அதன் வெளிப்பாடு படப்பிடிப்பில் அம்மணி பழைய பந்தாவை எல்லாம் குறைத்துக்கொண்டு நடித்து வருகிறார் இரண்டாவது ஷெட்யூலில்! ‘தீண்ட தீண்ட’ படத்தின் முதல் ஷெட்யூலில் “நான் தென்னிந்திய அழகிப் போட்டியில் கலந்துகொண்டு மிஸ் சௌத் இண்டியா பட்டம் வென்றவளாக்கும். எனக்கு ஸ்டார் ஹோட்டலில்தான் ரூம் வேண்டும். அது வேண்டும் இது வேண்டும்” என்று அடம்பிடித்த அம்மணி தற்போது அடக்கி வாசித்து வருகிறார். தம்பியின் தவறு தந்த மாற்றம்! அப்படித்தானே ஷ்ராவ்யா....?!



கல்யாணி

## மன்மதராசாவின் பூனைப் படை!

மன்மதராசாவுக்கு அடிபட்டதில் ஏதோ சதி இருப்பதாகச் சந்தேகித்த தந்தைகுலம் அவருக்கு செக்யூரிட்டியைப் பலப்படுத்தியிருக்கிறார். எங்கு போனாலும் அவரைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள் சில முரட்டு ஆசாமிகள். ஒருநாள் படப்பிடிப்பு தளத்தில் இவரைப் பார்த்த உதவி இயக்குநர் ஒருவர் ஆர்வ மிகுதியில் அருகில் சென்று, “சூப்பரா ஒரு சப்ஜெக்ட் வச்சிருக்கேன். நீங்கதான் நடிக்கணும்” என்று கைகுலுக்கியிருக்கிறார். பின்தொடர்ந்து வந்த செக்யூரிட்டிகள் அந்த உதவி இயக்குநரைப் பிடித்துத் தள்ளிவிட்டார்களாம். சொந்த ஊரிலிருந்து வந்திருக்கும் அவர்களுக்கு செக்கு எது சிவன் எது என்று தெரியாமல் போய்விடுகிறது. அவர்கள் முரட்டுத்தனமாக நடந்துகொண்டதை அடுத்து அவர்களை மறுபடியும் ஊருக்கே அனுப்பிவிட்டு வேறு ஆட்களை நியமிக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறாராம் நடிகரின் அப்பா. இதற்காகத் தமிழகத்தில் பிரபல செக்யூரிட்டி நிறுவனத்தை நாடியிருப்பதாகக் கேள்வி!



சிம்பு - நயன்தாரா
வல்லவன்

‘சிவ காசி’ படத்தில் விஜய்யின் தங்கையாக ‘ராம கிருஷ்ணா’ பட நாயகி ஸ்ரீதேவிகா நடிக்கிறார்.

சேரனின் ‘ஆட்டோகிரா.்.ப்’ கன்னடத்தில் ரீமேக் செய்யப்பட்டு வருகிறது. கன்னடப் படவுலகின் முன்னணி இளம் ஹீரோ சுதுப் முதன் முதலாக இயக்கி, நாயகராகவும் நடிக்கும் இந்தப் படத்தில் சிநேகா ஏற்று நடித்த பாத்திரத்தில் நம்மூர் மீனா நடிக்கிறாராம். படத்திற்கு ‘மை ஆட்டோகிரா.்.ப்’ என்பது நாமகரணம்!

காதல் சந்தியாவுக்கு மெக்டவல் என்றால் ரொம்ப இஷ்டம் எனக் கேள்விப்பட்டதும் அதிர்ச்சியாகி, சந்தியாவிடமே கேட்டோம்.

“அய்யய்யோ.... இது சரக்குன்னு பாத்தீங்களா.... என்னோ, செல்லக் குட்டி நாய் பேரு மெக்டவல் என்றார்.



பிரியாமணி

## கஞ்சா நடிகையின் ஆதங்கம்!

ராசியில்லாத நடிகையை அழைத்து வந்து வாழ்வு கொடுத்தார் பிதாமகன். இந்தப் படம் வந்தால் வாசலில் நின்று வாய்ப்புக் கொடுப்பார்கள் என்று நம்பியிருந்த ச சங்கீத நடிகைக்குக் கிடைத்தது ஏமாற்றம்தான். போனில் பாராட்டிய பழைய பெருச்சாளிகள், பார்த்து ரொம்ப நாளாச்சு என்று போனிலேயே வழிய, அவர்களின் நோக்கத்தைப் புரிந்து கொண்ட நடிகை, சீச்சி என்று கடித்துக் குதறியதோடு ஒட்டுமொத்த கோலிவுட்டுக்கே சாபம் கொடுத்துக் கொண்டிருக்கிறாராம். நடிகை மறுபடியும் ஆந்திராவில் போய் திறமை காட்டக்கூடும் என்று கோடம்பாக்கத்து செய்திகள் தெரிவிக்கின்றன.

## சிம்புவின் குறும்பு போஸ்டருக்கு தடை

சிலம்பரசன், நயன்தாரா ஆகியோர் நடிக்கும் ‘வல்லவன்’ படத்தின் பிரமாண்டமான ‘உதட்டுக் கடி’ போஸ்டர்களை பொலிஸார் அகற்றினர்.

பி.எல்.தேனப்பன் தயாரிக்க, சிம்புவே திரைக்கதை எழுதி, இயக்கும் படம் வல்லவன். இதில் அவருக்கு ஜோடியாக நயன்தாரா, ரீமாசென், சந்தியா ஆகியோர் நடிக்கவுள்ளனர்.


இதையொட்டி நயன்தாராவின் கீழுதட்டை சிம்பு கடித்து இழுப்பது போன்ற மகா கிக்கான சுவரொட்டிகள் சென்னையில் பல இடங்களில் ஒட்டப்பட்டன. வழக்கமான சைஸை விட மெகா சைஸில் இந்தப் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன.

இந்தக் குளோஸ்-அப் ‘உதட்டுக் கடி’ போஸ்டர்கள் அசோக் நகர், தேனாம்பேட்டை, ராயப்பேட்டை, அடையார் ஆகிய பகுதிகளின் பெரிய சுவர்களை ஆக்கிரமித்திருந்தன.


மேலும் சென்னை சென்டிரல் ரயில் நிலையத்திற்கு அருகே உள்ள தென்னக ரயில்வே பொது மேலாளர் அலுவலக வளாகத்திலும் ஒட்டப்பட்டிருந்தன.

இந்தப் போஸ்டர்களைக் கடந்துசென்ற பொது மக்கள் முகம் சுளிக்க நேர்ந்தது. இதுகுறித்து பொலிஸாருக்கும் சிலர் புகார் கொடுத்தனர்.

இதையடுத்து பொலிஸார் உடனடியாக நடவடிக்கையில் இறங்கி வல்லவன் பட சுவரொட்டிகளைக் கிழித்தெறிந்தனர். இந்தச் சுவரொட்டி தொடர்பாக ராயப்பேட்டை காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.



அஜித்
காட்பாதர்



# சினி விசிட்

## அழைத்தார் நடிகை! ஆஜரானார் டைரக்டர்!

சோனியா, நடிகை அவர். இவருக்கும் இவரை அறிமுகப்படுத்திய டைரக்டருக்கும் காதல் என்று கிசுகிசுக்கப்படுகிறது. ஒருநாள் வேறொரு படப்பிடிப்பில் இருந்தார் நடிகை. சீன்படி, இவரை இழுத்து கட்டிலில் தள்ள வேண்டும் ஹீரோ. அவரும் நடிகையை இயக்குநர் சொன்னபடி தள்ளினார். தள்ளிய வேகத்தில் படுக்கையில் விழுந்த சோனிக்கு இடுப்பில் பலமான அடி! உடனே முகத்தைப் பொத்திக் கொண்டு அழ ஆரம்பித்துவிட்டாராம். சட்டென்று தனக்காக ஒதுக்கப்பட்ட ரெஸ்ட் ரூமிற்கு ஓடிப்போய்விட்டாராம். வெகு நேரமாகியும் வரவில்லை. பயந்துபோன யூனிட் மொத்தமும் ரூமிற்கு வெளியே காத்திருக்க, காரில் வந்திறங்கினாராம் நடிகையின் காதல் இயக்குநர். அவர் நேராகப் போய் நடிகைக்கு ஆறுதல் சொன்ன, பிறகுதான் படப்பிடிப்புக்கே வந்தாராம் சோனி. ரூமிற்கு ஓடிய உடனே தன் காதலருக்குப் போன் செய்து அவரை உடனே வரச்சொன்னது நடிகைதான் என்பது பிறகுதான் புரிந்ததாம் யூனிட்டிற்கு. இப்போதெல்லாம் பூ போலக் கையாள்கிறார்கள் சோனியை!



நமீதா
சாணக்கியா

எஸ்.ஜே.சூர்யாவின் 'குஷி' படத்தின் ஹிந்தி ரீமேக்கில் நாயகியாக நடித்தவர் கரீனா கபூர். அந்த நேரத்தில் பாலிவுட்டில் டவுனாகியிருந்த தனது மார்க்கெட்டை சூர்யாவின் 'குஷி' படம் தூக்கி நிறுத்த, "இதற்கு கைமாறா நீங்கள் கேட்கும் உதவியை நான் கண்டிப்பாகச் செய்வேன்" என்று எஸ்.ஜே.சூர்யாவிடம் வாக்குக் கொடுத்திருந்தார் கரீனா. இப்போது எஸ்.ஜே.சூர்யா நடிக்கும் கள்வனின் காதலி படத்தில் ஒரே ஒரு பாடலுக்கு மட்டும் வந்து ஆடிவிட்டுப் போகுமாறு கரீனாவிடம் சூர்யா கோரிக்கை வைக்க...அம்மணியும் சந்தோஷமாகத் தலையாட்டிவிட்டாராம். பாலிவுட்டின் கனவுக் கன்னி கரீனாவைத் தமிழில் அறிமுகம் செய்யும் வாய்ப்பு தனக்கு அமைந்ததில் எஸ்.ஜே.சூர்யா குஷியில் இருக்கிறார். பரவாயில்லை, குஷியில் பிறந்த நட்பு, குஷியிலேயே முடிந்திருக்கிறது.

'சின்னா' படத்தில் ஒரு பாடல் காட்சியில் எனது உடைகள் சிறிது கவர்ச்சியாகத் தெரியும். இதற்காக நான் கிளுகிளுப்பாக நடித்ததாக தேவையில்லாமல் பப்ளிசிட்டி கொடுத்து வருகிறார்கள். என்னால் சிம்ரன், ஜோதிகா போல் கிளாமராக நடிக்க முடியாது. நான் ஹோம்லியாகத்தான் நடிக்க முடியும். நான் கவர்ச்சியாக நடிக்கவில்லை என்பதை 'சின்னா' படம் வந்தபிறகு நீங்களே புரிந்துகொள்வீர்கள். இதேபோல் நான் தமிழை விட்டுவிட்டு தெலுங்குப் பக்கம் கவனம் செலுத்துவதாக சொல்கிறார்கள். தமிழில் எனக்கேற்ற கேரக்டர்கள் அமையாத பட்சத்தில்தான் தெலுங்கில் கவனம் செலுத்துகிறேன். இதுதான் உண்மை என ஸ்டேட்மெண்ட் விடுகிறார் சிநேகா.




அனு
மிஸ்டர் பாண்டி

## பாய்ஸ் நாயகி ஜெனிலியாவின் அதிரடி அறிவிப்பு!

தமிழில் 'பாய்ஸ்' படத்தின் மூலமாக அறிமுகமாகி, 'சச்சின்' படத்தில் விஜய்யுடன் டூயட் பாடியவர், ஜெனிலியா டிசோசா. 'சச்சின்' படத்தின் மூலமாக வெற்றிப்பட நாயகியாக வலம் வரும் அவர், தெலுங்கு திரை உலகையும், தனது இளமையின் கீழ் வளைத்து வைத்துள்ளார்.

ஜெனிலியா அதிரடி அறிவிப்பு ஒன்றையும் வெளியிட்டுள்ளார். 'தமிழ், தெலுங்கு திரைப்படங்களில் வயதான நாயகர்களுடன் நடிக்க மாட்டேன்' என்பதே அந்த அறிவிப்பாகும்.

தமிழ் மற்றும் தெலுங்கு திரைப்படங்களில் நடித்து வரும் வயதான நாயகர்கள் அனைவருக்கும் என்னைவிட இரு மடங்கு வயது உள்ளது. எனக்கு இப்போதுதான் 18 வயது ஆகிறது. மேலும், தோற்றத்தில் நான் மிகவும் சிறிய பெண். எனவே, பெரிய நாயகர்களுடன் டூயட் பாடினால் காதலனுடன் பாடுவது போல் இருக்காது. மாமாவுடன் காதல் புரிவது போல் இருக்கும் என்று தனது அறிவிப்பிற்குக் காரணமும் கூறியுள்ளார் ஜெனிலியா.

## அஜீத்துக்கு ஜோடியாக நதியா?

எம்.குமரனில் இளமையான அம்மாவாக வந்து போன நதியாவுக்கு அஜீத்துடன் ஜோடியாக நடிக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

'நதியா நதியா நைல் நதியா' என்று ஒரு காலத்தில் இளசுகளை அலையவிட்டு ரகளை செய்த நதியா இப்போது இளமையான அம்மா நடிகையாகி விட்டார். எம்.குமரன் சன் ஆப் மஹாலட்சுமியில் அவர் 10 லட்சம் ரூபா சம்பளம் வாங்கினார். இது கோடம்பாக்கத்தில் இரண்டாம் வரிசை கதாநாயகிகள் வாங்கும் சம்பளமாகும்.



காஸ்டிலியான அம்மா நடிகையானாலும், பழைய அழகு நதியா சேச்சியிடம் இன்னும் அப்படியே மிஞ்சிக் கிடக்கிறது. கூடவே அதே பழைய பந்தாவும் போகாமல் அப்படியே இருக்கிறது.

'எம்.குமரன் சன் ஆப் மகாலட்சுமி'க்குப் பிறகு அவரைத் தேடி பல படங்கள் வந்தாலும், நதியாவின் பந்தா பிளஸ் அலப்பறை காரணமாகத் தயாரிப்பாளர்கள் நொந்து போனார்கள்.

"அம்மா கேரக்டரில் தொடர்ந்து நடிக்க எனக்கு விருப்பம் கிடையாது. அப்படியே அம்மா கேரக்டரில் நான் நடிக்க வேண்டுமென்றால் அது ரொம்ப முக்கியமான கேரக்டராக இருக்க வேண்டும். ஹீரோயின் அளவுக்கு நானும் பேசப்பட வேண்டும்.

ஹீரோயினுக்கு சமமாக எனக்கும் சம்பளம் தர வேண்டும்" என்று நதியா போட்ட 10 கமாண்ட்மெண்ட்ஸைக் கேட்ட தயாரிப்பாளர்கள் தலை தெறிக்க ஓடத் தொடங்கினர்.

இதனால் படம் ஏதும் இல்லாமல் ஒரு மூலையில் உட்காரும் நிலைக்குத் தள்ளப்பட்டார் நதியா. இது மட்டுமா?

இப்படியே விட்டால் மறுபடியும் தமிழ் இரசிகர்கள் நம்மை மறந்து போய் விடுவார்கள் என்று நினைத்தாரோ, என்னவோ அவசரம் அவசரமாக இரண்டு படங்களை மட்டும் குறைந்த சம்பளத்திற்கு ஒத்துக்கொண்டு நடித்து வருகிறார்.

இப்போது நதியாவைத் தேடி ஒரு சூப்பர் வாய்ப்பு வந்துள்ளதாம். அஜீத் நடிக்கும் 'காட்பாதர்' படத்தில் அஜீத்துக்கு ஜோடியாக நடிக்குமாறு நதியாவை அணுகியுள்ளாராம் இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார்.

'காட்பாதர்' படத்தில் அஜித் மூன்று வேடங்களில் நடிக்கிறார். அதில் அப்பா வேடத்தில் வரும் அஜித்துக்கு ஜோடியாக நடிக்குமாறு நதியாவை ரவிக்குமார் அணுகியுள்ளார். இதுகுறித்து யோசித்துக் கூறுவதாகச் சொல்லி அனுப்பியுள்ளாராம் நதியா.



ரமேஷ் - பூஜா
ஜித்தன்




## நி(க)னைவும்

விழிகளால்
வினைகள்
மீளுமென்றே
கண்களை
மூடிக்கொண்டே
கண்ணீர் வடிக்கிறேன்.

நினைவுகளால்
நீந்த முடியும்
என்பதாலே
விழித் தோணிகளை
விலை பேசுகின்றேன்.

கனவுகளால்
வாழமுடியும்
என்பதாலேயே
நித்திரைத்
தேவர்களை
கூலிக்கு
அழைக்கிறேன்.

வாடிக்கிடக்கும்
இதய புஷ்பங்கள்
பூத்துக் குலுங்கும்
போது

புன்னகை விலை
போகிறது.
மூடிக் கிடக்கும்
மௌன அறைக்குள்
தினமும் ஒரு ராகம்
பேச அழைக்கிறது.

சூடிக் கிடக்கும்
புன்னகைக்
குமரர்களுக்கு
தினமும் ஒரு
சண்டை
யார் அவளை
முத்தமிடுவது..

எனக்கே ஆச்சரியம்
எங்கே போய்ச்
சொல்வது?
விழித்துப்
பார்த்தேன்
விழித்திரைக்குள்
அவள் மட்டும்தான்..

*எஸ்.எம்.ஹஸீர்
வவுனியா.*

## இனியும் புதைந்திருக்க முடியாது.....



இனியும்
புதைந்திருக்க
முடியாது
சொற்களில் சிக்குப்படாத
என் வலிகளில்
உழன்றபடி....
அர்த்தமற்றுத் தொடரும்
நெருக்குதல்கள்...
வலிகளைத் தேற்ற
போதுமானதாயில்லை
உந்தன் வார்த்தைகள்...

நீ
மாறிவருவது குறித்தும்
சமத்துவம்... விடுதலை
அன்பு என
கட்டவிழ்கிறாய்
ஒரு பாடலை
என் செவிப்பறைகளை
கிழித்துப் போட்டபடி

வலிகள் மீதூர
புலரும் பொழுதுகளுக்குள்
இனியும்
புதைந்திருக்க முடியாது...
எந்தன் வலிகளனைத்தையும்
தூக்கி... எத்தி...
தூளாக்கி...
ஒரு பேரலைகடலில் தொலைக்க
மாற்றிக் கொண்டிருக்கிறது...
மிகவும்
வலியவளாய் எனை...
இனியும்
புதைந்திருக்க முடியாது
சொற்களில் சிக்குப்படாத
என் வலிகளில்
உழன்றபடி....!



*பாவகி, கொட்டகலை.*

## கூண்டில் கூட்டமைப்பு

காடு அவரின் வீடு
காட்டு நிர்வாகத்தின்
கைக் குழந்தைகள்
நீங்கள் தெரிவு செய்தவர்கள்!

அவர்களைத் தமிழினத்தின்
பிரதிநிதிகளாகத்தான் அனுப்பினோம்.
தமிழன் ஒருவனின்
உறவினர்களாக இருப்பதுதான்
வேடிக்கையும் சந்தேகமும்,
நிரம்பி.....
நெஞ்சு கிழிகிறது!
கண்ணீர் கரைகிறது!!

எங்கள் விருப்பம் சமாதானம்!
சர்வாதிகாரத்தின் விருப்பம்
வன்முறைகள்...
வன்முறைகளை வழிமொழிகிறார்கள்
எங்கள் பிரதிநிதிகளும்.

காட்டு நிர்வாகம்
கை தட்டினால்
கூட்டுக் கைகளின் குரல்
தெருக்களிலும் குரைக்கும்
மக்கள் மரணித்தாலும்
மௌனம் காப்பதுதான் வேடிக்கை!

எங்கள் பிரச்சினைகளை முன்
வைத்தால்
உங்கள் நெற்றியில்
துப்பாக்கி ரவை பொட்டு வைக்குமா?
தேசத்துரோகி பட்டம் கிடைக்குமா?

காட்டு மனிதனின்
கைக் குழந்தைகளே....
உயிருக்குப் பயமாக இருந்தால்
ஒதுங்கவிடுங்கள் அரசியலில் இருந்து
தகுதியுள்ளவர்கள் வரட்டும்.

*மனிதநேசன், யாழ்ப்பாணம்.*

## முடிவு என்ன?...

நூற்றுக்கணக்கான
கவிதைகளை
நூற்றுக்
கொண்டிருக்கின்றேன்.
நூற்றுக் கணக்கான
கனவுகளோடு
தோற்றுக்
கொண்டிருக்கின்றேன்.

கட்டிலில் வனவாசம்
செய்தே
இந்த இராமனின்
இளமை
கரைந்து
போயிருக்கிறது.

விசுக்கென்று வந்த
ஒரு மின்னலின்
சிரிப்பில்
நான் விபத்துப்பட்டேன்.

அன்றிலிருந்து
என் மேனி
தனிமையோடு
தர்க்கம் புரிந்தது.

எத்தனையோ சேவல்கள்
என் பருவ வயசை
எழுப்பிக் கொண்டிருந்தன.

என் பாராளுமன்றம்
கூடுவதற்கு முன்னால்
கலைந்து விடுகிறது.

ஏக்கமே எனக்கு
பலமாக இருப்பதால்
பலவீனத்தின் முன்னால்
பலவந்தமாக
இழுத்து வரப்படுகிறேன்.

ஆமாம்...
நீ கிடைப்பாயென்ற
நீ.....ண்ட நம்பிக்கையில்
ஒரு தசாப்தத்தையே
ஒத்திப் போட்டேன்.

*அப்துல் ரஹ்மான்,
அக்கரைப்பற்று.*

## வாழ்ந்து போகட்டும்

உணர்வுகளில்
எருமைச்சாயல் படிந்த
மனிதம் நிறைந்த
தேசத்து மூலைகளெங்கும்
கருங்கல்லாய்
மனித ஜீவிதம்.

கனவுகள் காண்பதும்
கனவாய்ப்போன
வாழ்க்கையில்
வேதனைகளின்
சாதனைகளால்
நிரம்பி வழியும்
கண்ணீர்த் தடாகங்களில்
மின் உற்பத்தி செய்து
ஒளி வழங்கினாலும்
அகலாது எம்
தேசத்தின் இருள்.

பொருளாதாரச் சுழியில்
சிக்கிக்கொண்டு விழிக்கும்
ஜீவித மலர்களை
விலைவாசிச் சுனாமி
அள்ளிக்கொண்டு
போகின்ற
கொடுமைகளுக்கான
நிவாரணங்கள் இல்லாதது
ஏழைக் கிராமங்களுக்கு
மாத்திரமல்ல.
எல்லா
மனங்களுக்கும்தான்.

தீராத எங்கள்
சமாதான நதிகளின்
தாகங்களுக்கு
மாறாத பேச்சு வார்த்தை
குடம் சுமந்து போனவர்கள்
இளைப்பாறி இளைப்பாறி
இளைத்துப் போனதால்
ஆறாத எங்கள்
துயரக் காயங்கள்
புரையோடிப்போயின

ஆனாலும்
என்றாவது பாலையில்
மழை வருமென்று
நம்பிக்கைக்கொண்டு
வானத்தைப் பார்க்கும்
மக்களுக்கு
சமாதானம் மழையாய்
பொழியாதுபோனாலும்
பரவாயில்லை.
புதிய இடியாய்
விழாமலிருந்தால்
அதுவே போதும்!

மீண்டும்
புல்லிலைத்தின்று
புல்லை உடுத்தி
கல்லை எடுத்து
வேட்டையாடிய
ஆதிமனிதனைப்
போலவேனும்
மக்கள் வாழ்ந்துவிட்டுப்
போகட்டும்.

*பெய்யன் நடராஜ்,
டோஹா கட்டார்.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

*வாழ்க்கைத் தளத்தில் தினம் தினம் காணவும் உணரவும் நேரும் சின்னச் சின்னச் சித்திரங்களை இயற்கையான நிறங்களுடன் தீட்டிக் காட்டுவனவாக ஜப்பானியக் குறுங் கவிதைகள் உலகம் முழுவதும் புகழ் பெற்றிருக்கின்றன.*

*ஓரிரு வரிகளில் காட்சிகளைச் சித்திரப்படுத்துவதோடு, உணர்வுத் தெறிப்புகளையும்*

*தமிழிலும் எல்லாக் கவிஞர்களும் முயன்று பார்த்திருக்கிறார்கள். பாரதியின் அக்கினிக் குஞ்சு போல, மறக்க முடியாத குறுங் கவிதைகள் ஏராளம்.*

*அந்த வகையில் இளங் கவிஞர் சி.கே. சந்திரசேகரின் சில குறுங் கவிதைகள் இந்த வாரம். சந்திரசேகர் தமிழ் திரைப்படத் துறையில் பணியாற்றுபவர். இயக்குனர் பாரதிராஜாவின் உதவியாளர்களிலொருவர். பிரபல ஒளிப்பதிவாளர் சந்தோஷ் சிவனின் 'டெரரிஸ்ட்', 'மல்லி' படங்களுக்கு வசனம் எழுதியவர்.*

*'கைக்குள் பிரபஞ்சம்', 'என்னோடு நான்' என்ற இரு கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார்.*



யாரோ தெரியவில்லை
என்னை அசைத்துவிட்டு
எனக்குள்ளே
படர்ந்துவிட்டு
யாருடனோ போகிறாள்
யாரோ தெரியவில்லை.

நாம்
காதலித்தோம்
என்பது சரி இல்லை;
நமக்குள் இருக்கும்
காதலை
கண்டெடுத்தோம்
என்பதே சரி.

தனிமை சிறை என்பது
தவறு
என்னோடு நான்.

ஒளிகளில் எல்லாம்
என்னால் பார்க்க
முடிகிறது
இருளில்தான்
என்னையே பார்க்க
முடிகிறது.

விரும்பி வந்து
எப்போதாவது என்னைப்
பார்த்து விடுகிறது
உன் கண்ணீர்த் துளி
அது முடியாமல் போகிறது
உன் கண்களுக்கு...

மழையாய் நீ...
நனைகிறது மனது.

உளிக்குள்
சிலைகள்
இடம் பெயரும்
கற்களுக்கு மெதுவாய்...

மீனுக்கு உயரம்
எல்லாம்
அது நீருக்குள் போகும்
ஆழம்தான்.

மூங்கில் காட்டில் தீ
கேட்டது
புல்லாங்குழல் கதறல்...

வெறுங்காலுடன்தான்
நடந்து போனாள்
மனசெல்லாம் கொலுசுச்
சத்தம்

யாருடனோ
போகிறாள்

நீ கவிதைத் திரி;
நான் மெழுகு.
என் உருகுதலா உன் மகிழ்வு?

எழுதியது உன்
முகவரிதான்
கடிதம் முடித்த
சந்தோஷத்தில் மனம்!


அள்ளிய விரல்கள்
ஆனந்தத்தில்
கையெல்லாம் உன்
காலடி மணல்

எனக்கு உன்னைத்
தெரிவதற்கு
முன்பாகவே
காதலைத் தெரிந்திருந்தது
உனக்கு என்னைத் தெரிந்திருந்தும்
காதலைத் தெரியாமல் இருக்கிறது


கிளம்பிய போதுதான்
தெரிந்தது
ரயிலில் நீ
தண்டவாளத்தில் நான்.

கேட்பாரற்றுக் கிடந்தது
புல்லாங்குழல்.
அதன் உள்போய்
வெளிவந்து
விளையாடிப் போனது
காற்று.
பிறந்த இசை
தனது என்று
சொந்தம் கொண்டாடியது
புல்லாங்குழல்.
பிறகு பேச்சு முச்சற்றுப் போயிற்று.
தன் தவறை எண்ணி
வருத்தப்பட்ட புல்லாங்குழல்
காத்திருந்தது காற்றுக்காய்....

## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி




பெயர் : து. மணிராஜா
வயது : 21
முகவரி : திராய்மடு 2ஆம் குறுக்கு, முகத்துவாரம்
பொழுதுபோக்கு: பத்திரிகை, ரீ.வி.



பெயர் : வி.கே. பிரசாத்
வயது : 18
முகவரி : ஏழாலை தெற்கு, மயிலங்குளம், சுன்னாகம்.
பொழுதுபோக்கு : பத்திரிகை, ரீ.வி., கிரிக்கெட்.



பெயர் : எம்.எம். நளீம்.
வயது : 19
முகவரி : 93/1, வதிஜ்ரா வீதி, கிண்ணியா – 03
பொழுதுபோக்கு : கவிதை, சிறுகதை எழுதுதல்



பெயர் : க.சபேஸ்.
வயது : 23
முகவரி : P.O.Box 80738, Doha, Qatar.
பொழுதுபோக்கு : கெரம், விளையாடுதல், பத்திரிகை.




# குண்டு உடம்பைக் குறைக்க.....



உடல் இளைத்திருக்கிறது என்று ஆதங்கப்படுபவர்கள் ஒருபுறம் இருக்க, உடல் பருமனாக இருக்கிறதே என்று கவலைப்படுபவர்கள் மறுபுறம் இருக்க வெளியே சொல்ல முடியாமல் உடலாலும் உள்ளத்தாலும் தினதினம் வருந்தி வியாதிகளை வரவழைத்து துன்புறுவோர் நம் நாட்டில் பல்லாயிரக்கணக்கில் உள்ளனர்.

உடலில் ஏற்படும் சில காரணங்களாலும் இயற்கையின் காரணங்களாலும் சில உணவுவகை காரணங்களாலும் உடல் பருமன் ஆவது உண்டு. அதிகமாக உண்பதாலோ - உடலுக்குப் போதுமான வேலைகள் த்ராமல் இருப்பதாலோ



என்டோக்ரைன்கள் எனப்படும் நாளமில்லா சுரப்பிகள் வியாதிகளாலோ, மத்திய நரம்பு மண்டலக் கோளாறுகளாலோ எடை அதிகமாக வாய்ப்புகள் அதிகமாக உண்டு.


**என்ன தொல்லைகள்?**

பருமனான உடலில் நிரந்தரமாகவே சில வியாதிகள் குடியிருப்பதுண்டு சுறுசுறுப்புடன் இல்லாமல் இருப்பதுடன் மிகவும் சிரமப்பட்டு மூச்சு விடுவார்கள். அதுவும் பெருமூச்சாகவே இருக்கும். உடல் எடை அதிகமாக இருப்பதால் கீழ்க்காணும் உபாதைகள் இருப்பதுண்டு.

இரத்த அழுத்த நோய், இருதய முறிவு மற்றும் மாரடைப்பு நோய், ஹிரண்யா எனப்படும் குடல் பிதுக்க நோய், நீரிழிவு நோய், எலும்பு மற்றும் மூட்டுக்கள் பற்றிய வியாதிகள், அறுவை சிகிச்சை செய்துகொள்வதில் சிரமம், சருமத்தில் உண்டாகும் புண்களும், காயங்களும் எளிதில் ஆறாமை. கால்களில் பாதங்கள் வீங்கி நீரால் நிரம்புவதால் மரத்துப் போதல், பின் உணர்ச்சி இல்லாமல் போதல். மிகவும் வியர்வை உண்டாகி களைப்த் தரும், பசியை மறைக்கும், ருசியைக் குறைக்க வைக்கும். வயிறு உப்பல், அஜீரணம், கொஞ்சம் சாப்பிட்டாலும் போதும் எனத் தோன்றும். மற்றும் நெஞ்செரிவு, புளித்த ஏப்பம், வாய்வு, மற்றும் உடல் வலிகள், மலச் சிக்கல், சிறுநீரகம் பழுதடைதல், குடும்ப வாழ்வில் வெறுப்பு போன்றவை இருக்கும்.

சுருங்கச் சொன்னால் பருமனான உடலால் பலன் எதுவும் இல்லை. மாறாக மேற்காணும் வியாதிகளைச் சுமப்பதே அதன் பணி. இதில் பரம்பரையாக வருவது, நாளமில்லா சுரப்பிகளால் வருவது என்கிற குற்றச்சாட்டுக்களை விட நமது உணவுப் பழக்க வழக்கங்களே முக்கிய காரணமாகும்.

சிறு வயது முதற்கொண்டே உடல் பருமனாகாமல் இருக்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். கலோரிகளால் எடை கூடுகிறது. அதிக உழைப்பினால் எடை குறைகிறது. உடல் உழைப்பினால் விரயமாகும் கலோரிகளை விட சாப்பிடும் ஆகாரங்களில் கலோரிகள் அதிகம். இதனால் உடல் கொழுத்துவிடுகிறது. இந்த வயதில், இந்த உயரத்தில் இத்தனை எடைதான் இருக்க



வேண்டும் என்கிற நியதிப்படி வாழ்தல் வேண்டும்.

# உடல் வளர்க்கும் வெந்தயம்

கீரை வகைகளில் மிகவும் குளுமையானது வெந்தயக் கீரை, தாரளமாகச் சூரிய வெளிச்சமும், தண்ணீரும் கிடைக்குமிடத்தில் செழித்து வளரும். வருடா வருடம் விதைத்து வளர்க்கும் இந்த மூலிகைக் கீரை அதிகபட்சம் ஒரு மீட்டர் உயரத் துக்கு வளரும்.

உடலை ஆரோக்கியமாகவும் வயிற்றைச் சுத்தமாகவும் வைக்கும் வெந்தயக்கீரையில் உலக சுகாதாரக் கழகத்தின் கணிப்புப்படி இதன் புரதச்சத்தின்



அளவு 65. நாம் உண்ணும் நூறு கிராம் அளவு கீரையில் 86.1 சதவீதம் ஈரச்சத்தும், 4.4 புரதச்சத்தும் 22 சதவீதம் நார்ச்சத்தும் 1.5 சதவீதம் தாதுச்சத் துக்களும் 0.9 சதவீதம் கொழுப்புச் சத்தும் அடங்கியுள்ளது. இந்த அளவு வெந்தயக்கீரை 49 கலோரிச் சத்து தருகிறது.

வெந்தயக் கீரையோடு, பாசிப்பருப்பைச் சேர்த்து உண்பதால் கல்லீரல் பலப்படுகிறது. வாய் வேக்காடு வராமல் காப்பாற்றுகிறது. பருப்பு சேர்த்து சுவையாகத் தயாரிக்கப்படும் வெந்தயக்கீரையை நெய்சேர்த்து சோற்றோடு பிசைந்து சாப்பிடுவது பலருக்கும் பிடித்தமானது. உப்பு, புளி, காரம் சேர்த்து வெந்தயக் கீரையைத் தொக்காக்கி பல நாட்களுக்குப் பயன்படுத்தலாம். பருவத்திக்கு வரக்கூடிய பெண்களின் இரத்தவிருத்திக்கு அவசியமானது.

வெந்தயக்கீரையில் விட்டமின் ஏயும், சுண்ணாம்புச் சத்தும் இருப்பதால் மாரடைப்பு, கண்பார்வைக் கோளாறு, வாதம், நாள்பட்ட சொறி, சிரங்கு என்று அத்தனைக்கும் அருமருந்தாகிறது. இக்கீரையைப் பச்சையாக அரைத்து தீக்காயங் களுக்குப் பற்றுப் போட்டு வைப்பதால் காயம் குணமாவதோடு குளிர்ச்சியாகவும் இருக்கும்.

சீஸனில் இந்தக் கீரையை நிறைய வாங்கி சுத்தப்படுத்தி காய வைத்து, காற்று புகாத டப்பாவில் சேமித்து வைத்துக் கொண்டு வருடம் முழுவதும் உபயோகிப்பதால் லைஸின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யலாம்.

வெந்தயத்தை அப்படியே உபயோகிப்பதால் கசப்பாகவும், விநோத வாசனையும் உடையதாக இருப்பதால்தான் இதனை வறுத்துப் பொடித்துப் பயன்படுத்துகிறோம். இதன் கசப்பு ருசியும், பாகற் கசப்பைப் போல் ஒருவித ருசியாக நாவுக்குப் பழகி விடுகிறது. இந்தக் கசப்பு ருசிக்குக் காரணமான க்ளைக்கோசைட்ஸ் வெந்தயத்தில் தூக்கலாக இருக்கிறது. நல்ல பசி கிளப்பியாக இந்தக் கசப்பு ருசி இருப்பதோடு உணவு ஜீரணத்துக்கு அத்தியாவசியமாக பித்த நீரை தாராளமாகச் சுரக்கத்தூண்டி விடுகிறது. அசைவ உணவுக்காரர் களுக்கு இது நன்மை கூட்டுகிறது.

வெந்தயத்தில் பாஸ்பேட்டுகளும், லிஸிதின், நியூக்லியோ அல்புமின் நிறைந்து இருப்பதால் உடல் வளர்ப்பதோடு பசியின்மையைப் போக்குகிறது. அனிமியா என்னும் இரத்த சோகை அண்டாது. நிக்கெட்ஸ் நோய்க்கு பரிகாரமும் இதுவே. நீரிழிவு காரர்களுக்கு நல்லது.

தினமும் இரு கரண்டி வெந்தயத்தைப் பொடித்தோ, முழுசாகவோ சாப்பிட்டு வந்தால் இரத்தத்திலுள்ள கூடுதல் சர்க்கரை கட்டுப்படும். அல்லது வெந்தயத்தை ஒரு டம்ளர் தண்ணீரில் ஊறவைத்து தண்ணீரை மட்டும் வடிகட்டி குடிக்கலாம்.

பாலூட்டும் தாய்மார்களுக்குப் பால் நன்றாகச் சுரக்க வெந்தயம் வறுத்து இடித்துக் கொடுக்கலாம்.

மாதவிடாய் சமயத்தில் அதிக அளவு இரத்தப் போக்குடையவர்களுக்கும் பிரசவித்த பெண்களுக்கும் வெந்தயத்தை வறுத்து இடித்து நெய், சீனி, சேர்த்து ஹல்வா செய்து கொடுப்பது இழக்கும் தெம்பை மீட்க உதவும்.

நல்ல ருசியான உணவு தயாரிப்புகளின் வாசனை வந்தும் கூடிய பசி கிளம்பாமலோ நாவில் ருசி மரத்துப் போயிருந்தாலோ கூட இதுவே மருந்து.

கணையம், கல்லீரல் வீக்கம், வயிற்றுப் போக்கு, அஜீரணம், நெஞ்சு எரிச்சல் போன்ற பல்வேறு உடல் உபாதைகளுக்கும் வெந்தயம் ஒரு மாமருந்து. வயிற்றுக் கோளாறுக்கு மட்டுமல்லாது. வெந்தயநீர்,



காய்ச்சலையும் கட்டுப்படுத்தும் சிறுநீர்ப்போக்கை சீராக்கும்.

இயற்கை முறையில் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு வெந்தயம் உதவுவதாக சமீபத்தில் கண்டுபிடித் துள்ளனர்.

பெண்களுக்கு முடியழகு தான் முதன்மை யானது. முடிகொட்டாமல் செழித்து வளரவும் தலைக்கு குளுமையளிக்கவும் வெந்தயத்தை சீயாகாயோடு சேர்த்து அரைத்து வைத்துக் கொண்டு தலைக்குக் குளித்து வருவது கைமேல் பலன் தரும்.

அளவுக்கு மிஞ்சி நிறைய முடி உதிர்ந்து என்ன செய்வது என்று கவலைப் படுபவர்களுக்கு உதவுவதும் வெந்தயம் தான். வெந்தயத்தைத் தண்ணீரில் ஊற வைத்து வெண்ணெய் போன்று அரைத்து தலையில் தேய்த்து வைத்து அரைமணிநேரம் ஊறியதும் குளிக்க வேண்டும். ஓரிரு முறையிலேயே உடனடிப்பலனை எதிர்பாராமல் தொடர்ந்தும் சில மாதங்களுக்கு வாரம் ஓரிரு முறை வீதம் பின்பற்ற வேண்டும்.

பருவ வயதில் முகத்தில் நிறைய பருக்கள் வந்து தாங்கமுடியாத எரிச்சலிருந்தால் வெந்தயத்தை அரைத்து அப்பேஸ்ட்டை அப்பி வைத்து வந்தால் எரிச்சல் அடங்குவதோடு பருக்கள் காணாமல் போய்விடும். பருவ வயது தாண்டிய பிறகு உடல் உஷ்ணத்தால் பருக்கள் வந்தால் ஒரு தேக்கரண்டி வெந்தயத்தை ஒரு கப் தயிரில் ஊற வைத்து குறைந்தது மூன்று, நான்கு நாட்களுக்காவது அதிகாலையில் எழுந்ததும் குடித்து வர வேண்டும்.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது -ஷோபா-

## அப்பிள் சுவீற்

50 அப்பிள் சுவீற்ஸ்

***தேவையான பொருட்கள்***

பால்மா - 200 கிராம்
சீனி - 125 கிராம்/ 6 மே.க. (நிரப்பி)
மாஜரின் - 1 மே.க. (நிரப்பி)
தேங்காய்ப்பூ - 3 மே.க. (நிரப்பி)
தண்ணீர் - 5 மே.க.
கராம்பு - 50.
வனிலா - 1 மே.க.
பச்சை கலரிங் - 1 தே.க.
ஏலப்பொடி - 1 தே.க. (மட்டமாக)

***செய்முறை***


பால்மாவை உலர்ந்த பாத்திரத்திலிட்டு தேங்காய்ப்பூவும் சேர்த்து நன்கு கலந்து வைத்துக் கொள்க.

கராம்பைக் கழுவிக் காயவைத்து எடுத்துக் கொள்க.

தாச்சியை அடுப்பில் வைத்து சீனியையிட்டு, 6 மேசைக் கரண்டி தண்ணீர் விட்டு காய்ச்சுக. பாகு காய்ச்சும்போது முதலில் சீனி முழுவதும் கரைந்து, வெளுவெளுப்பான நுரைப்பதும் தோன்றி மறைந்து பாகு பொங்கி கொதித்துத் தடிக்கத் தொடங்கியதும் மாஜரினை அதனுள் போட்டு உருக விடவும்.

மாஜரின் உருகியதும் பால்மா, தேங்காய்பூ, கலந்து வைத்துள்ள கலவையைக் கொட்டி, கரண்டியால் அடிப்பிடிக்காவண்ணம் இடைவிடாது கிளறி, கலவை திரளத் தொடங்கியதும், வனிலா, ஏலப்பொடி, கலரிங் என்பன சேர்த்து கலந்து இறக்கிக் கொள்க. கலவை சூட்டுடன் இருக்கும் போதே, கைகளுக்கு மாஜரின் பூசிக்கொண்டு நெல்லிக்காயளவு உருண்டைகளாக உருட்டிக் கொண்டு கராம்பைக் காம்போடு எடுத்து நடுவில் குற்றிக்கொள்க.

# வாசனைத் திரவியம் பயன்படுத்துபவரா நீங்கள்?



தற்போது பல வகையான் நறுமணப் பொருட்களும், நாற்றம் நீக்கிகளும், டியோடரண்ட் அதிக அளவில் வரத் தொடங்கியுள்ளன.


இவற்றை பூசுவதால் உடலில் எந்த நேரமும் ஒருவித நறுமணம் வீசுகிறது. இதனால் நாள் முழுக்க புத்துணர்ச்சியுடன் சுறுசுறுப்பாக இயங்க முடிகிறது.

நேரடியாக உடலின் தோலில் பூசுவது டியொடரண்ட் இதை ஆடைகளின் மேல் பயன்படுத்துவதில்லை. வியர்வை மூலம் பக்டீரியாவால் ஏற்படும் துர்நாற்றத்தைக் கட்டுப்படுத்த டியோடரண்ட் உதவுகிறது. வியர்வை உற்பத்தியாவதை இது தடுக்காது.




குளித்த பின் 15 நிமிடங்களுக்குப் பிறகு டியோடரண்டைப் பயன்படுத்தினால், நீண்ட நேரம் நறுமணம் வீசும்.

வெளியில் செல்வதற்கு அரை மணி நேரத்துக்கு முன்பாக டியோடரண்டை பயன்படுத்துவது நல்லது.



# ஒரு தாய் மகள் 33


**சென்ற வாரம்**
தனக்கிருந்த அனைத்து சோகங்களையும் அடக்கி வைத்துக்கொண்டு பேஜ் தனது மகளிடம் ஆறுதலான வார்த்தைகளால் கதைத்துக் கொண்டிருக்கிறாள். ஆனால் பேஜ் கதைப்பது எதுவும் மகளுக்கு கேட்டதாகத் தெரியவில்லை.

இப்போதுள்ள கோபம் வேண்டுமானால் ஒருநாள் தணியக் கூடும். ஆனால் இனிமேல் இவர் மீது ஒரு போதும் நம்பிக்கை ஏற்படப் போவதில்லை....

"இல்லை, பேஜ். நீ சரியாகத் தான் புரிந்து கொண்டிருக்கிறாய்" எனக் கூறி அவள் இதயத்தை நொறுக்கினான். "ஸ்டிபானியுடன் உள்ள உறவை முறித்துக் கொள்வதாக நான் சொல்லவில்லை. ஆலி. இப்படிக் கிடக்கும்போது நம்மைப் பற்றி முடிவு எடுக்க இது சமயமில்லை என்றுதான் சொன்னேன்...."

"ஓகோ, அப்படியா?" என்று உரக்க ஆரம்பித்தவள் உடனே தன்னை மறுபடியும் கட்டுப்படுத்திக் கொண்டாள். "உங்கள் அழகான காதலியைப் பார்க்காமலும் இருக்க மாட்டீர்கள். என்னையும் வீட்டை விட்டு போகச் சொல்ல மாட்டீர்கள். நீங்களும் போகமாட்டீர்கள். ஏனென்றால், அதற்கெல்லாம் இது சமயமில்லை! அப்படித்தானே? நோப் ப்ராப்ளம் பிராட் எத்தனை காலம் வீட்டில் தங்கியிருக்க முடியுமோ அத்தனை காலம் இருங்கள்.

"ஆனால் ஞாபகமாக உங்கள் கல்யாணத்துக்கு ஒரு இன்விடேஷன் மட்டும் எனக்கு அனுப்பி விடுங்கள்!"



அவள் கண் முனைகளைக் கண்ணீர் உறுத்திக்கொண்டிருந்தது. உதட்டில் கோபம் துடித்துக் கொண்டிருந்தது. ஆனால், ஆஸ்பத்திரி வெயிட்டிங் அறையில், உள்ளே அருமை மகள் நினைவற்றுக் கிடக்கும் இந்தத் தருணத்தில், பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதை அவளும் உணர்ந்திருந்தாள். அவனும் உணர்ந்திருந்தான்.

"சரி, விடு. இப்போதைக்கு எல்லாம் இப்படியே இருக்கட்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்றான் பிராட்.

"எவ்வளவு சுலபமாகச் சொல்லி விட்டீர்கள்!" என்று இகழ்ச்சியுடன் சிரித்தாள் பேஜ். "நீங்கள் உங்கள் இஷ்டம் போல நடந்து கொள்ளுங்கள்! நான் கண்ணை மூடிக்கொண்டு இருக்கிறேன்! சரிதானா?"

"எதுவானாலும் நீ முடிவு செய். எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை."

"இருக்கட்டும். நானே முடிவு செய்கிறேன். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகச் சொல்கிறேன். நீங்கள் இப்படியே இருக்க நான் விட்டு விடுவேனென்று மட்டும் நினைக்காதீர்கள். எத்தனை தொல்லை தர முடியுமோ அத்தனையையும் தரத்தான் போகிறேன். உங்கள் வினையை நீங்கள் அனுபவிக்காமல் நழுவ முடியாது!" என்று பேஜ் சீறியபோது அவனால் எதுவும் பேச முடியவில்லை. ஒரு நீண்ட நிமிடம் அவளைப் பார்த்தபடி நின்றிருந்தான். பிறகு கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான். கொஞ்ச நேரம் தனியே இருக்க அவன் தவித்தான். உணர்ச்சிகள் கொந்தளிக்கும் இந்த நேரம், முகத்தின் மீது யதார்த்தம் மோதும் இந்தக் கணம், அவனால் தாள முடியாத பயங்கரமாக இருந்தது. கண் இமைக்கும் வேளைக்குள் தங்கள் வாழ்க்கை தலை கீழாக மாறி விட்டதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

"சரி, பிறகு பேசலாம். நான் ஆபீஸ்"க்குப் போக வேண்டும்" என்றான். பேஜையும் ஆலிஸனையும் இந்த ஆஸ்பத்திரியையும் விட்டு ஓடி ஆபீஸில் ஒளிந்துகொள்ள வேண்டும் போல இருந்தது. ஸ்டிபானியிடம் தஞ்சமடைந்து அவளிடம் ஆறுதல் பெற வேண்டும் போல இருந்தது.

"உங்களைக் கூப்பிட வேண்டுமென்றால் எங்கே கூப்பிடட்டும்?" என்று பேஜ் காட்டமாகக் கேட்டாள்.

"எங்கே கூப்பிடட்டும் என்றால் என்ன அர்த்தம்? அதுதான் சொன்னேனே, ஆபீஸ்"க்குப் போகிறேன் என்று?"

"வேறு எங்காவது போனாலும் போவீர்கள் என்பதால் கேட்டேன்."

அவள் எதைக் குத்திக் காட்டுகிறாள் என்று அவனுக்குப் புரிந்தது. அவமானத்திலும் கோபத்திலும் அவன் முகம் சிவந்தது.

**எழுதியது: டேனியல் ஸ்டீல்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

"வேறு எங்காவது போனால் ஆஸ்பத்திரி ரிசப்ஷனுக்குத் தெரிவியுங்கள்" என்றாள் பேஜ்.

"நிச்சயமாக" என்றான் அவனும் சூடாக.

'ராத்திரி வீட்டுக்கு வருவீர்கள் இல்லையா?' என்று அவள் கேட்க விரும்பினாள். மறுகணமே எதுவும் கேட்கக்கூடாது என்ற வைராக்கியம் பிறந்தது. அவன் சொல்லக்கூடிய பொய்களைக் கேட்க அவளுக்குப் பிடிக்கவில்லை. அவனுடன் வாக்குவாதம் செய்யப் பிடிக்கவில்லை. அவனை அவமதிக்கப் பிடிக்கவில்லை. அவன் கூறக்கூடிய சமாதானங்களைக் கேட்கப் பிடிக்கவில்லை. அவள் முற்றிலுமாக நொறுங்கிப் போயிருந்தாள்.

"அப்புறமாய் நான் கூப்பிடுகிறேன்" என்று சொல்லிவிட்டு அவன் வேகமாக வெளியேறி அவள் கண் பார்வையிலிருந்து மறைந்து போனான். கோபம், வருத்தம், குழப்பம், துரோகம் செய்யப்பட்ட காயம், ஆத்திரம் - எல்லாவற்றுக்கும் மேலாக இனம் தெரியாததோர் பீதி அவளைப் பிடித்துக் கொண்டது. இனி என்ன ஆகப் போகிறதோ என்ற பீதி.

திரும்பவும் ஆலிஸனைப் போய்ப் பார்த்து விட்டு ஆண்டியின் பள்ளிக் கூடத்துக்குச் சென்றாள்.

ஆண்டிக்காக ஸ்கூலுக்குப் போவது, காத்திருப்பது, அவனுடன் இருப்பது, அவனை வீட்டுக்கு அழைத்துப் போவது முதலான வாடிக்கையான அலுவல்களைக் கவனித்தபோது மனசுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. அன்று பிற்பகல் பூரா அவனுடன் இருந்து விட்டு மீண்டும் ஜேனின் வீட்டில் அவனைக் கொண்டு போய் ஒப்படைத்தாள்.

"ரொம்பவும் உடம்பை வருத்திக் கொள்கிறாய்" என்று தாரென்ஸனைப் போலவே ஜேனும் அவளை அன்புடன் கண்டித்தாள்.

"வேறு என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறாய்? ஆலி ஆஸ்பத்திரியில் அப்படிக் கிடக்கும் போது வீட்டில் உட்கார்ந்து கொண்டு டிவி பார்க்கவா தோன்றும்" என்ற பேஜ், ஆண்டியை முத்தமிட்டு "ஆபீஸிலிருந்து வரும்போது அப்பா உன்னை வீட்டுக்கு அழைத்துப் போவார். அதுவரை இங்கே சமர்த்தாய் இருக்கணும். என்ன? நான் காலையில் வருகிறேன்" என்றாள்.

இரு சின்னக் கைகளாலும் குழந்தை ஆண்டி அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டான். அவன் மேனியிலிருந்து வந்த இனிய மணமும், முடியின் மென்மையும் அவளைப் பரவசப்படுத்தின. "ஐ லவ் யூ, கண்ணா" என்றாள்.

"நானும்தான் அம்மா" என்று ஆண்டி சிரித்தான். "எனக்காக ஆலிக்கு ஒரு முத்தம் கொடுக்கிறாயாம்மா?"

"கட்டாயம்டா, கண்ணா" என்று மறுபடி அவனை முத்தமிட்ட பேஜ், சரியாய் ஏழே காலுக்கெல்லாம் ஆஸ்பத்திரியைத் திரும்ப அடைந்தாள். எவ்வளவு நேரம் முடியுமோ அவ்வளவு நேரம் ஐஸியுவில் ஆலிஸன் பக்கத்திலேயே இருந்தாள். ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள். அது சௌகரியமாகவே இல்லை. சுவரில் தலையைச் சாய்த்துக் கொண்டாள். கண்ணை மூடிக்கொண்டாள். எப்போது மறுபடி கூப்பிடுவார்களோ என்று நினைத்துக் கொண்டாள். ஐஸியுவில் யாரையும் நீண்ட நேரம் தங்க அனுமதிப்பதில்லை. நர்ஸ்களுக்கு இடைஞ்சல், அத்துடன் பெரும்பாலான நோயாளிகள் மோசமான நிலையில் இருந்தார்கள். விசிட்டர்கள் வருகையினால் அவர்களுக்கு எந்தச் சந்தோஷமும் ஏற்படப் போவதில்லை....

"எப்படி உன்னால் இங்கே உட்கார்ந்திருக்க முடிகிறது?" என்று குரல் கேட்டது.

தாரென்ஸன்.

கண்ணை மெதுவாகத் திறந்தவள் நோஞ்சலாய்ப் புன்னகை செய்தாள். காலோடு தலை களைப்பு அவளை ஆக்கிரமித்திருந்தது.

(தாய் தொடர்வாள்.....)

# பிரபாகரன் என் வீட்டுக்காரருக்கு உதவுவதா சொல்லியிருந்தார்......

**- வீரப்பனின் மனைவி பேட்டி**


முத்துலட்சுமி

**சேலத்தில் உள்ள நெருக்கமான சந்துக்களுக்கிடையே அமைந்த ஒரு வீட்டில் வீரப்பனின் மனைவி முத்துலட்சுமியைச் சந்தித்தோம். நிறைய மாறியிருக்கிறார், அமைதியாகப் பேசுகிறார்.**

"கருணாநிதி ஆட்சியிலேயே அவரு சரணடையத் தயாராத்தான் இருந்தாரு. அவருக்காக தனி விசாரணை, பங்களாவும் ஏற்பாடு பண்ணுவதா கருணாநிதியும் சொன்னாரு. ஆனா பெரிய மனிதர்தான் என் புருஷன்கிட்ட, அப்படியெல்லாம் சரணடையாதீங்க, கருணாநிதி சொல்றத நம்பாதீங்கன்னு சொல்லி கெடுத்துட்டார். சரணடைஞ்சிருந்தாருன்னா இன்னிக்கு என் வாழ்க்கையே மாறியிருக்கும்"

***வீரப்பனுக்குப் பிறகு வாழ்க்கை எப்படியிருக்கிறது?***

"கையில அஞ்சு பைசா கிடையாது. பொட்டப் பிள்ளைங்க எதிர் காலத்துக்காக பேங்குல மூணு லட்ச ரூபாய் போட்டு வச்சிருந்தேன்.

அதையும் போலிஸ்காரங்க பிடுங்கிக்கிட்டாங்க. இப்ப சாப்பாட்டிற்கே கஷ்டமா இருக்கு. பிள்ளைகளை படிக்க வைக்கவும் முடியல அவர் மட்டும் இந்நேரம் உயிரோடு இருந்தாருன்னா, நாங்க எங்க குடும்பத்தோட அமெரிக்காவிலோ, இலங்கையிலோ, செட்டிலாகியிருப்போம். கொஞ்ச நாளைக்கு முன்னாடிதான் விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரன் என் வீட்டுக்காரருக்கு உதவுவதா சொல்லி ஏற்பாடு செஞ்சிட்டிருந்தாரு எல்லாம் போச்சு."


சத்திய மங்கலம் காட்டுப்பகுதி

**அரசாங்க உதவிகள் எதுவும் உங்களுக்குக் கிடைக்க வில்லையா?**

"இதுவரை இல்லை. முத்து லட்சுமிகிட்ட நிறையப் பணம் இருக்கு அவங்களுக்கு அரசு உதவி தேவை இல்லைன்னு முதல்வர் சொல்லிட் டாங்களாம் என்னை விடுங்க. என் பொட்டப் பிள்ளைகளின் எதிர் காலத்துக்காவது உதவி செய்யக் கூடாதா? என் புருஷனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே அரசு உதவி செய்யுது. அதே மாதிரி போலிஸ்காரங்களால் பாதிக்கப்பட்ட என்னைப் போன்ற குடும்பங்களுக்கும் அரசு உதவி செய்யக் கூடாதா?

என்புருஷனை வச்சு எத்தனையோ பேர் கோடி, கோடியாச் சம்பாதிச்சாங்க அவங்ககூட எனக்கு ஆறதலா ஒரு வார்த்தை சொல்லலீங்க"


முத்துலெட்சுமி

**உங்கள் கணவர் சரணடைந்திருந்தால் இந்தப் பிரச்சினைகளைத் தவிர்த்திருக்கலாமே?**

**உங்களுக்கு மீண்டும் ஒரு வாழ்க்கை துணையாக, கடைசி வரை உதவியாக இருக்க முன்வரும் ஆணை, ஏற்றுக்கொள்வீர்களா?**

பதினாறு வயசுல அவரை (வீரப்பன்) கல்யாணம் செஞ்சேன். நாலே வருஷம்தான் அவரோடு காட்டுல குடும்பம் நடத்தினேன். அதுக்கப்புறம் அவரைப் பிரிஞ்சு பதிமூணு வருஷமா தனிமை வாழ்க்கைதான் வாழ்ந்திட்டருக்கேன். அதனால தனிமைங்கிறது எனக்குப் புதுசு கிடையாது நான் அனுபவிச்ச சந்தோஷத்தை விட வேதனைகளும், விரக்திகளும்தான் அதிகம். இனிமே எந்த ஆணின் துணையும் எனக்குத் தேவையில்லை. இனி என் லட்சியம் என் இரண்டு பொட்டப் பசங்களுக்கும் நல்ல வாழ்க்கை அமைச்சு கொடுக்கிறதுதான்".

**அடுத்து என்ன செய்வதாக இருக்கிறீர்கள்?**

இப்ப என் இரண்டு பொட்டப் பசங்களை நல்ல படிக்க வைக்க எனக்கு யாராவது உதவி செஞ்சா நல்லாயிருக்கும். அதுக்காக என் புருஷனோட கதையைப் படமா எடுக்கலாமானு விருப்பப்படுறேன். யாராவது நல்ல, டைரக்டரும் தயாரிப்பாளரும் முன்வந்தாங்கன்னா, நானே அதுல கதாநாயகியாக நடிக்கவும் இருக்கிறேன். அதன் மூலமா ஏதாவது பணம் வந்தா என் பசங்களோட எதிர்காலத்துக்கு உதவியா இருக்குமேன்னு ஒரு ஆசைதான்.

*நன்றி குமுதம்*

# உரிமை மடல்...12

*மலை தடை கடந்து*
*புயலிடை எழுந்து*
*உங்களுக்காக*
*ஓர் உரிமை மடல்!*

*உண்மை எதுவென உரத்த குரலெடுத்து*
*உன்னத வழிகாட்டி எழுதும்*
*உரிமை மடல்!*

*இது*
*செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா*
*அவர்கள்*
*இடர் படும் எம் தேசத்து மக்களுக்காக எழுதும்*
*தொடர் மடல்!...*

**அன்பான எம் தேசத்து மக்களே!.....**
**உங்களுக்கு வணக்கம்!**
**ஓநாய்களாக வேட்டைப் பறவையாய்**
**ஒவ்வொரு நாளும் பலியிடப்படுகின்ற**
**ஆட்டுக் கடாய்களாய் கணிக்கப்படுவதை**
**நாங்கள் வெறுக்கின்றோம்!**
**பயங்கர நிலைமை முடிந்திட வேண்டும்!**
**எமது புண்ணிய பூமியின் ஊடாய்**
**சமாதான நதி பெருக்கெடுத்துப் பாயவேண்டும்!**
**இதுவே எமது பிரார்த்தனை!**
**நீதியும் சமாதானமும்**
**புதியனவாய் ஒரு சிந்தனைப் பாதையும்**
**இவையே எமது வேண்டுதல் ஆகும்!**
**கொலைகள் புரிந்து கரங்கள் தறித்த**
**கடந்த கால அச்சுறுத்தல் எவையும்**
**எதையுமே இங்கு உருவாக்கவில்லை!**
**துப்பாக்கி முழக்கமும்**
**யுத்த பேரிகையும் தவிர**
**எதையுமே இங்கு உருவாக்கவில்லை!**

ஆம்! ஒடுக்கப்படுகின்ற தேசங்களில் ஒன்றான பாலஸ்தீனக் கவிஞன் ஒருவன் எழுதிய அந்த வரிகளை யுத்தப் பேரிகை முழங்கத் துடிக்கும் யுத்த வெறியர்களுக்கும்...... சமாதானத்தின் எதிரிகளுக்கும்........... அனுபவமிக்க பாடமாகத் தெரிவித்துக்கொண்டு மற்றொரு உரிமை மடல் ஊடாக எம் மக்களோடு நான் மனம் திறந்து பேச விரும்புகிறேன்!

வடக்கு - கிழக்கு எங்கள் தாயகம்!... இதுவே எமது மக்களின் வரலாற்று வாழ்விடம்! எல்லைகள் கடந்து எங்கு எம் மக்கள் வாழ்ந்தாலும், அவர்களும் எங்கள் சொந்த மக்களே!

இனங்கள், மதங்கள் என்ற பேதங்கள் மறந்து வாழும் மனிதர்கள் யாவரும் அழகிய எங்கள் மாங்காய்த்தீவின் மாண்புமிக்க பிரஜைகளே!

இனங்களுக்கிடையே.... மதங்களுக்கிடையே முரண்பாடுகளை முற்றி வெடிக்க வைத்து தங்களது சுயலாப அரசியலை நடாத்த நினைப்பவர்கள் இன ஐக்கியத்தின் எதிரிகளே!

அவர்கள் சமாதானத்தின் விரோதிகளே!

எம் இனிய மக்களே! சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்கின்ற இவ்வேளையில், அண்மைக்காலமாக எமது தாயக பூமியான திருமலை மண்ணில் நடக்கும் நிகழ்வுகள் கண்டு நான் வேதனை அடைகின்றேன்!

துன்பப்படும் மக்களாகிய உங்கள் மனங்களில், என்ன நடக்குமோ?... ஏது நடக்குமோ என்ற ஏக்கங்கள் மேலும் மேலும் சுமைகளாக்கப்படுவது கண்டு கவலை அடைகின்றேன்!

அமைதியைப் போதித்த புத்தரின் சிலை, மக்களாகிய உங்களது அமைதியைக் குலைத்து விட்டதே என்று நீங்கள் கலங்கி நிற்கிறீர்கள்!

ஏனிந்த நிலைமை என்று நீங்கள் சிந்திக்க வேண்டும்! உங்கள் ஏக்கங்களுக்குக் காரணம் எதுவென நீங்கள் தேடுதல் நடத்த வேண்டும்!

இன்றே எழுந்திடுங்கள்! நாளை இதை விடத் தடைகள் அதிகமாகும் என்று! நாங்கள் அன்றே கூறியிருந்தோம்! ஆணித்தரமாகச் சொல்லியிருந்தோம்!

ஒவ்வொரு சமாதான முயற்சியும் தோல்வியடையும் போது, இதை விடத் துயரங்கள் இன்னமும் காத்திருக்கின்றன என்று நாம் எச்சரித்திருந்தோம்!

இலங்கை - இந்திய ஒப்பந்தக் காலத்தில் நீங்கள் உங்கள் மண்ணில் எப்படி வாழ்ந்தீர்கள் என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும்! மக்களாகிய உங்களது சமாதானக் கனவுகளைக் கைவிட்டு தாங்கள் ஏந்தியிருக்கும் துப்பாக்கிகளின் கனவுகளை மட்டும் ஈடேற்ற நினைத்ததால் இன்று நீங்கள் இது போன்ற சுமைகளைச் சுமக்க வேண்டியுள்ளீர்கள்!

அதன் பின் நடந்த பிரேமதாசா - புலிகள் பேச்சுவார்த்தை, அதன் பின்னரான இன்றைய ஜனாதிபதிக்கும் - புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை என்று எல்லா சந்தர்ப்பங்களும் சுயலாப அரசியலுக்காகவே பயன்படுத்தப்பட்டதால் இன்றைய சுமைகளை நீங்கள் சுமக்க வேண்டியுள்ளது.

இன்றைய தவறுகள் நாளைய சுமைகளாகும் என்ற எச்சரிக்கை உணர்வுகள் இன்று வரை புலிகளிடம் இருந்ததில்லை! நாளைகளைப் பற்றிய இன்றைய திட்டங்கள் என்று என்றுமே புலிகளிடம் இருந்ததில்லை! அவ்வாறான ஒரு அரசியல் தொலை தூரப் பார்வை அவர்களிடம் இருந்திருந்தால் இன்றைய துயரங்களை நீங்கள் சந்தித்திருக்க மாட்டீர்கள்!

கந்தளாயிலும், கல்லோயாவிலும் குடியேற்றம் நடக்கின்றது என்று எல்லைப் புறங்களை எண்ணி நீங்கள் ஏங்கிக் கொண்டிருந்தீர்கள்! ஆனால் இன்று கொல்லைப்புறங்களிலும் அந்தக் கொடிய நோய் பரவி வருகின்றது!

தொடரும் யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவர விரும்பாமல், சமாதானத்தை வெறுத்து ஒதுக்கிய புலித் தலைமையின் சுயலாப அரசியலினால்.......

துப்பாக்கிகளையும், துப்பாக்கிக் குழாயிலிருந்து பிறக்கும் வன்முறையினையும் வழிபட்டு வரும் புலித் தலைமையின் வக்கிர புத்தியினால்.....

இருந்ததையும் இழந்து நாம் தேய்ந்துசெல்ல வேண்டியுள்ளது!

**பட்டு வேட்டி பற்றிய**
**கனவில் இருந்த போது**
**கட்டியுள்ள கோவணமும் களவாடப்பட்டது!**
-என்றான் ஒரு கவிஞன்!

அது போலவே இருந்த சுதந்திரத்தையும் பறிகொடுத்து மக்களாகிய நீங்கள் உங்கள் வாழ்க்கையைத் தொலைத்திருக்கிறீர்கள்!

சுனாமி அழிவுகளினால் நீங்கள் அவஸ்தைப்பட்டபோது ஓடிவந்து உங்களுக்கு உதவிக் கரம் நீட்டியவர்கள் சிங்கள மக்களும்தான் என்பதை நீங்கள் உணர வேண்டும்!

இன்று அதே சிங்கள மக்களின் பெயரால்தான் மக்களாகிய உங்களது விருப்பங்களுக்கு மாறாக அமைதியைப் போதித்த புத்தரின் சிலை நிறுவப்பட்டிருக்கிறது.

மதங்களும், மத வழிபாட்டுச் சின்னங்களும் மக்களின் மனங்களைப் பண்படுத்துவதற்காகவேயன்றி மாறாக அவைகள் உங்கள் மனங்களைப் புண்படுத்துவதற்காக அல்ல என்பதையே நாங்கள் தெளிவுபடுத்த விரும்புகிறோம்!

ஈ.பி.டி.பி. யினராகிய நாங்கள் பருத்தித்துறை முதல் புத்தளம் ஈறாக பொத்துவில் வரைக்கும் எமது மக்களோடு மக்களாகக் கடந்த பல ஆண்டுகளாக இருந்து வருகின்றோம்! கடந்த காலங்களில் திருமலை மண்ணில் நின்று நாங்கள் ஆற்றிய பணிகள் குறித்து நீங்கள் நன்கு உணர்வீர்கள்!

ஒரு முட்டை இட்டுவிட்டு ஊரெல்லாம் கொக்கரிக்கும் கோழியைப்போலன்றி ஆயிரம் முட்டை இட்டுவிட்டு அமைதி காக்கும் ஆமையைப் போல் நாங்கள் சாதனை புரிந்த அந்த நாட்களை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்!

இந்த மண்ணுக்காகவும், மக்களாகிய உங்களுக்காகவும் நாம் திருமலை மண்ணில் முகமுயர்த்தி நின்று ஆற்றிய மக்கள் பணியினை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்!

நாங்கள் திருமலையில் ஆற்றிய மக்கள் பணிகளுக்கு திருமலை மண் சாட்சி! திருமலை மக்கள் சாட்சி!

அப்போது சமாதான காலம் அல்ல! யுத்தம் நடந்த காலங்கள்! அந்த யுத்த சூழலில் கூட இது போன்ற சம்பவங்கள் பாரிய அளவில் நடந்தது கிடையாது!

அதற்குக் காரணம் எங்களது நேர்த்தியான அணுகு முறையும், நேர்மையான அரசியல் வழிமுறையும்தான் என்பதை நீங்கள் நன்கு உணர்வீர்கள்!

ஒரு புறத்தில் மக்களாகிய உங்களது உரிமைகளுக்காக நாங்கள் குரல் கொடுத்துக்கொண்டு, மறு புறத்தில் அரச தரப்போடும், சகோதர இனத்தோடும் உறவுக்கு கரம் கொடுத்து நின்றவர்கள்!

ஆனால், புரிந்துணர்வு ஒப்பந்தம் என்று கூறி, காட்டுக்குள் இருந்து உங்கள் அருகில் வந்த புலிகளால் இந்தச் சமாதான சூழலில் கூட உங்களது உரிமைகளைப் பாதுகாக்க முடியாமல் போய்விட்டது!

புலிகளின் ஆயுத பலத்தினால் சாதிக்க முடியாத பலவற்றையும் எங்களது அரசியல் சாணக்கியத்தால் நாங்கள் சாதித்து முடித்திருக்கின்றோம்!

தங்களை சமாதானப்பிரியர்களாக சர்வதேச சமூகத்திற்கு மட்டும் காட்டிக்கொண்டு சொந்த மக்கள் மத்தியில் யுத்தம் பற்றிய எண்ணக்கருக்களையே புலிகள் விதைத்து வருகின்றார்கள்!

அரச தரப்பினருக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் சரி, புலிகள் நல்லெண்ண சமிக்ஞையினை காட்டியது கிடையாது!

இந்தச் சமாதான சூழலிலும் கூட, விறகுவெட்டச் சென்ற அப்பாவி சிங்கள, முஸ்லிம் மக்களை புலிகள் கடத்தியிருக்கின்றார்கள்!

ஊர்காவல் படை இளைஞர்களைக் கடத்திச் சென்றிருக்கிறார்கள்!

புலனாய்வுத்துறை என்று பொய் சொல்லி படைத்தரப்போடு சம்பந்தப்பட்டவர்களைச் சுட்டுச் சரித்திருக்கிறார்கள்!

இதன் ஊடாக இனங்களுக்கிடையில் பகைமை உணர்வுகளைப் புலிகள் தூண்டிவிட்டிருக்கின்றனர்.

இந்தப் பகைமை உணர்வின் வெளிப்பாடுதான் இன்றைய திருமலை அசம்பாவிதங்கள் என்று நாம் மக்களாகிய உங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகின்றோம்!

ஒரு இனத்தின் அரசியல் உரிமைக்காக என்று சொல்லிக்கொண்டு போலி வேடம் பூண்டு நிற்கும் புலிகளே இது போன்ற பொறுப்பற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் போது, சாதாரண சிங்கள மக்கள் மத்தியிலும் புலிகளைப் போன்ற சக்திகள் இருப்பார்கள்தானே!

ஆகவே, இது சிங்கள மக்களுக்கும், தமிழ் பேசும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடுகளை வளர்க்க விரும்பும் இரு தரப்பு தீய சக்திகளின் தூண்டி விடும் நடவடிக்கை என்றே நாம் நம்புகிறோம்!

இன முரண்பாடுகளில் இருந்து எழும்பும் பகைமை நெருப்பில் குளிர்காய எத்தனிக்கும் குறுகிய அரசியல் லாபம் கொண்டவர்களின் நடவடிக்கை என்றே நாம் கருதுகின்றோம்!

இந்த இரு தரப்பு தீய சக்திகளின் செயல்குறித்தும் ஈ.பி.டி.பி. வன்மையான கண்டனங்களைத் தெரிவிக்க விரும்புகிறது.

அன்பார்ந்த மக்களே! புலிகளது நோக்கம் என்பது வேறு! மக்களாகிய உங்களது நோக்கம் என்பது வேறு! புலிகள் ஒரு பதற்றமான சூழலை விரும்புகிறார்கள்! நீங்கள் பதற்றமற்ற ஒரு அமைதியான சூழலை விரும்புகிறீர்கள்!

இதுபோன்ற இன முரண்பாடுகளும், அதை ஒட்டிய வன்முறைகளும் இந்தச் சமூகத்தில் நிலவுவதையே புலிகள் விரும்புகிறார்கள்!

ஆனால், மக்களாகிய நீங்கள் வன்முறைகளற்ற, இன முரண்பாடுகளற்ற ஒரு சமாதான சூழலை விரும்புகிறீர்கள்!

மக்களாகிய நீங்கள் எதை விரும்புகிறீர்களோ அதையே ஈ.பி.டி.பி. யும் விரும்புகிறது!

இது போன்ற பிரச்சினைகளும், முரண்பாடுகளும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதே எமது செயற்பாடு! தீர்க்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு!

ஆனால், புலிகள் இதுபோன்ற அசம்பாவிதங்கள் தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்பதையே விரும்புகிறார்கள்! இவைகள் தீர்க்கப்படக் கூடாது என்பதையே விரும்புகிறார்கள்! அதனூடாகத் தமது சுயலாப அரசியலை நடத்த விரும்புகிறார்கள்!

அண்மையில் புலிகளால் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் 'தராக்கி' இறுதியாக 'வீரகேசரி'யில் எழுதிய கட்டுரையின் வரிகளை இங்கே நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்!

**"எமது மண்ணில் எமது மக்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் உண்டு! இந்த இன்னல்கள் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு எதிராக மக்கள் அணிதிரள்வதும் இல்லை! அணிதிரட்டப்படுவதும் இல்லை! இப்போது புலிகளின் பேரணிகளில் மக்கள் கலந்து கொள்வதில்லை என்பது மறைக்க முடியாத உண்மை!"**

இவ்வாறு சாராம்சப்பட எழுதியிருந்தார் தராக்கி!

இதுதான் உண்மை! இன்று திருமலை மண்ணில் புத்தர் சிலை நிறுவப்பட்டிருப்பது என்பது புலிகள் தங்களது அரசியலை நடத்த ஒரு துருப்புச்சீட்டாக அமைந்துவிட்டது.

இதேவேளை, பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டிவிடும் கைங்கரியத்தில் புலிகள் ஈடுபட்டிருப்பார்களோ என்ற சந்தேகத்தையும் பலர் கொண்டிருப்பதாக அறியப்படுகிறது.

நாம் பெரும்பான்மைச் சமூகத்தின் மக்கள் பிரதிநிதிகளிடமும், பல்வேறுபட்ட அரசியற் கட்சித் தலைவர்களிடமும், அரச தரப்பிடமும் இதுபற்றி எடுத்துக் கூறியிருக்கின்றோம்!

இன்னமும் இது பற்றி அவர்களுடன் பேசி வருகின்றோம்!

எமது மக்கள் சமாதானத்தையே விரும்புகிறார்கள் என்றும், மீண்டும் ஒரு யுத்தத்தை அவர்கள் விரும்பவில்லை என்றும், இதுபோன்ற சம்பவங்களைக் காரணமாக வைத்து புலிகள் எமது மக்களை வீதிக்கு இழுத்து வன்முறைக் கலாசாரத்தை வளர்க்க எத்தனித்து வருகிறார்கள் என்றும் அரச தரப்பிடமும், சிங்கள மக்களின் பிரதிநிதிகளிடமும் தெளிவுபடுத்தி வருகின்றோம்!

ஆகவே, இதற்கு ஒரு நியாயமான தீர்வு தேவை என்பதை நாம் வலியுறுத்தி வருகின்றோம்!" நாம் எதிர்பார்க்கும் தீர்வு என்பது மறு புறத்தில் மக்களாகிய உங்களது நீண்ட நாள் கனவுகளுக்குப் பாதகம் விளைவிக்கும்படியாக அமைந்துவிடக் கூடாது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்!

உங்களது மண்ணுக்காகவும், மண்ணின் உரிமைக்காகவும்தான் உங்கள் மத்தியில் புலிகள் நிற்கிறார்கள் என்றால்..... அவர்கள் கூறுவதுபோல் இன்றைய திருமலைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகத்தான் புலிகள் போராட வருமாறு உங்களை அழைக்கின்றார்கள் என்றால்...... திருமலையின் முன்னாள் நகர பிதா சூரியமூர்த்தியை புலிகள் சுட்டுக் கொன்றது ஏன் என்று கேட்கின்றேன்?...

நகர பிதா சூரியமூரத்தி அவர்கள் திருமலை மக்களுக்காகவும், இந்த மண்ணுக்காகவும் ஆற்றிய பணிகள் என்னவென்பது மக்களாகிய உங்களுக்கு நன்கு தெரியும்!

மக்களால் தெரிவுசெய்யப்பட்டு திருமலையின் நகர பிதாவாக இருந்த அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டு அதனூடாக ஒரு கல்லில் இரண்டு மாங்காயாக ஒரு இனக் கலவரத்தை ஏற்படுத்தவும் புலிகள் திட்டமிட்டிருக்கிறார்கள்!

எரிகின்ற வீட்டில் பிடுங்குவது இலாபம் என்ற வகையில் புலிகள் நீண்ட காலமாகவே செயற்பட்டு வருகின்றார்கள்!

உங்களுக்காகப் போராடுவதாகக் கூறிக்கொள்ளும் புலிகள், திருமலை மண்ணுக்காக சலசலப்பின்றிப் போராடி வந்த நகர பிதா சூரியமூர்த்தியைக் கொன்றொழிக்க வேண்டிய தேவை என்ன என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும்!

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதி ஒருவரை தாமே கொன்றொழித்துவிட்டு, அதற்கான பழியை வழமைபோல் வேறு யாரோ கொன்றுவிட்டதாகக் கதைகட்டி அதைத் திசை திருப்ப புலிகள் தீட்டிய திட்டம் இப்போது அம்பலமாகிவிட்டது.

வெளிநாடுகளில் இருந்து வெளிவரும் புலிகளின் ஊடகங்கள் நகர பிதா சூரியமூர்த்தி அவர்களை வசைபாடி வருகின்றன. துரோகி என்றும், தமிழ் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியின் அணியின் ஊடாக தேர்தலில் போட்டியிட்டவர் என்றும் அவர் மக்களால் நிராகரிக்கப்பட்டவர் என்றும் புலிகளின் ஊடககங்கள் வசை பாடி வருகின்றன.

இது எதைக் காட்டுகின்றது?... உங்களுக்காக உழைத்த சூரியமூர்த்தியை சுட்டுக் கொன்ற புலிகள் தாம் உங்களுக்காகப் போராடுவதாகக் கூறுவது உண்மைதானா?. இந்த இடத்தில் புலிகளின் துப்பாக்கிகளால் தீர்ப்பெழுதப்பட்டு சுட்டுச் சரிக்கப்பட்ட முன்னாள் திருமலையின் நகர பிதா சூரியமூர்த்தி அவர்களுக்கு எமது கட்சியின் சார்பில் அஞ்சலியைத் தெரிவிக்க விரும்புகிறேன்!

எம் நேசத்திற்குரிய மக்களே! நிரந்தரமான ஒரு அரசியல் தீர்வு கிட்டும்போது இது போன்ற பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும்! இந்தச் சமாதான முயற்சிகள் தோல்வி அடையுமேயானால் நாம் முன்பு கூறியது போல் - இன்றைய நாட்களைப்போல் அன்றி இனி வரும் நாட்களில் இன்னமும் தடைகள் அதிகமாகும்!

நிரந்தரத் தீர்வுக்கான எமது பயணத்தில் திருமலை மண்ணில் இன்று எழுந்திருக்கும் பிரச்சினைக்கும் உடனடித் தீர்வு தேவை என்பதை நாம் உணர்கின்றோம்!

ஈ.பி.டி.பி. யிடம் இருப்பது நேர்மையாகத் தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு குரல் மட்டுமே! இந்தக் குரல் சமாதானத்தின் எதிரிகளின் இரவல் மூளையில் ஒரு போதும் ஒலிக்காது!

மக்களாகிய உங்களுக்காகச் சமாதானத்தை விரும்பும் எனது சுயசிந்தனையில் இருந்து மக்களாகிய உங்களுக்காகப் பலம் உள்ளவரை ஒலிக்கும்!

திருமலை மண்ணின் இன்றைய நிலைகுறித்து உரிய இடத்தில் நாம் பேசி வருகின்றோம்! இன்றைய பிரச்சினைக்கு உடனடித் தீர்வு! இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு! இது குறித்தே நாம் பேசி வருகின்றோம்.

ஒடுக்குமுறையோடு சமரசம் செய்துகொள்ளும் சமாதான முயற்சிகளுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை! உங்களது உரிமைகளுக்காக நாம் என்றும் உங்கள் பக்கமே நிற்போம்!

***திட்டங்கள் எங்களது!..... தீர்மானம் உங்களது!.....***
***தேசத்திற்காகத் தியாகங்களை ஏற்போம்!...***
***என்றும் நாம் மக்களுக்காக!....***
*பிரியமுடன்*
*செயலாளர் நாயகம்*

**தோழர் டக்ளஸ் தேவானந்தா...**

**நன்றி :- இதய வீணை**

---

# 53 ஒரு பெண்ணின் வாழும் வரலாறு



## ஹிலாரி கிளிண்டன் எழுதுகிறார்

**தே**ர்தல் பிரசாரத்திற்கு ஊடகங்கள் இன்றியமையாதவை என்ற கருத்தினை நான் இன்றும் அழுத்தமாகவே நம்புகிறேன்! தேர்தலில் போட்டியிடும் ஒரு நபர் சகல மக்களுக்கும் தனது கருத்தினைக் கொண்டுசெல்ல ஊடகங்கள்தான் துணைபுரிகின்றன. தேர்தல் கால செய்திகள் என்பது கொள்கையையும் நிலைமைகளையும் எடுத்துக்காட்டுபவையாக இருத்தல் வேண்டும்! பல்வேறு சந்தர்ப்பங்களில் வேட்பாளர்களும் பத்திரிகையாளர்களும் பகையாளிகளாக இருந்தாலும் ஒருவருக்கொருவர் நம்பத் தகுந்தவர்களாக இருக்க வேண்டும்! ஆனாலும் இந்த உறவானது தந்திரமானதும் நுண்மையானதுமான உறவுதான்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி நிக்சனின் அரசியல் உள்ளுணர்ச்சி அலதியானதும், அழகான ராகமாகவும் இருந்தது. நிக்சன் எமது பிரசாரப் போட்டியொன்றில் வாஷிங்டனுக்கு வந்தபோது கூறியதாவது, 'மனைவி மலமாகவும் புத்திசாலித்தனமாகவும் முன்வந்தால் தன் கணவன் தேவதூதனாக தோன்றுவார்' என்றார். நிக்சன் கருத்தெதுவும் இல்லாமல் ஒன்றையுமே சொல்லமாட்டார். ஆனாலும் பல பிரசாரங்களில் பில்கிளின்டனை தோற்கடிப்பதற்காக நான் இழிவுபடுத்தப்பட்டேன் என்பதே உண்மையாகும்.

என்னை தேர்தல் பிரசாரங்களில் தாக்குவதன் ஊடாக வாக்காளர்களில் அவநம்பிக்கை ஏற்பட்டு எமது தேர்தல் வெற்றியில் மாற்றம் வரும் என பலர் நம்பினர். இதேவேளை எனது வாழ்க்கையும் பில்கிளின்டனது முழு வாழ்க்கையும் பூதக்கண்ணாடி கொண்டு ஆராயப்பட்டது. அமெரிக்காவின் ஜனாதிபதி தேர்தலில் வேறுயாரும் இந்த அளவு விமர்சிக்கப்பட்டிருப்பார்கள் என நான் நம்பவில்லை.

தேர்தல் பிரசாரம் ஆரம்பிக்கத்தொடங்கியது, முக்கிய ஊடகங்கள் தவிர்ந்த பல ஊடகங்கள் பல்வேறு கற்பனைகளை கட்டவிழ்க்கத் தொடங்கியது. நானும் பில்லும் தொலைவில் வெவ்வேறு பிரதேசங்களில் தேர்தல் பணியில் இருந்தோம். நான் ஆகன்ஸன் மாநிலத்தில் பிரசாரத்தில் இருந்தபோது அதிர்ச்சியான ஒரு கதை வந்தது. அது ஒரு மீன்பிடி பயணத்தில் திமிங்கிலம் அகப்பட்டது போன்று இருந்தது.

நான் ஆகன்ஸன் மாநிலத்தில் பிரச்சாரத்தில் இருந்தபோது பில்கிளின்டனே தொலைபேசியில் என்னை தொடர்பு கொண்டு சொன்னார், கெனிபர் பிளம் என்ற ஒரு பெண் ஒரு பத்திரிகையில் பேட்டியளித்துள்ளார் பில்லுடன் 12 வருடகாலமாக உடலுறவு இருந்ததென அவர் இதனை மறுத்துள்ளதாகவும் எனக்குச் சொன்னார். உண்மையில் இந்த வகையான பிரசாரங்கள் என்னை ஓரளவு தளர்வடையவைத்தன. இந்தக் கதையைக் கேட்டு எங்கள் பிரசார உத்தியோகத்தர்கள் பலர் குழம்பியும் போயினர். எனக்குத் தெரியும் சிலர் நினைத்தனர் ஆட்டம் முடிந்துவிட்டது என்று. ஆனாலும் நாம் சுதாகரித்து மீளே எழுந்தோம், நான் எனது உதவியாளருக்குச் சொன்னேன். அவசர அவசரமாக எமது பிரசார முக்கியஸ்தர்களுடன் நான் பேச வேண்டும் என்று, எனக்கு தொலைபேசியில் சகலருடன் மாநாட்டு வகையில் பேசும் வசதியை உடனடியாக ஏற்படுத்தித்தரும்படி...

நான் எல்லோருக்கும் சொன்னது என்னவென்றால் நாங்கள் இப்பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பது, பில்கிளின்டன் மீதுள்ள நம்பிக்கையினால்தான். பில்கிளின்டன் அமெரிக்காவிற்கு சிறந்த தலைவராக இருப்பார், நிட்சயமாக பில்கிளின்டன் அமெரிக்காவை முன்னோக்கிக் கொண்டுசெல்வார் என்ற நம்பிக்கைதான் எங்களுக்கு முக்கியம். நாங்கள் இந்த பயணத்தில் வெற்றி பெறுவோமா இல்லையா என்பதை வாக்காளர்கள்தான் தீர்மானிக்க வேண்டும் என நான் சொன்னேன். இதுதான் எனது பேச்சின் சாரம்சமாக இருந்தது.

நாம் அனைவரும் பொய்ப்பிரசாரங்களை எதிர்கொண்டு அதற்கான மனநிலையுடன் எங்கள் பணிகளைச் செய்வதற்காக மீளத்திரும்பினோம்.... எமது பிரச்சாரப்பணி மேலும் உத்வேகம் பெற்றது. கட்டுக்கதைகளை எதிர்ப்பது என்பது எங்களுக்கு நாளடைவில் சராசரியாகிப் போனது...

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**மட்டக்கப்புச் சிறையிலிருந்து தப்பியவர்கள்பற்றி எழுதியவன் எமகாதகர்களின் பிடியில் சிக்கி மரணத்தின் கைதியானான். அதனால்....**

மட்டக்களப்பு சிறையுடைப்புச் சம்பவம் தொடர்பாக இப் பகுதியில் எழுதப்பட்ட விடயங்கள் குறித்து நோர்வேயிலிருந்து சுதா என்ற தோழர் எம்மோடு தொடர்பு கொண்டிருந்தார். மட்டக்களப்பு சிறையுடைப்புக்கு 'குன்ஸி' எனப்படும் குணசேகரன் சிறைக்கு வெளியிலிருந்து பெரிதாக எதையும் செய்யவில்லையென்று குறிப்பிட்ட அவர், வரதராஜப் பெருமாளை வந்தாறுமூலையைச் சேர்ந்த பாலா என்றழைக்கப்படும் பாலச்சந்திரன் மற்றும் சின்னவன் என்றழைக்கப்பட்டவர்களே வாகனம் மூலம் பாதுகாப்பாக யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் சென்றனரெனக் குறிப்பிட்டார். இவர்களே பெருமாளையும், அழகிரியையும் பாதுகாப்பாகத் தமது வீடுகளில் வைத்திருந்து பின்னர் தமது குடும்பத்தவர்களோடு சேர்த்து பாதுகாப்பாக யாழ்ப்பாணம் கொண்டு சென்றனரென்றும் கூறினார். மட்டக்களப்பு சிறையுடைப்பில் கதாநாயகர்களாகவும், பங்குதாரர்களாகவும், பார்வையாளர்களாகவும் பலர் இருந்திருப்பார்களென்பது உண்மையே. 'தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம்' என்ற இந்தத் தமிழ் அரசியல் வரலாற்றுத் தொடரை இருவர் இணைந்து எழுதியுள்ளனர். ஒருவர் 'அம்பி மகன்' என்ற புனைபெயரில் எழுதிய சின்னபாலா என்றழைக்கப்பட்ட பாலநடராஜ ஐயர். இவர் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி கொழும்பில் வைத்துப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார். இவர் 2003ஆம் ஆண்டு அக்டோபர் மாதமளவில் தனது பெரிய தந்தையும் இலங்கையின் புகழ்பெற்ற பாடலாசிரியரும், இசையமைப்பாளருமான வீரமணி ஐயரின் இறுதிக் கிரியைகளுக்காக யாழ்ப்பாணம் சென்றிருந்த போது புலிகளின் தற்போதைய யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியினாலும் மற்றும் சில புலி உறுப்பினர்களாலும் மயானத்தில் வைத்து மிரட்டப்பட்டார். மயானத்தை விட்டு வெளியேறுமாறு புலிகள் அவரை மிரட்டினர். "எனது பெரிய தந்தையின் இறுதிக் கடன்களைச் செய்ய நான் உரிமையோடு வந்திருக்கிறேன். என்னை வெளியேறச் சொல்ல நீங்கள் யார்?" என்று சற்று ஆக்ரோஷத்துடன் கேட்டார் 'அம்பி மகன்'. தன் தலைவிதி, எந்த நேரத்திலும் மற்றவர்களால் நிர்ணயிக்கப்படலாமென்று உணர்ந்துகொண்ட 'அம்பி மகன்', கொழும்பு திரும்பியதும் தனது சக கட்டுரையாளருடன் கலந்து பேசி இக் கட்டுரைத் தொடரின் சகல அத்தியாயங்களையும் ஒரு சில மாதங்களுக்குள் கையளித்து விட்டார். எனவே இறந்துபோன ஒருவரின் எழுத்துப் பிரதியில் மாற்றமோ, சேர்க்கைகளோ செய்வதற்கு முடியவில்லையென்பதை தோழர் சுதாவுக்குத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

**இரு எழத்தாளர்கள் சேர்ந்து எழதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## சமாதான யோசனைக்குப் பின்னால் படையினரைப் பலப்படுத்தும் முயற்சி

சர்வகட்சி மாநாட்டில் இணக்கப்பாடு ஏற்பட்டு விட்டதாக ஜனாதிபதி ஜெயவர்த்தனா அறிவித்தமையும், இதன் எதிரொலியாக அதிர்ச்சியும் ஆத்திரமுமுற்ற அமிர்தலிங்கம், தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்தமை குறித்தும் கடந்த வாரம் தெரிவித்திருந்தோம். 1984ஆம் ஆண்டு மார்ச் மாதம் இருபதாம் திகதி நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டுக் கூட்டத்தி லேயே இச் சம்பவங்கள் இடம்பெற்றன. "நான் தீர்மானம் எடுத்து விட்டேன். எனது தீர்மானமே இணக்கமாகும்" என்று மமதையோடு ஜெய வர்த்தனா கூறினார். "நான் கடுமையாக எதிர்க்கிறேன். எனது எதிர்ப்பைப் பதிவு செய்து கொள்ளுங்கள்" என்று அமிர்தலிங்கம் தெரி வித்தார்.

## 14 தேனீர் கோப்பைக்குள் இரத்தம்!

அதிகாரப் பகிர்வு தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட கமிட்டிக்குப் பிரதமர் ஆர்.பிரேமதாசா தலைமை தாங்கினார். அதிகாரப் பகிர்வு அலகு, அதன் அமைப்பு, அதிகாரங்கள், கடமை கள் தொடர்பாக ஆராய வேண்டியது இக் கமிட்டியின் பணிகளாகும்.

கல்வி, வேலைவாய்ப்பு, மொழிப் பாவனை ஆகியவற்றில் தமிழ்பேசும் மக்கள் சந்தித்த, சந்திக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராயவே மற்றக் கமிட்டி நியமிக்கப் பட்டது. இதன் தலைவராக அமைச்சர் கே.டபிள்யூ. தேவநாயகம் நியமிக்கப்பட்டார். இக் கூட்டத் தொடர் மே மாதம் ஒன்பதாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அதிகாரப் பகிர்வு தொடர்பாகவும், பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராய நியமிக்கப்பட்ட கமிட்டிகள் தமது அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக இந்த நீண்ட அவகாசம் வழங்கப்பட்டதெனக் கூறப்பட்டது. ஏழு வாரங்களுக்கு மாநாட்டுக் கூட்டத்தொடர் ஒத்தி வைக்கப்பட்டதை தமிழர் விடுதலைக் கூட்டணி ஆட்சேபித்தது. தனது படை பலத்தைப் பெருக்கிக் கொள் வதற்காகவும், இராணுவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகவுமே இந்தளவு நீண்ட நாட்களுக்குச் சர்வகட்சி மாநாடு ஒத்திவைக்கப்பட்டதாகத் தமிழர் கூட்டணி குற்றஞ்சாட்டியது. சர்வகட்சி மாநாடு நடத்தப்படும் விதம் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டுமல்ல, இந்திய அரசாங்கமும் கவலையும், ஆத்திரமும் கொண்டிருந்தன. இலங்கை அரசாங்கம் பார்த்தசாரதிக்கெதிராகவும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கெதிராகவும் செய்து வந்த பிரசாரங்கள் இந்தியாவை ஆத்திரப்படுத்தியிருந்தது. இந்தியா வெளியுதவியைப்பெற எடுத்த முயற்சிகளுக்கெதிராகவும் இலங்கை அரசு செயற்பட்டமையும் இந்தியாவுக்கு எரிச்சலை மூட்டியிருந்தது.

மார்ச் மாதம் சர்வகட்சி மாநாட்டுக் கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்டுச் சில வாரங்களின் பின்னர், அதாவது ஏப்ரலில் தேசிய பந்தோபஸ்து அமைச்சராக அத்துலத் முதலி நியமிக்கப்பட்டமை சமாதானத் தீர்வை விரும்பிய சக்திகளுக்கு மேலும் சஞ்சலத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியது. இலங்கை இராணுவத்தை விஸ்தரிக்கு மாறும், நவீனமயப்படுத்துமாறும் புலனாய்வுப் பிரிவை மேம்படுத்துமாறும் ஜனாதிபதி ஜெயவர்த்தனா, தேசிய பந்தோபஸ்து அமைச்சரைப் பணித்திருந்தார்.

1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இலங்கை இராணுவம் வெறும்

(அரசியல் தொடர்)

சம்பிரதாயபூர்வப் பணிகளிலேயே ஈடுபட்டு வந்தது. அண்டை நாடுகளான பாகிஸ்தான், இந்தியா போன்ற வற்றின் இராணுவப் படைகளைப் போல் தாக்குதல், தற்காப்புப் பணிகள் அதற்கு இருக்கவில்லை. சுதந்திரம் பெற்றுப் பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் 1958ஆம் ஆண்டு இனக் குழப்பங்களை அடக்குவதற்குப் பொலிஸா ருக்கு உதவும்படி அப்போதுதான் முதல் தடவையாக இராணுவம் கடமைக்கு அழைக்கப்பட்டிருந்தது. அன்றைய காலகட்டத்தில் இராணுவத்தினரின் பங்களிப்பு உண்மையிலேயே பாராட்டத்தக்கதாக இருந்தது. சில அத்துமீறல்களும் இடம்பெறத்தான் செய்தன. பதவியாவில் குடியேறிய சிங்கள மக்களைச் சுட்டுக் கொன்று, அவர்களின் சடலங்களைத் திறந்த லொறிகளில் போட்டு அநுராதபுர வீதி வழியே இராணுவம் பவனிவந்தமை மிகமோசமான அத்துமீறலாகுமெனக் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது. பதவியாவில் அரசாங் கத்தினால் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட சிங்கள விவசா யிகள் வவுனியாவைத் தாக்கத் திரண்டு வந்தபோது இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்கா னார்கள். குழப்பக்காரர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் முகமாகவே கொல்லப் பட்டவர்களின் சடலங் களை திறந்த லொறிகளில் போட்டு அநுராதபுர வீதி வழியே இராணுவத்தினர்கள் பயணம் செய்தனர்.

ஒரு புறம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பேச்சு

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

வார்த்தை என்று கூறிக்கொண்டே மறுபுறம் இராணு வத்தைப் பலப்படுத்தும் தனது இரட்டைத் தந்திரோபா யத்தை 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்வரை ஜெயவர்த்தனா செய்து கொண்டே இருந்தார். சர்வகட்சி மாநாட்டின் ஆரம்ப கட்டத்தில் சுதந்திரக் கட்சி மாநாட்டில் பங்குபற்றா மையைச் சாட்டாக ஜெயவர்த்தனா கூறிவந்தார். இதனைப் பயன்படுத்தி சர்வகட்சி மாநாட்டை இழுத்தடித்த அவர், பின்னர் வேறு பல கபட வேலைகளிலும் ஈடுபட்டார். தேசிய பந்தோபஸ்து அமைச்சு என்ற புதிய அமைச்சினை உருவாக்கி, இராணுவத்தினைப் பலப் படுத்த ஜெயவர்த்தனா எடுத்த முயற்சி, தீவிரவாத தமிழ் இயக்கங்களை உசுப்பி விட்டது. இலங்கையிலிருந்த பல அரசாங்கங்கள் இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாகச் செய்துகொள்ளப்பட்ட சகல ஒப்பந்தங்களையும் முறித்துக் கொண்டதால், ஜெயவர்த்தனா மீது நம்பிக்கை வைக்க வேண்டாமென்று இந்தத் தமிழீழ இயக்கங்கள், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை வற்புறுத்தின. தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் விதத்தில் தீர்வுகள் அமைய வேண்டும், இல்லையேல் தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட வேண்டுமென்று தமிழீழ இயக்கங்கள் தமிழர் கூட்டணியை வலியுறுத்தின.

வெறும் சம்பிரதாயபூர்வப் படையாக இயங்கிவந்த இலங்கை இராணுவம், 1958ஆம் ஆண்டு இனக்கல வரத்தை அடக்கப் பயன்படுத்தப்பட்டமை குறித்து ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். 1971ஆம் ஆண்டு ஜே.வி.பி. கிளர்ச்சியை அடக்குவதற்கு இராணுவம் பெருமளவில் பயன்படுத்தப்பட்டது, சுதந்திர இலங்கையின் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முதலாவது கிளர்ச்சி அது. பெரும்பாலும் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் புத்திஜீவிகளின் தலைமையில் கிராமிய விவசாயிகள், தொழிலாளர்களை அணிதிரட்டி நடத்தப்பட்ட இந்த முதலாவது கிளர்ச்சி படுபயங்கரமாக அடக்கப்பட்டது. இக் காலகட்டத்திலும் பல இராணுவ அத்துமீறல்கள் இடம்பெற்றன.

(தொடர்ந்து வடியும்....)

# நள்ளிரவு மல்லிகை





ஒரு நாள் இரவு தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருக்கும் போது விசித்திரமான சத்தங்களை கேட்கிறார் ஸ்ரீகுமார். சத்தம் வந்த திசையில் இருந்த எலும்புக் கூடு ஒன்று திரும்பி அவரைப் பார்த்துக் கொண்டிருந்தது. பின் அது எழுந்து நடக்க முற்படுகையில் மின்சாரம் தடைப்படுகிறது. இனி.....

அங்கிருந்து ஒரு பெண் குரல் மெதுவாக, 'நான் இங்கே இருக்கேன்' என்றது.

தன்னுடைய கண்களையே அவரால் நம்ப முடியவில்லை. லாபரெட்டரிக்குள், அதுவும் தனது டேபிளுக்கு அருகில், மிக நெருக்கத்தில் பேரழகியான ஒரு பெண்ணுருவம்!

ஜன்னலின் கண்ணாடிக் கதவுகளை ஊடுருவி வந்த நிலவொளியில் அவளது முகத்தின் இடதுபுறம் நன்றாகவே தெரிந்தது.

அவிழ்ந்து கிடந்த அவளது தலைமுடி, பின்புறமாக இருள் போலப் பரவிக் கிடந்தது; இடுப்புப் பகுதியையும் தாண்டி



நீண்டிருந்தது.

அந்தக் கண்களில் வித்தியாசமான பளபளப்பு.

ஸ்ரீகுமார் அவளையே உற்றுப் பார்த்தார்; அசைவற்று நின்றார்; பயத்தில் அவர் இதயம் படபடத்தது.

அவருக்கு கல்லூரியின் எல்லா மாணவிகளையும் நன்றாகத் தெரியும்.

ஆனால், எந்த முகம் மாதிரியும் இந்த முகம் இல்லை.

இவள் யார்? எப்படி இந்த அறைக்குள் வந்தாள்?

அந்தப் பெண்ணின் கழுத்துக்குக் கீழேயுள்ள உடல் பகுதி தெளிவற்று இருந்தது.

மேகப் பிசிறுபோல.....

**எழுதுவது**
**சிவன்**

அல்லது பனிப்படலம், புகை போலிருந்தது. மனத்துள் பயம் சன்னமாக வேர்விடத் தொடங்கினாலும் ஸ்ரீகுமார் அவளை நெருங்கினார்.

அவள் பாவாடையும், ரவிக்கையும் மட்டும் அணிந்திருக்க வேண்டும்; அதையும் அந்த அரைகுறை வெளிச்சத்தில் உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

"யாருமமா நீ?" - ஸ்ரீகுமார் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கேட்டார்.

"எப்படி இந்த அறைக்கு வந்தே?"

"நான் இங்கேயே இருக்கிறவள்தானே!" மிகவும் தாழ்ந்த குரலில் புன்னகைத்தபடியே அவள் பதில் சொன்னாள்.

ஸ்ரீகுமாருக்கு, 'திக்' கென்றது.

"அந்தப் பக்கம் பாருங்க... அந்தக் கண்ணாடிப் பெட்டியை. இன்னிக்கு எனக்கு வெளியே வரணும்னு தோனிச்சு. அதுமட்டுமில்லாமல் வரவேண்டிய தேவையும் இருந்தது."

அந்த நிசப்தத்தில் அவள் குரல் 'ஹோ'வென்று கேட்டது.

"எத்தனை நாள்தான் இன்னொருத்தரோட எலும்புக் கூட்டுல இருக்கிறது?"

"புரியலை!"

அவளது முகத்திலிருந்து கண்களை அகற்றாமலே சொன்னார் ஸ்ரீகுமார்.

அவருக்கு இன்னும் படபடப்பு போகவில்லை.

"அன்னிக்கு ஒருநாள் நீங்க நினைக்கலையா? இந்த எலும்புக்கூட்டுல உடம்பும் தலையும் வெவ்வேறு ஆட்களோடதுன்னு!"

அந்த எலும்புக்கூட்டை, கண்ணாடிப் பெட்டியிலிருந்து வெளியே எடுத்துச் சுத்தப்படுத்தும்போது உடலும், மண்டையோடும் வெவ்வேறு நபர்களுடையவை என்ற நினைப்பு ஸ்ரீகுமாருக்கு வந்ததுண்டு.

தான் நினைத்தது இவளுக்கு எப்படித் தெரிந்தது?

"எனக்கு உங்களை நல்லாவே தெரியும். நீங்க தினந்தோறும் உங்க கிராமத்தில மலைமேல இருக்கிற கோயிலுக்கு அப்ப போவீங்களே?" - அவள் கேட்டாள்.

ஸ்ரீகுமாருக்கு வெள்ளமாய் வியர்த்துக் கொட்டியது.

அவருடைய கிராமத்தின் மிக உயரமான பகுதியே, பகவதி கோயில் இருக்கும் அந்த இடம்தான். அதுதான் அந்தக் கிராமத்தைக் காத்துவரும் 'காவலம்மா'வின் இருப்பிடம்.

சுற்றுபுறச் சுவர்களோ, பிரகாரமோ இல்லாமல் வெறும் கருவறை மட்மே உள்ள கோயில்.

ஆனால், தன்னுடைய வாழ்க்கையில் இதுவரை சந்தித்திராம இவளுக்கு எப்படித் தெரிந்தது எல்லாம்?

"உன் பேரு?" - எச்சில் விழுங்கியபடியே கேட்டார் ஸ்ரீகுமார்.

"சௌபர்ணிகா" - அவள் தயக்கமின்றிப் பதிலளித்தாள்.

"உங்ககிட்ட ஒரு விஷயத்தைச் சொல்லணும்னு நான் ரொம்ப நாளா நினைச்சுட்டிருக்கேன்" காற்றில் அலைந்த மெழுகுவர்த்தி ஜுவாலைக்குக் கையால் அணை கொடுத்தபடி பேசினாள்.

"என் உடம்போட உண்மையான எலும்புக்கூடு மட்டும் திரும்பக் கிடைச்சுட்டா...பலவிதமான வேலைகளைச் செய்யமுடியும். இதுக்கு உங்களால உதவ முடியுமா?" அவள் கெஞ்சுவதுபோல் கேட்டாள்.

"அது எங்கே கிடக்குதோ? எனக்கு எப்படித் தெரியும்?" ஸ்ரீகுமார் திக்கித் திணறி பதில் சொன்னார்.

"அதை நானே உங்களுக்குக் காட்டித் தர்றேன்.

நீங்க என்கூட வந்தாப் போதும்" என்றாள் அவள்.

"எங்கே?"

"ஏறத்தாழ ஒரு கிலோ மீட்டர் தூரம் இருக்கலாம். அதுவும் ஒரு காலேஜ்தான். அந்தக் கட்டடத்தோட ரெண்டாவது மாடியில்தான் அதைப் பத்திரப்படுத்தி வைச்சிருக்காங்க. இந்த நேரம், அதுக்குத் தகுந்த நேரமும்கூட!"

"இதோ பார்! எனக்கு ஒண்ணும் புரியலை. யார் நீ? நிஜமாகவே உன் எலும்புக்கூடு அந்த காலேஜ்ல இருந்தாலும், என்னால திருட முடியாது." ஸ்ரீகுமார் படபடத்தார்.

"விவரமா சொல்றேன். யாருக்கும் தெரியாம அதை அங்கேருந்து எடுக்கணும். யாருக்காவது தெரிஞ்சா, தேவையில்லாத சந்தேகங்கள் கிளம்பும். பின்னால அது நிறையப் பிரச்சினைகளை ஏற்படுத்தும்" அவள் மிகவும் நிதானமான குரலில் பேசினாள்.

"சந்தர்ப்பம் வரும்போது அதைப்பத்தி நானே உங்களுக்குச் சொல்றேன். இப்ப என்கூட வாங்க...." அவளது குரல் பிடிவாதமாக வற்புறுத்தியது.

(வாசனை வீசும்....)

# யாரை உலகம் மன்னிக்காது?



அந்தக் கிராமத்தில் ஒரு வாரமாக ஓயாமல் புயல் மழை. மழைக்குப் பல ஆல மரங்கள் வேரோடு மண்ணில் சாய்ந்துவிட்டன. இந்த நேரத்தில் நீர்த்தேக்கத்தில் உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் வெளியேற ஆரம்பிக்கிறது. 'இன்னும் இந்தக் கிராமத்தில் இருந்தால் வெள்ளத்தில் மாட்டிக் கொண்டு இறந்து போய்விடுவோம்' என்று மக்கள் மாடு கன்றுகளைப்பிடித்துக்கொண்டு ஊரை விட்டு வெளியேற ஆரம்பிக்கிறார்கள். ஆனால், ஒரே ஒருவன் மட்டும், "நான் உங்களைப் போல பயந்து ஓடமாட்டேன். நான் கடவுளை நம்புகிறேன். அவர் என்னைக் காப்பாற்றுவார்" என்று சொல்லி அங்கேயே தங்கிவிடுகிறான்.

அன்றிரவே கிராமத்தில் வெள்ளம் புகுந்துவிடுகிறது. பக்தனிப் வீட்டுக்குள்ளும் வெள்ளம். இவன் வீட்டின் கூரையின் மீது ஏறிக்கொண்டு கடவுளைப் பிரார்த்தனை செய்ய ஆரம்பிக்கிறான். அப்போது பக்கத்துக் கிராமத்தினர் வெள்ளத்திலிருந்து தப்பிக்க அந்த வழியாகப் படகில் போகின்றனர். வீட்டுக் கூரையின் மீது தத்தளித்துக்கொண்டிருக்கும் இவனைப் பார்த்து, "வா, வந்துவிடு. உயிர்தப்பித்து ஓடிவிடலாம்..." என்று அழைக்கின்றனர். அதற்கு இவன் நான் வரமாட்டேன். கடவுள் என்னைக் காப்பாற்றுவார்..." என்று சொல்லிவிட்டுக் கூரையிலேயே உட்கார்ந்து விடுகிறான்.

ஏரியில் ஏற்பட்ட ஓட்டை பெரிதாக... வெள்ளத்தின் அளவும் உயர்ந்து பக்தன் அமர்ந்திருக்கும் கூரையை எட்டிப் பிடித்துவிடுகிறது. இவன் கூரையிலிருந்தபடியே ஒரே தாவாகத் தாவி பக்கத்திலிருந்த மரம் ஒன்றில் ஏறிக்கொண்டு, கடவுள் காப்பாற்றுவார் என்று நம்பிக்கையோடு காத்திருக்கிறான். அப்போது இன்னொரு கிராமத்திலிருந்து அந்த ஊர் மக்களை ஏற்றிக்கொண்டு போகும் படகு வருகிறது. மரத்திலிருந்து தவித்துக் கொண்டிருக்கும் அவனைப் பார்த்து, "படகுக்கு வா! தப்பித்துப் போய்விடலாம்" என்று கூப்பிடுகிறார்கள். "இல்லை.... நான் வரமாட்டேன். என்னைக் காப்பாற்ற கடவுள் நிச்சயம் வருவார்" என்று இவன் பிரார்த்தனை செய்ய ஆரம்பிக்கிறான்.

அடுத்த நாள் ஏரி முற்றிலுமாக உடைந்து நீரின் உயரம் மரத்தில் இருக்கும் அவன் காலைத் தொடும் அளவுக்கு உயர்ந்து விடுகிறது. இவன் மரத்தின் உச்சியிலே போய் உட்கார்ந்து கொள்கிறான். அப்போது அந்தச் சுற்றுவட்டாரத்திலிருந்து கடைசிப் படகு இவனின் உதவிக்கு வருகிறது. "ஊகூம்! நான் வரமாட்டேன். கடவுள் என்னைக் காப்பாற்றுவார்" என்று இவன் அப்போதும் மறுத்துவிடுகிறான். கடைசிப் படகு கிளம்பிச் சென்ற சில மணி நேரங்களில் வெள்ள நீரின் உயரம் உயர்ந்து இவனை அடித்துக்கொண்டு போய் விடுகிறது. இறந்து போன பக்தன் மேலுலகம் போகிறான். அங்கே அவன் கடவுளைச் சந்திக்கிறான்.

"கடவுளே... உங்களையே மலை போல நம்பியிருந்தேன். ஆனால் நட்டாற்றில் என்னை விட்டுவிட்டீர்களே. வாழ்நாள் முழுவதும் உங்களையே பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன். என்னைக் கைவிட்டுவிட்டீர்கள். ஆனால், அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. 'கடவுள் இல்லை' என்று சொல்பவர்கள் கட்சிக்கு உங்களின் செயல் இப்போது பலம் சேர்த்துவிட்டது. அதை நினைத்தால் தான் கவலையாக இருக்கிறது..." என்றான்.

அர்த்தமுள்ள புன்னகையைப் பூத்துவிட்டுக் கடவுள் சொன்னார்: "உன் பக்தியில் குறை இல்லை. அதனால்தான் நீ முதல் முறை பிரார்த்தனை செய்ததுமே உன்னைக் காப்பாற்றுவதற்காக ஒன்று அல்ல, இரண்டு அல்ல, மூன்று படகுகளை அடுத்தடுத்து அனுப்பினேன். நீதான் மூன்று சந்தர்ப்பங்களையுமே தவற விட்டு விட்டாய்" என்றாராம்.

தோல்வியடைந்தவர்களைக் கூட இந்த உலகம் மன்னித்துவிடும். ஆனால், சந்தர்ப்பம் கிடைத்தும் அதைப் பயன்படுத்தாமல் கையைக்கட்டிக்கொண்டு சும்மா உட்கார்ந்திருப்பவர்களை யாருமே மன்னிக்கமாட்டார்கள். மதிக்கவும் மாட்டார்கள்.

அவன் இருபத்தைந்து வயது வாலிபன். அழகானவன், படித்தவன் மதிப்புமிகுந்த உத்தியோகத்திலும் இருக்கிறான். அவனைத் திருமணம் செய்துகொள்ள இளம் பெண்கள் பலர் ஆசைப்பட்டார்கள்.

"என் அழகுக்கு நீ மேட்ச் ஆக மாட்டாய். என் படிப்புக்கு நீ பொருத்தமானவள் இல்லை. என் செல்வத்துக்கு நீ சமமானவள் இல்லை என்று ஏதோ ஒரு காரணம் சொல்லி, இவன் எல்லாப் பெண்களையும் நிராகரித்து வந்தான். இருபது வருடங்களுக்குப் பிறகு இவன் எதிர்பார்ப்புகள் அத்தனைக்கும் ஏற்ற ஒரு பெண் இவன் கண்ணில் பட்டாள். அவளிடம் சென்று தன் படிப்பு, செல்வம், பதவி என்று அத்தனையும் சொல்லி, "எனக்குப் பொருத்தமானவள் நீதான். உன்னை நான் திருமணம் செய்துகொள்ளத் தயார்" என்றான்.

கேலியாகச் சிரித்துவிட்டு அந்தப் பெண் சொன்னாள்: "ஆனால் நீங்கள் எனக்குப் பொருத்தமானவராகத் தெரியவில்லையே."

சந்தர்ப்பம் என்பது வேறு கிரகங்களிலிருந்து வரும் சமாச்சாரம் இல்லை பல நேரங்களில் 'சந்தர்ப்பம்' வருவதற்கான சூழலை நாம்தான் உண்டுபண்ண வேண்டும். வெற்றியாளர்கள் சந்தர்ப்பங்களையே உருவாக்கும் வல்லமை படைத்தவர்களாக இருப்பார்கள். இப்போது சொல்லுங்கள் நீங்கள் இதில் எந்த ரகம்?

சந்தர்ப்பத்துக்காகக் காத்திருப்பவரா? அல்லது சந்தர்ப்பம் வருவதற்கான சூழலை உண்டு பண்ணுபவரா? இல்லை... சந்தர்ப்பத்தையே உருவாக்குபவரா?

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்........)

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 121க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

நா. டிலோஜ்குமார், 107, பாடசாலை வீதி, சேனைக்குடியிருப்பு-01, கல்முனை

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. திருமதி.ஏ.கே. சிங்கம், 141, 4ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
2. கே. சாமினி, 54/6, கடல் காட்சி வீதி, திருகோணமலை.
3. ரி. பரமேஸ்வரன், J/3 அன்டர்சன் தொடர்மாடி, கொழும்பு - 05.
4. அ. சந்தியாகோ, அசோகா வித்தியாலயம், கண்டி.
5. க. நிரஞ்சன், 22, பிரதிபிம்பராம வீதி, களுபோவில.
6. எம்.எச்.எம். கரீம், 53 B, விதான கொட, மல்வானை.
7. மோகன்ராஜ், 155 A, சுவிஸ்சுத்தராம வீதி, ஹவலொக்வீதி, வொழும்பு 05.
8. எஸ்.என். ஜெரீம், கல்லூரி வீதி, வட்டுக்கோட்டை.
9. சுஜாதா பாலகிருஷ்ணன், 13, பாரதி வீதி, கூமாங்குளம், வவுனியா.
10. சி. அராஜேந்திரா, 33 5/1, 42ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை.

### குறுக்கெழுத்துப் போட்டி 123

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | ■ | 3 | ■ |
| 4 | ■ | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | ■ |
| 12 | 13 | 14 | ■ | 15 |
| 16 | 17 | ■ | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 |

### இடமிருந்து வலம்

1. கலப்பை (திரும்பியுள்ளது).
5. முனிவர்களால் செய்யப்படுவது.
8. தடிமன் ஏற்படும் போது கூடவே இதுவும் வரும் (குழம்பியுள்ளது).
12. நஞ்சு (குழம்பியுள்ளது)
16. முக்கனிகளுள் ஒன்று (திரும்பியுள்ளது).
18. ஒரு கிரகம்.
20. குலம் என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது).

### மேலிருந்து கீழ்

1. தமிழ் மொழி பேசப்படும் தென்கிழக்காசிய நாடொன்றின் தலைநகர் (தலைகீழ்).
3. பாதுகாப்பு என்றும் சொல்லலாம்.
5. சமயம்/யானைக்கும் ஏற்படும் (குழம்பியுள்ளது).
9. அபாயம் (குழம்பியுள்ளது).
15. நடிகர் தனுஷின் மாமனார் (குழம்பியுள்ளது).
18. வஞ்சனை.

### குறுக்கெழுத்துப் போட்டி 121 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 கி | 2 றை | 3 ழு | 4 ட | 5 ம் |
| 6 ம | 7 தி | ■ | ■ | 8 ண |
| 9 ம் | ■ | 10 ட் | 11 ழ | 12 மெ |
| 13 தி | 14 கி | 15 லெ | ■ | 16 லி |
| ■ | 17 றை | 18 க | ■ | 19 ல் |
| 20 உ | 21 ள் | 22 ம் | 23 ள் | ■ |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 08.06.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-123
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.


சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# பரிகாரம்

**வெளி** வராந்தையில்தான் அம்மாவின் சவத்தை வைத்திருந் தார்கள். எல்லோரும் வந்து பார்த்துவிட்டுச் சென்று கொண்டிருந் தார்கள். வீட்டைச் சுற்றி பொலிஸ் கீாரர்கள்... அயலவர்கள் என்றுமே காணாத சொந்தங்கள் என்று எல்லோரும் "இது எப்படி நடந் தது...." என்று வித்யாவைத் துருவித் துருவி விசாரித்தார்கள். வித்யா பித்துப் பிடித்தவள் போல் அசையா மல் நின்று கொண்டிந்தாள்.

அப்பா, அம்மாவின் சவத்துக்குப் பக்கத்தில் போய்நின்று முகத்தைக் கைகளால் பொத்திக்கொண்டு கேவிக்கேவி அழுதார். அப்பாவைப் பார்ப்பதற்குப் பரிதாபமாய் இருந்தது. வித்தியாவுக்கு உடல் வெடு வெடுத்தது. தலை சுற்றியது. கீழே விழுந்து விடுவோமோ என்றெண்ணி அருகிலிருந்த தூணொன்றை ஆதரவாய் பற்றிக் கொண்டாள். அப்பாவின் விசும்பல் பெரிதாய் ஒலித்தது. அதில் ஆயிரம் அர்த் தங்கள் புரிந்தன வித்யாவுக்கு.

இந்த அப்பா இப்படி மாறுவார் என்று கனவிலும் யாரும் நினைத் திருக்கமாட்டார்கள் முன்பானால் அம்மாதான் அவருடைய உயிர் என்பார். இப்போ வெகுவாக மாறியிருந்தார் தன்னைவிடக் குடிகாரனே இல்லை என்பதைச் சாதனையாய் எடுத்துக்கொண்டு தலைகீழாய் குடிக்கத் தொடங்கியி ருந்தார். குடிப்பதோடு மட்டும் நிறுத்தியிருந்தால் இது நடந்தே இருக்காது. குடிப்பது மட்டுமல்ல, அம்மாவைச் சித்திரவதை செய்யவும் துணிந்து விட்டார். அம்மாவை பொறுமையின் சின்னம் என்றுதான் சொல்ல வேண்டும். அவ்வளவு பொறுமை, வாயைத் திறந்து எதுவுமே பேசியதில்லையே. ஆனால் அடிக்கடி வித்யாவிடம் சொல்வார் "வித்திம்மா நான் இவ்வளவு பொறுமையா இருக்கேன்னா அதற்கு காரணம் நீதான்மா. நீ மட்டும் இல்லையின்னா.... இன்னிக்கு உங்கப்பா என்னை கண்டிரவே மாட்டாரு...."



இதற்குப் பதில் வித்யாவுக்குச் சொல்லத் தெரியவில்லை. வித்யா வோடு அப்பா அன்பாய்த்தானே இருக்கிறார். அவரிடம் கெஞ்சிப்பார்க்க வேண்டியதுதான். அப்பாவந்தார். அப்பாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு "ஏனுப்பா நீங்க தொடர்ந்து குடிச்சிக்கிட்டே வர்றீங்க முன்பு நாமெல்லாம் எவ்வளவு சந்தோஷமாய் இருந்தோம். இப்பவும் நீங்க குடிக்கிறத விட்டிங்கன்னா....." என்று வித்யா சொல்லி முடிப்பதற்குள், அவர் ஏதோ சொல்வதற்கு வாயைத் திறந்தபோது தான் தெரிந்தது இன்றும் குடித்துக் கொண்டுதான் வந்திருக்கிறார் என்று. பேசி எந்தப் பயனுமில்லை என்பது வித்யாவுக்கு நன்றாகவே புரிந்தது பதிலுக்காய் காத்திராமல் கைகளை உதறிக்கொண்டு அப்பால் சென்று விட்டாள்.

சட்டென்று நினைவுகளில் இருந்து மீண்டு.... அப்பாவைப் பார்த்தாள். அப்பா எதையோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். பக்கத்தில் நின்ற பொலிஸ்காரன் அப்பாவை தனியே வரும்படி சைகை செய்தான். அவர் அசைவதாகத் தெரியவில்லை. தோளில் தட்டி அழைத்த போது அவரால் மறுக்கவும் முடியவில்லை. சற்று அசைந்து கொடுத்தார். அதற்குள் வித்யா ஏதோ நினைத்தவளாக ஓடி வந்து இறந்து கிடந்த தனது தாயின் பாதங்களைப் பிடித்துக்கொண்டு ஓ.... வென்று கதறி அலறினாள்.

ஆதரவாய் ஒருகை தோளில் விழுந்தது. திரும்பிப் பார்த்தாள் அம்மாவின் தூரத்து உறவுக்காரர் இன்ஸ்பெக்டர் போலும், வித்யா எழுந்து அப்பால் சென்றாள். அவரும் கூடவே சென்று பேச்சை ஆரம்பித்தார். "என்னம்மா... உன் அம்மாவை அப்ப தான் தூக்குக் கயிறு போட்டுக் கொலை செய்ததாக எல்லோரும் பேசிக்கொள்றாங்க தயவு செஞ்சு உண்மையை மட்டும் சொல்லு" என்றார் அதிகார தோரணையோடு.

வித்யா அப்பாவை ஒருமுறை திரும்பிப் பார்த்தாள். அவரின் முகத்தில் பயமும், சோகமும் ஒருங்கே குடிகொண்டிருந்தன தொடர்ந்தும் பார்க்க விரும்பாதவளாய் கூறத் தொடங்கினாள்.

வாக்கு மூலம் பதிவானது -

"இல்லை சார். எங்கப்பா கொலை பண்ணல்ல... அப்பா தொடர்ந்தும் குடிச்சிட்டு வந்து சண்ட போடறது என்னமோ உண்மைதான். அந்த ஆத்திரம் தாங்க இயலாம அம்மா இப்படி... செய்வான்னு...." முடிக்கா மலே தலையில் அடித்துக் கொண்டு அழுதாள்.

இன்ஸ்பெக்டர் தனது தாடையைத் தடவியபடி யோசித்தார். முடிவுக்கு வந்தவராக தற்கொலை என்ற தீர்ப்புடன் அவ்விடத்தை விட்டகன்றார்.

மரணச் சடங்கு முடிந்து சனக் கூட்டம் கலைந்து வெகுநேரமாகியும் வித்யா அவ்விடத்தை விட்டு அகன்றா ளில்லை.

யாரோ வரும் சத்தம் கேட்ட தும்.... வேறு யார் தான் இருக்கி றார்கள் அவளுக்கு. அப்பாதான்.... பேசாமல் கண்களை மூடிக் கொண்டான்

"வித்திம்மா......" பேசவில்லை அவள்.

"வித்திம்மா.... என்மேல் கோபமா? அப்ப தான் கொலை செய்தார். இந்தப்பாவியை பொலிஸில் பிடித்து கொடுத்து தண்டனை வாங்கித் தந்திருக்கலாமே.... எப்படி யம்மா.... எப்படி... இந்தப் பாவியை மன்னித்தாய்?" என்று முழங்கால் களில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதார்.

மெதுவாய் தனது கையை அப்பாவின் தோள்களில் வைத்து "அப்பா..... எனக்கு சொந்தம் சொல்லிக் கொள்ள இப்போ உங்கள விட்டா யாருப்பா...... இருக்கா..... உண்மையைச் சொல்லி உங்களைப் பொலிஸில் பிடித்துக் கொடுத்திட்டா.... செத்துப் போன என் அம்மா திரும்பி வந்திட மாட்டா... நீங்க இனிமே குடிக்கவே மாட்டேன்னு சத்தியம் பண்ணித்தாங்கப்பா அதுவே நீங்க அம்மாவுக்கு செய்த பாவத்திற்குப் பரிகாரமாய் இருக்கும்......" தொண்டைக்குள் சிக்கிய துக்கத்தை விழுங்கிக் கொண்டு கூறினாள் வித்யா.

அதற்கெனக் காத்துக்கொண்டி ருந்தவரைப் போல "சத்தியமாய் நான் இனி குடிக்கப் போறதில்லைம்மா.... நான் உங்கம்மாக்கு செய்த துரோகத்துக்கு ஒரு ஆயுள் கைதி யாய் உனக்கிட்ட சரணடைந்து கொள்றன். தயவு செய்து இந்தப் பாவியை மன்னித்துக் கொள் ளம்மா....."

மேலே பேச முடியாதவராய் வித்யாவின் தோளில் சாய்ந்து கொண்டு சிறு குழந்தையாய் விம்மி விம்மி அழுதார்.

அந்தச் சோகத்திலும் நிம்மதியாய்ப் பெருமூச்சு விட்டாள் வித்யா.

**ஜனுபா அகமட், வாழைச்சேனை.**

# எண்ணங்கள்

**சி**வா மருத்துவக் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும் ஒரு மாணவன். அதே கல்லூரியில் உளவியல் பிரிவில் படித்துக்கொண்டிருந்தாள் சுகந்தி. வசதியான குடும்பத்தில் பிறந்த சுகந்தி அழகானவள் மட்டுமன்றி புத்திசாலியும் கூட. சுகந்தியின் வீட்டில் அவளது அப்பா, அண்ணன், அவள் உட்பட மூவர் மட்டுமே உள்ளனர். சுகந்தி செல்வத்திற்கு பஞ்சமில்லாத குடும்பத்தில் பிறந்தவள். ஆனால், அவள் எதையும் வெளிக்காட்டுவதில்லை. அவளது அண்ணனோ திமிர் பிடித்தவன் என்பது சிவாவிற்கு மட்டுமல்ல, அந்த ஊருக்கே தெரிந்த உண்மை. ஆனால், அவளது அப்பா சற்று நாணயமானவராக காலத்தை கழித்துக் கொண்டிருக்கிறார்.

சுகந்தியின் அழகில் மயங்காதவர்கள் இல்லை. அதில் சிவாவும் ஒருத்தன். சுகந்திக்கு பல காதல் கடிதங்கள் வந்ததும் அதை அவள் மறுத்ததும் கூட சிவாவிற்குத் தெரியும். சிவாவிற்கும் சுகந்தியிடம் காதலைக் கூற மனமிருந்தாலும் அவன் அதை அவளிடம் கூறவில்லை. அதற்கு அவனிடம் பல காரணிகளும் இருந்தன. ஒருநாள் சிவா, கல்லூரிக்குள் நுழையும் போது சுகந்தி ஒரு சீனியர் மாணவனுடன் கதைத்துக் கொண்டிருந்தாள். அப்போது சுகந்தி திடீரென்று அவன் முகத்தில் அறைந்துவிட்டான். சுகந்தி அதற்கான காரணத்தை யாரிடமும் கூறாவிட்டாலும் அந்தச் சீனியர் மாணவன் தனது காதலை சுகந்தியிடம் கூறியதற்குத்தான் அச்சம்பவம் நடந்ததாகக் கல்லூரியில் கதை உலாவியது. இதை சிவாவும் நம்பினான். இச்சம்பவத்தின் பின்னர் சுகந்தியின் மீது சிவா வைத்திருந்த மரியாதை குறைந்தது. அதனுடன் சேர்த்து சிவாவின் காதலும் கூடக் குறைந்தது.

அச்சம்பவம் நடந்த மறுநாள் சுகந்தியின் அண்ணன் கல்லூரி வளாகத்துக்குள் நுழைந்தான். அவனுக்குத் துணையாக அவனது நண்பர்களும் வந்திருந்தனர். அனைவருமாகச் சேர்ந்து அந்த சீனியர் மாணவனைப் பின்னி எடுத்துவிட்டனர். சிவா நொந்து போனான். நேற்றைய சம்பவத்தின் பின் இது நடந்தது. அங்கு நடந்த உண்மையான சம்பவம் சிவாவிற்குத் தெரியாது. குறிப்பிட்ட அந்த நாள் அந்த சீனியர் மாணவன் சுகந்தியிடம் "என்னுடன் ஓர் இரவுக்கு கட்டிலுக்கு வா" எனக் கூறியுள்ளான். இதற்காகவே அம்மாணவனை அவள் அறைந்தாள். சிவாவும் மற்றவர்களும் எண்ணியது போல் அவள் தானாக அண்ணனிடம் இதைக் கூறவில்லை. அவளது அண்ணன், அவனது நண்பர்கள் மூலமாக தெரிந்து கொண்டே வந்து பிரச்சினை பண்ணினான். இச்சம்பவங்களின் மூலம் சிவா தன்னுடைய காதலை சுகந்தியிடம் தெரிவிக்கலாமா? இல்லையா? என்று யோசித்துக் கொண்டிருக்கையில் மற்றொரு சம்பவத்தையும் அவன் சந்திக்க நேரிட்டது.

ஒருநாள் சுகந்தி கல்லூரிக்கு அண்மையிலே உள்ள தனது வீட்டுக்கு நடந்து சென்று கொண்டிருந்தாள். அது அவளது வழக்கமும் கூட. அன்று வீதியில் வந்து கொண்டிருந்த ஒருவன் ஒரு கடிதத்தை சுகந்தியிடம் நீட்டினான். அதை படித்த சுகந்தி கிழித்து எறிந்தபின் காறித் துப்பிவிட்டு, அவ்விடத்தை விட்டு அகன்றதும் அதைப் பார்த்துக் கொண்டிருந்த சுகந்தியின் அண்ணன் அவன் தன் தங்கைக்கு காதல் கடிதம் கொடுத்ததாக நினைத்து அவனைப் புரட்டி எடுத்துவிட்டான். சிவாவும், சுகந்தியிடம் கொடுக்கப்பட்ட கடிதம், காதல் கடிதமாக இருக்கலாம். அதற்காக அப்படியா? என்று நினைத்துக் கொண்டான். அவள் அண்ணனும் அப்படித்தான் நினைத்திருந்தான். ஆனால் அக் கடிதத்தில் அவள் குடும்பத்தைப் பற்றி கீழ்த்தரமாக எழுதியிருந்ததை இருவருமே அறியவில்லை. இந்தச் சம்பவத்தின் பின் சிவா தன் காதலை சுகந்தியிடம் வெளிப்படுத்தாமல் அப்படியே அழுக்கிவிட்டான்.



எம். அக்ரம், அக்கரைப்பற்று

இவ்வாறாக சிவா தனது ஆசைகளை முற்றும் முழுதாக தனக்குள்ளே மறைத்து விட்டான். தன்னுடைய ஆசைகளை மறைத்து மறைத்து மனதிற்குள்ளேயே பூட்டியதன் விளைவாக அவன் மனம் படாதபாடுபட்டு துடித்தது மட்டுமன்றி அவனும் நாளடைவில் புத்தி பேதலித்தவன் போலானான். அவன் புத்தி பேதலித்ததற்கு இன்னொரு காரணம் இருந்தது. அதாவது, சுகந்தி சிவாவின் காதலை ஏற்காததோடு அவனை வெறுத்தால் மானம் போய் விடுமே என்ற எண்ணமும் கூட இருந்தது.

சிவாவின் நிலையை அறிந்த அவனது பெற்றோர், ஊரில் உள்ளவர்களுக்கு சிவா வெளியூர் சென்று விட்டதாகக் கூறி விட்டு, அவனைப் பல்வேறு வைத்தியர்களிடம் எடுத்துச் சென்றும் அவனுக்கு நோய் குணமாகவில்லை. சில வருடங்களில் பின் பக்கத்து நகரத்திற்கு சிறந்த மனநல நிபுணர் வந்துள்ளதாகக் கேள்விப்பட்ட சிவாவின் பெற்றோர் அவனை அங்கே அழைத்துக் கொண்டு சென்ற போது அங்கு சுகந்திதான் இருந்தாள் சுகந்தியோ சிவாவின் பெற்றோரோ அடையாளம் கண்டு கொள்ளவில்லை. சுகந்தி சிகிச்சையை தொடங்கினாள். அப்போது மெதுமெதுவாக சிவாவினுடைய பழைய நினைவுகளை அவனுடைய ஆழ்மனதிலிருந்து சுகந்தி அறிந்துகொண்டு வந்தாள்.

அப்போது தான் சுகந்திக்கு அந்த அதிர்ச்சியும் உண்மையும் தெரிந்தது. அவள் சற்று நேரத்தில் சகலதையும் அறிந்து கொண்டாள். நமது சிவா இப்படியாகிவிட்டானே. நான், ஏதோ செய்ய இவனுக்கு ஏதோ விளங்கி ஏன் இறைவா இப்படி நடந்தது என்று அலுத்துக் கொண்டவள், சிவாவின் பெற்றோரை அழைத்து நிலைமையை விளக்கிவிட்டு சிவாவின் ஆழ்மனதில் பதியுமாறு செய்வதற்கு அவனை அந்த நிலையிலேயே வைத்தவாறு தனக்கு திருமணமாகிவிட்டதாகக் கூறினாள்.

அவனை தெளிந்த நிலைக்குக் கொண்டுவந்த பின்னர், தன்னுடைய கணவனுடன் அவள் எடுத்துகொண்ட கல்யாண புகைப்படத்தையும் அவனிடம் காட்டினாள். அவனின் பெற்றோரிடம் சகலதையும் எடுத்துக் கூறினாள். அதன்பின் சிவாவின் முகத்தை நேராகப் பார்த்து "ஏன் நீ இதை என்னிடம் மறைத்தாய்?" என்று கேட்டாள். அதற்கு பதிலாய் சிவா விழித்துக் கொண்டிருக்கும் போதே சுகந்தி சிவாவிடம் "நமது மனதில் உள்ளதை நாம் தான் வெளிப்படுத்த வேண்டும். மற்றவர் பற்றி யோசிக்க வேண்டிய அவசியமில்லை. என்ன சரிதானே" எனக் கூறிவிட்டு, சிவாவின் பெற்றோரிடமும் சிவாவிடமும் "நடந்தவற்றில் என் பக்கம் பிழையிருப்பதாக நீங்கள் நினைத்தால் என்னை மன்னிக்கனும்" எனக் கூறிவிட்டு நகர்ந்தாள்.

அப்போது கூட அவளது உள்மனது அவளை உறுத்தியது உன்னால்தான் சிவாவிற்கு இது நடந்தது என்று. ஆனால் அவளுக்கு ஒன்று மட்டும் ஒன்றாக புரிந்தது எண்ணம் தான் வாழ்க்கை என்பது எவ்வளவு உண்மை என்று.....

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

# சிந்தித்துப் பார்க்க...

## மற்றவர்களுக்கு முன் மாதிரியாக இருங்கள்

தனிமனிதரின் தாக்கம் பலரை பாதித்திருக்கலாம். அந்த தாக்கத்தின் விளைவானது. நன்மையாகவோ அல்லது தீமையாகவோ இருந்திருக்கலாம்.

மேம்பாடு அடைவதற்கு பரிந்துரைகளை எந்தவொரு மனிதன் தன் வாழ்நாளின் முழுவதும் கடப்பிடிக்கிறானோ அவன் மற்றவர்களுக்கு ஒரு நல்ல முன்மாதிரியான இருப்பான்.

மற்றவர்கள் இந்த மனிதருக்கு உதவி செய்யாவிட்டாலும், முன்மாதிரி செயல்பாடுகள் இவர்களை நன்கு மேம்பாட்டு அடையச் கவலைப்படத் தேவையில்லை.

உங்களை யாரேனும் தைரியப்படுத்துவதும் மற்றும் ஊக்கப்படுத்தும் முயற்சியில், ஈடுபட எண்ணலாம். ஏனெனில் நீங்கள் மற்றவர்களைத் தீங்கிழைக்கும் எண்ணம் உடையவர்களோ அல்லது அவர்களது வஞ்சக எண்ணங்களை செயல்படுத்தும் நடவடிக்கைகளிலும் இறங்கவும் முடியும் என உண்மையிலேயே நினைத்திருக்கலாம்.

மற்றவர்களைப் போலல்லாமல், நீண்ட கால ஓட்டத்தில், உங்களின் சொந்த அடிப்படை வாழ்க்கைக்காள வாய்ப்புகள் இன்னும் சிறப்பாக அமைய வழிமுறைகள் அமைவதுண்டு.

மற்றவர்களால் ஊக்கப்படுத்துவதென்பது, மிரட்டிப் பணிய வைக்கும் செயலைவிட குறைவானதொரு செயலாகும்.

மேற்குறிப்பிட்ட அத்தனை கருத்துக்களையும் எடுத்துக்கூறியும், நீங்கள் நினைக்கிற வகையில் ஒரு நல்ல முன் மாதிரியாக நடந்து, மற்றவர்களை ஊக்குவித்து, மேம்பாடு அடையச் செய்ய முடியும். மேலும் நல்ல முன்னேற்றமான விளைவுகளையும் ஏற்படுத்த முடியும். ஆகவே உங்கள் திறமையை குறித்து குறைவாக மதிப்பிடாதீர்கள்.

- 'மகிழ்ச்சி'
எனும் நூலிலிருந்து.

# காகத்திற்கு ஒற்றைக் கண்பார்வை அவைதான் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டு

தருவது
முழடில்யன்

"இந்த உலகம் வயதானவர்களின் உலகம் தான். அவர்கள் நினைப்பது, சொல்வதுதான் சரி. நமக்கு ஆலோசனைகள் என்ற பெயரில் முனை மழுங்கிய ஆணிகளை நம் தலையில் அடித்து இறுக்கி, நல்வழிப்படுத்துவதற்காகவே அவர்கள் இருப்பதாக நினைத்துக்கொண்டு....செய்யும் கொடுமை களைத் தாங்கமுடியவில்லை...."என்று எரிச்சலோடு பொரிந்தான் விசாகன்.



மொட்டை மாடிச் சுவரில் உட்புறம் கால் களைத் தொங்கப் போட்டுக்கொண்டு அமர்ந்திருந் தான் அவன். அவனது கால்களருகே சுவரில் நின்றி ருந்தான் கஜன்.

"நம்மைவிட அதிக காலம் வாழ்ந்தவர்கள், தங்கள் அனுபவத்தில் கண்ட நன்மை தீமைகளைச் சொல்லி நம்மை எச்சரிக்கையோடு இருக்கச் செய்கி றார்கள் என்று எடுத்துக் கொள்ளேன்....!"

"வயதாகி விட்டால் எல்லாம் தெரிந்தவர்களாகி விடுவார்களா?" கஜன் சுவரில் முழங்கையை ஊன்றி யபடி அவனை நோக்கித் திரும்பினான். "அனுபவத் தால் அறிந்துகொள்வது நிறைய இருக்கிறதல்லவா?"

விசாகன் அவன் கண்களைப் பார்த்தபடியே கூறினான்.

"இருக்கட்டுமே! வயதானவர்கள்தான் சாதனைகள் புரிந்து கொண்டிருக்கிறார்களா? புதிய புதிய மாற்றங்களும் அறிவு வளர்ச்சிகளுமாக உலகம் வேறாகிக் கொண்டே வருகிறதல்லவா?"

"அதற்காக அவர்களது அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளக்கூடாது என்கிறாயா?"

"பார்த்தாயா, நீ பிழையாக விளங்கிக் கொள் கிறாய். அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது பற்றியதல்ல எனது பிரச்சினை......

இளைஞர்களின் உலகம் எது? இளையவர்கள் எப்படிச் சிந்திப்பார்கள்? என்பதையெல்லாம் மறந்துவிட்டு, தங்கள் காலத்தையே இவர்கள் மீண் டும் திணிக்க, படும் அந்தரத்தைச் சொல்கிறேன்..."

"தங்கள் காலத்து விழுமியங்களைக்கூட இழந்து உலகம் மேலும் மேலும் நசிவுக்குள்ளாகி வருவதாக அவர்கள் கவலைப்படுகிறார்கள்."

விசாகன் சிரித்தான். இவர்கள் காலமோ அல்லது இவர்களுக்கு முந்திய காலமோ கூட ஒன்றும் பெரிதாக வாழ்ந்து விடவில்லை. எங்களை விடக் காட்டுமிராண்டிகளாகத்தான் இருந்திருக்கிறார்கள். இப்போதிருப்பதை விட மனிதரை மனிதர் அடிமைப்படுத்தும் ஆக்கிரமிக்கும் கீழ்மைத் தனங்கள் அதிகமாகத்தான் முன்பு இருந்திருக்கிறது. நாங்கள் எவ்வளவோ மனிதப் பண்புகளுடன் மாறி வந்து விட்டோம். இன்னும் நிறைய மாற இருக்கிறது. அதை விடு. மூத்தவர்கள் எங்களைப் புகார் சொல்லிப் புறுபுறுத்துக் கொண்டே இருப்பதை உடனே நிறுத்த வேண்டும். எங்களுக்கு இவர்கள் தந்திருக்கும் உலகமும் வாழ்க்கை மதிப்பீடுகளும் ஒன்றும் இப்போதுள்ள குறைந்தபட்ச ஜனநாயகப் பண்புகளைவிடவும் மேலானவை யல்ல......"

"சரி சரி கோபப்படாதே. நாளைக்கு நீயும் புறுபுறுக்கிறவனாகத்தான் போகிறாய்!"

இல்லை. நான் அப்படி ஆக மாட்டேன். எனக்கு என் பின்னே வரப்போகும் இளையவர் களிடம் நம்பிக்கை இருக்கிறது. என் கால மதிப்பீடுகளோடு அவர்களை நான் ஆக்கிரமிக்கத் துடிக்க மாட்டேன். நமது மூத்தவர்களுக்கு நம்மிடம் நம்பிக்கை இல்லை. அதுமட்டுமல்ல, எங்களை நம்பாதிருப்பதில் ஏதோ ஓர் ஆனந்தத்தை அனுப விக்கிறார்கள் என்றும் தோன்றுகிறது.

அடுத்த வீட்டு மொட்டை மாடியில் காகத்திற்கு உணவை வைத்து விட்டுக் "கா....கா..."என்று கரைந்து கொண்டிருந்தது. இவர்கள் கவனத்தைக் கலைத்தது.

அவர்கள் போனபிறகு காகம் அந்த உணவைக் கொத்திக் கிளறிக் கொண்டிருந்தது.

காகத்தைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு ஞானக் கூத்தன் கவிதை ஒன்றுதான் "ஞாபகம் வருகிறது..."என்றான் கஜன்.

"குழந்தையோடு சிநேகம் கொள்ளும் காக்கையா?"

இல்லை.

"மீண்டும் ஒருமுறை இந்தக் காக்கை எனக்கு நேரே வந்தமர்ந்தால் தெரிந்து கொள்ள முடியுமா என்னால்? சந்தேகம்தான். ஏனெனில் காக்கையை யாரும் முழுதாகப் பார்த்து முடிப்பதில்லையே" என்று முடியும் கவிதை.

"காக்கையை மட்டுமென்ன? உலகில் எதைத் தான் முழுமையாகப் பார்த்து முடிக்கிறோம்?"

"ஆமாம். எதைப்பற்றியும், யாரைப் பற்றியும் நாம் முழுவதுமாகத் தெரிந்துகொண்டுவிட வில்லைத்தான்."

"அரைகுறையாகத் தெரிந்ததைக் கொண்டே ஆணித்தரமான முடிவுகளுக்குள் இறுகியும் போய்விடுகிறோம்."

இந்தக் காகத்தைப் பற்றிக் கூட நாம் தெரிந்து வைத்திருப்பவைகளெல்லாம் சரியா என்பதே கேள்விதான்.

"காகத்திற்கு ஒற்றைக்கண் பார்வை என்பதி லிருந்து அவைதான் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டு என்பதுவரை எத்தனை..... எத்தனை...!"

"நாம் திருவிழாக்களிலும் சந்தைகளிலும் ஒன்றுகூடித் திரண்டு நிற்பதைப் பார்த்துவிட்டு காக்கைகள் என்ன நினைத்துக்கொள்ளும்? மனிதர் களைப் பார், எவ்வளவு "ஒற்றுமையான பிராணிகள் என்றா?" சொல்லிவிட்டுக் கஜன் சிரித்தான்.

"அது மாதிரிதான், காகம் கரைந்தால் வீட்டுக்கு விருந்தாளிகள் வருகிறார்கள் என்பதும்...."

"உண்மையில் அப்படி பல தடவைகள் என் வீட்டில் நடந்திருக்கிறது!"

விசாகன் சிரித்தான். "நடக்காமல் என்ன செய்யும்?" வீட்டுக்கு விருந்தாளிகள் வரப்போகி றார்கள் என்றால், நாங்கள் மீன், இறைச்சி என்று வாங்கி சமையல் அடுக்குகள் செய்வோம். எங்கிருந்தாலும் அந்தக் கழிவுகளைத் தின்னப் பறந்து வந்துவிடும் காகங்கள் "கா....கா..."என்று கரையத்தானே செய்யும்?

கஜனும் சிரித்தான். "காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த மாதிரிதான். விருந்தினர் களுக்குச் சமைத்தால் காகங்களும் வீடு வராமல் என்ன செய்யும்!"

"ஆனால் குறுந்தொகை காலத்திலிருந்தே இந்த நம்பிக்கை இருக்கிறது. தலைவன் திரும்பி வரவில்லையே என்று மனம் நொந்து காத்திருக்கும் தலைவியைச் சந்தோஷப்படுத்துவதற்காகக் காகங் களைக் கரைய வைக்கிறாள் தோழி. சோறு வைத்துக் காகங்களை அழைத்து, அவை வீட்டு வாசலில் கரையும்படி செய்கிறாள் தோழி. இதனால் தலைவன் வரப்போகிறானாக்கும் என்று நம்பி தலைவி தன் துயரம் தணியட்டுமே என்று நினைக்கிறாள்....."

அதாவது, அந்தக் காலத்திலேயே காகம் கரைவதால் விருந்தினர்கள் வருவதில்லை என்பதை அந்தத் தோழி நிரூபித்திருக்கிறாள். இருவரும் சிரித்தார்கள்.

*திண்தேர் நள்ளி கானத்து, அண்டர்*
*பல்ஆ பயந்த நெய்யில், தொண்டி*
*முழுதுடன் விளைந்த வெண்நெல் வெம்சோறு*
*எழுகலத்து ஏந்தினும் சிறிது, என்தோழி*
*பெருந்தோள் நெகிழ்ந்த செல்லற்கு*
*விருந்து வரக்கரைந்த காக்கையது பலியே.*
*(குறுந்தொகை : 213)*

---

'தமிழ் நெஞ்சம்' என்பது என்ன? அது எப்படியிருக்கும்?

- க.மலர்ராஜன், திருகோணமலை.

தனக்கு வேண்டிய கொலைகளின்போது அமசடக்காயிருக்கவும், தானே கொல்லப் படலாம் என்று தெரியவரும்போது, கொலைகளை எதிர்த்து மானுட நேயத்தோடு ஆர்ப்பாட்டமிடவும் தெரிந்திருக்கும் மனம்!

நாளை உலகம் இல்லை என்றால்....?

- ஆர்.கோபிநாத், கம்பளை.

எனக்கென்ன கவலை? நான் இருந்தால் தானே!

காதல் எந்த வயதில் அரும்புகிறது?

- வீ.ஶ்ரீதரன், மல்லிகைத்தீவு.

ஆண் தன்னை ஆணாகவும், பெண் தன்னைப் பெண்ணாகவும் உணர ஆரம்பிக்கிற வயதில்!

எழுத்தாளர் சுஜாதாவின் எந்தக் கதை உங்களுக்கு மிகவும் பிடித்தது?

- மனோ கோபாலன், ஹப்புத்தளை.

நகரம், குதிரை, பார்வை, முரண், வீடு, நோ ப்ராப்ளம்.... என்று பல கதைகள் உண்டு. குறிப்பாக அவரது ஐம்பது விஞ்ஞானச் சிறுகதைகளைத் தொகுத்து உயிர்மை பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது. நிறையவே பிரமிப்பூட்டுகிறார். ஜெயமோகன் சொல்வது போல, சுஜாதாவின் எழுத்து நடை நவீனத் தமிழுக்கு ஒரு வசீகரமான கொடைதான். சந்தேகமில்லை.

'சந்திரமுகி'யில் ஜோதிகா எப்படி?

- ந.சிந்துஜா, கல்லடி.

சூரியாவுக்குச் சரியான ஜோ(போட்)டி தான்!

ஊடகங்கள் மக்களுக்கு உண்மைச் செய்திகளை சொல்வதைவிட, 'தமிழ்ச் செருக்கை' நிலை நிறுத்தும் செய்திகளைத் தருவதே இன்றைய கடமை என்று சொல் வதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

- ஆர்.சடகோபன், கொழும்பு - 13.

ஹிட்லர் சொன்னால் பாசிஸக் குரூரமாகவும், இனவெறிக் கொலைகாரனின் பேச்சாகவும் அருவருக்க வைக்கும் ஒரு விஷயம், நாங்கள் சொல்லும்போது விடுதலை முழக்கமாகவும், தர்ம ஆவேசமாகவும், நம் உணர்வுகளைப் பூரிக்க வைப்பதை அவ தானித்தீர்களா? கண்டதையும் யோசித்துக் குழம்பாமல், பெரும்பான்மைத் தமிழர்களின் ஜோதியில் மறுபேச்சற்றுக் கலந்துவிடுங்கள். விடுதலைப் பாதையில் வீறுநடை போடலாம்!

பதில் சொல்ல முடியாத கேள்வி களை எதிர்கொள்கின்றபோது சிரித்துச் சமாளிப்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

- க.கமால்தீன், ஏறாவூர்.

ஹிஹிஹி..... நன்றி!

ஆனந்தம், ரன் என்று தனது முதலிரண்டு படங்களையும் பெரிய வெற்றிப் படங்களாகத் தந்த இயக்குனர் லிங்குசாமி 'ஜீ' யில் சறுக்கியது ஏன்?

- எஸ் கபிலன், நுகேகொடை.

முதலாவதில் வாழ்க்கை இருந்தது, இரண்டாவதில் வேகம் இருந்தது, மூன்றாவதில் இரண்டும் மிஸ்ஸாகி விட்டது.

சிந்தியா நீங்கள் பொய் சொல்வதுண்டா?

- ச.நிரஞ்ஜலா, மஹியாவ.

'நான் பொய் சொல்ல மாட்டேன்' என்னும் பதில் நான் பொய் பேசுபவராக இருந்தாலும் பொருந்துமல்லவா!

விடுதலைப் போராட்டத்தை 'தளை நீக்கற் போராட்டம்' என்று எழுதி வருகிறாரே பேராசிரியர்! விடுதலைக்கும், தளை நீக்க லுக்கும் என்ன வேறுபாடு?

- இ.அரசரத்தினம், வவுனியா.

எதிர்க்கருத்து, மாற்றுக் கருத்து கொண் டிருப்பவர்களை எல்லாம் அழித்தொழிப்பது,



இதற்குத் தாங்கள் சார்ந்த மக்களுக்குள்ளும் பலரைக் கொல்ல வேண்டியிருப்பது, காலத் துக்குக் காலம் துரோகிகளைப் புதிது புதிதாக அடையாளங்காட்டி அவர்களது வாழ்வுரி மையைப் பறிக்க வேண்டியிருப்பது..... இவையெல்லாம் 'விடுதலை' என்ற மாபெரும் வார்த்தையைக் கொச்சைப்படுத்துவன என்று பேராசிரியர் கருதுகிறாராக்கும்! அதனால்தான், இடைஞ்சலாயிருப்பவர்களை 'அப்புறப்படுத்தும்' வேலையை எந்தவிதத் தயக்கமும் இன்றிச் செய்து உதவும் "பெடியளை" வகைப்படுத்த "தளை நீக்கல் போராட்டம்" என்பதைக் கண்டு பிடித்திருக்கிறார்.

இரண்டெழுத்தார் தங்கள் பெயரில் 'விடுதலை'யைச் சேர்த்துக்கொண்டிருப்பது, அவர்கள் செய்து வரும் காரியத்துக்குப் பொருத்தமற்றது என்பதை இப்படித் தந்திர மாகச் சுட்டிக் காட்டுவதுதான் பேராசிரியரின் முற்போக்குத் தமிழ் வீரம்!

(மனதில் உள்ளதை வெளிப்படையாகத் திறந்து காட்டி செத்த பிறகு, மாமனிதருக்குக் குறைந்த பட்டம் எதையும் பெற அவர் எந்த வகையிலும் தயாரில்லை!)

'தகதிமிதா' எப்படி?

- எம்.பி.ராஜ்குமார், போபிட்டிய.

முழுநீள விவேக் படம்.

"இடைக்கால சபையை அரசாங்கம் ஏற்படுத்தாவிட்டால் தமிழீழம்தான்!" என்று தேர்தலின் போது சூளுரைத்த மகேஸ்வரன் எம்.பி. எங்கே?

- ஏ.வரதராஜ், கொழும்பு - 12.

சிங்கப்பூரில் என்று கேள்வி.

சிந்தியா
பதில்கள்

இன்றைய இளைஞர்களிடத்தில் உயர் பண்புகளும் விழுமியங்களும் மதிப் பிழந்து போயிருப்பதற்கும், எதிலும் அவசரமும், மேம்போக்கான தன்மையுமே அதிகரித்து மிருப்பதாகக் காணப்படுவதற்கும் காரணம் என்ன?

- கு.சிவநாதன், மட்டக்களப்பு.

உங்களுக்கு வயதாகியிருப்பது!

தினம் ஒரு கொலையாவது விழுந்து கொண்டே இருக்கிறது. கொலைகளைச் செய்கிறவர்கள் இன்னமும் இனந்தெரியாத வர்களாகவே இருப்பதற்கு என்ன காரணம்?

- எம்.எஸ்.அஹமட் இப்ராஹிம், ஏறாவூர்-3.

என்ன கருமத்தைச் செய்தாவது, இந்தச் சிங்களவன்களுக்கொரு பாடம் படிப்பித்து விடு தலையை எடுத்துத் தந்துவிட மாட்டார்களா என்று நப்பாசையுடன் கடைவாயைச் சப்பியபடி நாம் காத்திருப்பதுதான் காரணம்!

ஜேசுதாஸின் வாரிசு விஜய் ஜேசுதாஸ் எப்படி?

- ஏ.எல்.முஹம்மட் றஸ்மி, அட்டாளைச்சேனை-2.

ருக்கு ருக்கு, கோடி கோடி மின்னல்கள்.... என்று ரசிக்கும்படியாகத்தான் பாடி வருகிறார் விஜய். ஆனாலும் தொண்டைக்குள் வீணை யின் நரம்புகளை வைத்திருந்து கிறங்கடிக்கும் அந்த அதிசயராகக் குரலின் வாரிசாக மதுபாலகிருஷ்ணன்தான் மயங்கவைக்கிறார். கேட்டீர்களா!

சிந்தியா, எப்போது எங்கள் நாட்டில் நிரந்தர அமைதி வரும்?

- இரா.உமா, கினலன் எல்ல.


ஒரு குளத்தில் மீன்களும், நண்டுகளும், செடி கொடிகளும், கொக்குகளும், மீன் கொத்திப் பறவைகளும் வசித்து வந்தன. அவ் வாண்டு மழை இல்லாமல் குளம் வற்றத் தொடங்கியபோது எல்லா உயிர்களும் கவலை கொண்டன.

அருகில் ஒரு குளம் வற்றாமலிருப்பதைப் பார்த்து வந்து கொக்கு சொல்ல, எல்லாம் அங்கு செல்ல முடிவெடுத்தன. மீன்களையும், நண்டையும் கொக்கு தன் அலகால் தூக்கிச் சென்று அந்தக் குளத்தில் விடுவதாக உறுதி சொல்லியது. முதலில் ஒரு மீனைத் தூக்கிச் சென்ற கொக்கு, இடைவெளியில் அதைச் சாப்பிட்டு விடலாமே என்று யோசித்தது. அதைச் சாப்பிட்ட பின், ஏனைய மீன்களையும் பிறகு உணவாக்கிக் கொள்ளலாம் என்று திட்டமிட்டு, எல்லாவற்றையும் வழியிலிருந்த பாறை ஒன்றின் மேல் கொண்டுவந்து சேர்த்தது. கடைசியாக நண்டையும் பாறையருகே கொண்டு வந்தபோது, பாறையில் காய்ந்து கொண்டிருந்த மீன்களை நண்டு கண்டது. கொக்கின் திட்டத்தைத் தெரிந்து கொண்ட நண்டு, தன் இடுக்கி போன்ற கைகளால் கொக்கின் அலகுகளைச் சேர்த்து இறுகப் பிடித்துக் கொண்டது. கொக்கு வாய்திறக்க முடியாமலும், நண்டு தன் பிடியை விட முடியாமலும் நாட்கள் கடந்தன. கொக்கு தான் நண்டைக் கவ்வியிருந்த பகுதியை விட்டு விட்டால், நண்டு பாய்ந்து கொக்கின் கழுத்தை நெரித்துக் கொன்றுவிடும். அதுபோல நண்டும் தன் பிடியை விட்டுவிட்டால் கொக்கு அதைச் சாப்பிட்டு விடும்.

அனைத்து நவீன ஆயுதங்களுடனும் இருப்பவர்களிடம் அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுத்துவிட்டால், மேலும் சண்டையிட்டுத் தனிநாட்டைத்தான் எடுத்துக்கொண்டு விடு வார்கள் என்று ஒரு தரப்பும், ஆயுதங்களையும், அழிக்கும் திறனையும் கைவிட்டுவிட்டால் இங்கே எந்த அதிகாரப் பகிர்வும் நடைபெறாது என்று மறு தரப்பும் தீவிரமாக நம்பிக் கொண்டிருக்கும் வரை ..... இங்குள்ள நிலைமையும் மாறப் போவதில்லை.




**1996** - 97ஆம் வருடங்களில் இலங்கை அணிக்கும் நியூசிலாந்து அணிக்கும் இடையில், நியூசிலாந்தில் டினெட்டின் மைதானத்தில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டி ஒன்றின் போது, இலங்கையின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன், எச்.டி.டேவிஸ் எனும் பந்து வீச்சாளர் வீசிய ஒரு ஓவர் பந்து வீச்சின் போது 20 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.


முரளிதரன்

முரளி, இதன்போது 0,4,4,6,2,4 என்ற வகையிலேயே இந்த 20 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இதே நேரம் இங்கிலாந்து அணிக்கும் இந்திய அணிக்கும் இடையில் 1990ஆம் வருடம் லண்டன் லோட்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியொன்றின் போது, இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான கிரகம் குச் 456 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். அதாவது, முதலாவது இன்னிங்ஸில் 333 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 123 ஓட்டங்களையும் இவர் பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத் தக்கதாகும். இப் போட்டியின் போது இங்கிலாந்து அணிக்கு இவரே தலைமையும் தாங்கினார்.

இங்கிலாந்து அணி சார்பாக 118 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டுள்ள குச், 20 சதங்கள், 46 அரைச் சதங்களுடன் 8,900 (சராசரி 42.58) ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

1877 மார்ச் 15ஆம் திகதி அவுஸ்திரேலிய 'மெல்பர்ன்' மைதானத்தில் இடம் பெற்ற உலகின் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின்போது முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி, தனது முதலாவது இன்னிங்ஸில் 245 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதுடன், இதில் 165 ஓட்டங்களை (ஆட்டமிழக்காமல்) சார்ள்ஸ் பெனர்மன் பெற்றுக் கொண்டார். இதன்போது இவர் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதலாவது பந்து வீச்சுக்கு முகங்கொடுத்தே தனது முதலாவது டெஸ்ட் சதத்தைப் பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத் தக்கது. இவர் பெற்ற இந்த ஓட்ட எண்ணிக்கையானது அப் போட்டியின் மொத்த ஓட்ட எண்ணிக்கையில் நூற்றுக்கு 67.34 ஆகும். இச் சாதனை இன்னமும் முறியடிக்கப்படாமல் உள்ளது.

அவுஸ்திரேலிய அணி சார்பில் மூன்று டெஸ்ட் போட்டிகளில் மாத்திரம் பங்கு பற்றிய சார்ள்ஸ் பெனர்மன், 239 (சராசரி 59.75) ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளார். இவர் பெற்ற ஒரேயொரு சதம் மேற்குறிப்பிட்ட முதலாவது போட்டியில் பெற்ற சதமாகும்.

இனி, தாங்கள் பங்கு பற்றிய முதலாவது டெஸ்ட் போட்டியில் ஓட்டங்கள் எதனையும் பெறாமல், ஆட்டமிழந்த வீரர்கள் பற்றிப் பார்ப்போம்.

**விக்டர் ட்ரம்பர் - (அவுஸ்திரேலியா)**

1899இல் இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் மெல்பர்ன் மைதானத்தில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டி.

**லென் ஹட்ன் - (இங்கிலாந்து)**

இங்கிலாந்து - நியூசிலாந்து அணி களுக்கிடையில் 1937இல் லோட்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற போட்டி.

**கென் பெலிங்டன் - (இங்கிலாந்து)**

இங்கிலாந்து : தென்னாபிரிக்கா அணிகளுக் கிடையில் நொட்டிங்ஹம் மைதானத்தில் 1955இல் இடம்பெற்ற போட்டி.


சார்ள்ஸ் பெனர்மன்

**எலன் நொட் - (இங்கிலாந்து)**

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நொட்டிங்ஹம் மைதானத்தில் 1967இல் இடம்பெற்ற போட்டி.

**சித் ப்ளவர் - (இங்கிலாந்து)**

இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் லீட்ஸ் மைதானத்தில் 1968இல் இடம்பெற்ற போட்டி.

**க்லென் டர்னர் - (நியூசிலாந்து)**

நியூசிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் ஒக்லன்ட் மைதானத்தில் 1968-69 களில் இடம்பெற்ற போட்டி.

**குந்தப்பா விஸ்வநாத் - (இந்தியா)**

இந்தியா - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் கான்பூரில் 1969-70களில் இடம்பெற்ற போட்டி.

**கிரகம் குச் - (இங்கிலாந்து)**

பர்மிங்ஹாம் மைதானத்தில் இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் 1975இல் இடம்பெற்ற போட்டி. குச் இந்தப் போட்டியில் இரண்டு இன்னிங்ஸ்களிலும் ஓட்டம் எதையும் பெறாமலே ஆட்டமிழந்தார்.

**மைக் பியர்லி - (இங்கிலாந்து)**

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் நொட்டிங்ஹம் மைதானத்தில் 1976இல் இடம்பெற்ற போட்டி.

ரிச்சி ரிச்சர்ட்சன் - (மேற்கிந்தியத் தீவுகள்)

மேற்கிந்தியத் தீவுகள் - இந்திய அணிகளுக்கிடையில் 1983-84களில் மும்பையில் இடம்பெற்ற போட்டி.

**- மைந்தன்**

## எந்த கிழமையில் பிறந்தீர்கள்?

**மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலாபலன்களாகும்.**

**சொல்பவர் :**
**ஜோதிட அறிஞர், பேராசிரியர்,**
**டாக்டர் பீ.கே. சாமி J.D.G.A.N.,**
**(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**

### ஆதிக்கம் 9 : பிறந்த கிழமை திங்கள்

ஒளியுடைய திங்கட்கிழமையிலும் அதிசிறப்பு மிக்க ஆதிக்க எண் 9ஐயும் கொண்டுள்ள நீங்கள் நம்பிக்கை மிகுதியாக உடையவர். உலகத்தில் சாதனை புரிந்தவர்களைப் பேட்டி கண்டால் தெரியும். அவர்கள் தன்னம்பிக்கை உடையவர்களாகவே இருந்திருப்பர். அதைப் போல தன்னம்பிக்கை இமயத்தையும் சாய்க்கும் சக்தி கொண்டது. தன்னம்பிக்கை உள்ளவனுக்கு கால்கள் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. அவன் சாதிப்பான். நீங்கள் சாதனை புரியும் ரகத்தைச் சேர்ந்தவர்!

என்ன நிலை வந்தாலும் எப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டாலும் நேர்மை எனும் ஆயுதத்தை ஒருபோதுமே கைவிடமாட்டீர்கள். நேர்மை உள்ளவனுக்கு நேரங்கூட வணக்கம் தெரிவிக்கும்! காலம் கையெடுத்துக் கூப்பும். அந்தளவுக்கு நீங்கள் நேர்மையானவர். மத வழிபாடு, மதக் கிரியைகள், பக்தி என்பவற்றை அக்கறையுடன் பேணுவீர்கள். இறைவன் மீது அதிக பக்தியுள்ளவராகத் திகழ்வீர்கள்.

தேசத்தின் மீது அதிகப் பற்றும், தேச நலனுக்காக உழைக்கக்கூடிய தன்மையும் கொண்டவராக இருப்பீர்கள். எந்தவிதமான வேலையாக இருப்பினும் மனத்திடத்துடனும் நம்பிக்கையுடனும் செய்து முடிக்கும் ஆற்றல் உங்களிடம் நிறையவே உண்டு. ஒரு மனிதனின் முன்னேற்றத்திற்கும் தாழ்வுக்கும் மனந்தான் முக்கிய காரணம். உங்களைப் பொறுத்தவரையில் உங்கள் மனந்தான் உங்களுடைய முன்னேற்றத்திற்குக் காரணமாக அமைந்திருக்கிறது. எண்ணம், சொல், செயல் இம்மூன்றும் சிறப்பானதாக உங்களிடம் அமைந்திருக்கிறது.

ஒரு வேலையைச் செய்வதாக இருந்தால், அதுவும் பிறருக்கு அந்த வேலையினைச் செய்து கொடுப்பதாக இருந்தால் எந்தப் பலனையோ பிரதி உபகாரத்தையோ எதிர்பார்க்கவே மாட்டீர்கள். அந்த வேலையை நிறைவேற்றிக் கொடுக்கும் போது அவர்கள் அடைகின்ற மகிழ்ச்சியில் நீங்களும் மகிழ்ச்சி காண்பீர்கள். அரசாங்கத்துறை சார்ந்த தொழிலில்தான் நீங்கள் கடமை புரிவீர்கள். தனியார் துறையிலோ அல்லது வேறு வகையிலோ தொழில் செய்யமாட்டீர்கள்.

உடலை வருத்தி உழைக்க வேண்டிய தேவை உங்களுக்கு இல்லை. இலகுவான முறையிலும் சுலபமான வழியிலும் உங்களுக்கு வருமானம் கிடைக்கும். கல்வியைப் பொறுத்தவரையில் தொடர்ந்து அதிகம் படிக்கக் கூடிய வாய்ப்பும் வசதிகளும் இருந்தாலும் மேற்கொண்டு படிக்கமாட்டீர்கள். இதனால் அரசாங்கத்துறையில் உயர் பதவிகளை நீங்கள் பெற முடியாது.

ஒரு மனிதன் தன் வாழ்க்கையில் எவ்வளவு வேண்டுமானாலும் சம்பாதிக்கலாம். அவன் உழைத்த அவ்வளவு பணத்தையும் செலவு செய்வானாயின் அவன் ஏழையாவது நிச்சயமே. தேடிய பணத்தில் ஒரு தொகையினை எதிர்கால நன்மை, தேவை கருதிச் சேமிக்கிறவன் ஏழையாக இருந்தாலும் பின்னர் பணக்காரன் என்ற நிலைக்கு உயர்வடைகிறான். சேமிப்பு என்பது ஆயுளுக்கு நாம் செலுத்திவைக்கும் சந்தோசம் என்பதைப் புரிந்தவர் நீங்கள். இதனால் சேமிப்பும் சிக்கனமும் உங்கள் இரு கண்களாக இருக்கும். வீண் செலவு, அனாவசியச் செலவு என்பவை உங்களிடம் என்றுமே இல்லை.

18 வயதில் உங்கள் தொழில் முறை ஆரம்பித்து 19, 22, 25, 28, 31 வயது வரை படிப்படியாக உயர்ந்து வருமானம் பெறுவீர்கள். அடிக்கடி சிரமங்கள் ஏற்பட்டாலும் பணம் தாராளமாகப் புரளும். 32, 33, 38, 41 வயதுகளில் பண வருமானம் கூடுதலாகக் காணப்படும். இதனால் சந்தோசமாக வாழக்கூடிய நிலை ஏற்படும்.

உங்களுடைய 42ஆவது வயது காலத்தில் புடைவை அல்லது காகிதம் சம்பந்தப்பட்ட வியாபாரம் கூட்டாகச் செய்வீர்கள். இதனால், 55 வயது வரை வருமானம் சிறப்பாகக் கிடைக்கும். சொத்து சுகம் என்று சகல வசதிகளும் பெற்று சிறப்பாக வாழ்வீர்கள். உங்களுடைய 3ஆவது வயதுக் காலத்தில் (இள வயது) உடல் நிலை பாதிக்கப்படுவீர்கள். ஆனால் உயிர் பிழைப்பீர்கள். இதன் பிற்பாடு நீங்கள் மரணிக்கும் வரைக்கும் எந்த ஆபத்தும் நேராது.

மலச்சிக்கல், வயிற்றுவலி, நெஞ்சுவலி என்பன அடிக்கடி உங்களுக்கு ஏற்படும். இதற்குக் காரணம் சூடான தேகநிலை உடையவர் நீங்கள். இதனால் சூட்டைத் தணிக்கும் உணவுகளை நீங்கள் சாப்பிட வேண்டும். சிறு பசளைக் கீரை, உழுந்து வடை, பச்சைப் பருப்பு, பனங்கிழங்கு, பச்சை வாழைப்பழம், புட்டரிசி, பூவன் வாழைப் பழம், மொந்தன் வாழைப் பழம், தயிர், பசுப்பால், நெய், மோர், தயிர், மிளகு, தக்காளிப்பழம், முருங்கைக்காய், வெண்டைக்காய், வெங்காயம், மாதுளம்பழம் போன்றவற்றை நிறையவே சாப்பிட வேண்டும்.

ஆதிக்க எண் 9ஐ நீங்கள் பெற்றிருந்தாலும் உங்களுக்கு யோகத்தையும் நல்ல காலத்தையும் ஏற்படுத்தும் எண் 2. மாதத்தில் வருகின்ற 2, 11, 20, 29 ஆகிய திகதிகளில் நீங்கள் செய்யும் காரியங்கள் வெற்றியைத் தரும். மேற்குறிப்பிட்ட திகதிகள் நீங்கள் பிறந்த திங்கட்கிழமையில் அமையுமானால் விசேட பலனை உண்டு பண்ணும்.

நீங்கள் சந்தன நிறத்தில் சர்ட் அணிவது நன்மை தரும். இடுப்புக்குக்கீழ் வெள்ளை நிற ஆடைகளை அணிய வேண்டும்.

வெள்ளி மோதிரம் அணியுங்கள், உங்களுக்கு அதிர்ஷ்டம் மேலும் கிடைக்கும் நீங்கள் வசிக்கும் வீட்டின் இலக்கம் இரட்டை எண்ணாக அமைதல் சிறப்புத் தரும். ஆகவே ஆதிக்க எண் 9ஐயும் திங்கட்கிழமையினையும் கொண்டுள்ள நீங்கள் வாழ்வில் சகல யோகங்களும் பெற்று வாழ என் நல்லாசிகள்.

**நேர்மைக்கும் நிறை வாழ்வுக்கும் நன்மை தரும் எண் ஒன்பதும் நல் அதிர்ஷ்டம் வழங்கும் திங்களும் உள்ள நீங்கள் பெற்றது பாக்கியம்.**


அடுத்த வாரம் ஆதிக்கம் 9 செவ்வாய்க்கிழமை பிறந்தவர்களைப் பற்றிப் பார்ப்போம்.




## முன்னாள் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவர் காலமானார்

**பாகிஸ்தான் அணியை பல வெற்றிகளுக்கு இட்டுச் சென்ற பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் பசால் முஹமட் தனது 78ஆவது வயதில் மரணத்தைத் தழுவிக் கொண்டார்.**

**இவர் லாகூரை பிறப்பிடமாகக் கொண்டவர். இந்திய அணியை**


பசால் முஹமட்

**பாகிஸ்தான் வென்ற முதலாவது போட்டியை வழிநடத்திய பெருமை இவரையே சாரும்.**

**சிறந்த ஒரு துடுப்பாட்ட வீரர் மட்டுமன்றி உயரம் கூடிய மெல்லிய வேகப்பந்து வீச்சாளர் என்ற பெருமையைக் கொண்ட இவர் 34 டெஸ்ட் போட்டிகளில் 139 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். (சராசரி 24.70)**

**பாகிஸ்தான் அணிக்கு இவர் 10 தடவைகள் டெஸ்ட் போட்டிகளின் போது தலைமை தாங்கினார் என்பதும் மற்றொரு தகவல்.**

**வலது மற்றும் இடது பக்கங்களில் பந்து வீசக் கூடிய இவர், இந்தியா - பாகிஸ்தான் என இரு நாடுகளாக பிரிக்கப்பட முன்னர் இந்தியாவின் உள்ளூர் அணிகள் தமது திறமைகளைக் காட்டும் ரஞ்சி கிண்ண போட்டித் தொடரிலும் விளையாடிய பெருமையை உடையவர்.**

**இவருடைய நண்பரும் முன்னாள் கிரிக்கெட் வீரருமான ஹனீவ் முஹமட் இவருடைய இறப்பு பற்றி கருத்து கூறுகையில், "இவருடைய இழப்பு பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு ஒரு பெரும் இழப்பு" என்று தெரிவித்தார். அதே வேளை 1954ஆம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கு எதிராக ஓவல் மைதானத்தில் இடம் பெற்ற போட்டியில் 12 விக்கெட்டுகளை வீழ்த்திய அணியை பெரும் வெற்றிக்கு ஈட்டிச் சென்ற பசால் முஹமட் இன்னும் தனது கண்முன் காட்சியாக உள்ளதாகத் தெரிவித்தார்.**

**பசால் முஹமட் சிறந்த மனித நேய மிக்க ஒரு மனிதராகவும் திகழ்ந்தார் என்பது அவர் கிரிக்கெட்டில் ஆர்வம் கொண்ட அனைத்து இளைஞர்களுக்கும் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்ததிலிருந்து புலனாகிறது என தற்போதைய இளம் வீரர்கள் தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும் 50 - 60களில் துறைசார்நயாகனாக திகழ்ந்த ஒருவரை பாகிஸ்தான் அணி இழந்து விட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது.**

TRUMAN - ALFA GOLD - EUROSTAR
SATELLITE & CABLE TV PRODUCTS!
Digital Receivers, LNBFs, Dish Antennas, Positioners,Actuators, Switches, Connectors, Splittes,Cables RGII,RG6,RG59, (Aluminium Gel) Ku-Band Dishes, Ku-Band LNBFS,ACM/SFM Modulators, Channel Combiners,Amplifiers,
WE UNDERTAKE COMPLETE INSTALLATIONS OF SATELLITE TV SYSTEMS, REPAIRS,UPDATING & TUNING JOBS
AD INNOVATIONS
Oxford Trading Co.
No. 159, Maliban Street, Colombo 11, Sri Lanka.
Tel: 2421437, Fax: 2321611
E-mail : absakha@sltnet.lk / kamaldeen@satcodx.org
DIGITAL TELECOM - NOKIA - ECHOSTAR
SAMSAT - SAMSUNG - SUPERJACK
TECHNOSAT - NEOSAT - SUPERMAX

# லெனின் (1870 - 1924)

# உலகை வியக்க வைத்தவர்கள்

சென்ற வாரத் தொடர்ச்சி.....

இந்தப் பொருளாதார முறையே சோவியத் ஒன்றியத்தில் பல ஆண்டுகள் வரை தொடர்ந்து நீடித்தது.

லெனின் இடைவிடாமல் நீண்டகாலம் உழைத்து வந்தது அவருடைய உடல் நலத்தைச் சீர் குலைத்தது. அதனால் 1922 மே மாதம் அவருக்குப் பக்கவாதம் ஏற்பட்டது. அவர் வேலை செய்யாமல் ஓய்வு எடுக்க வேண்டும் என மருத்துவர்கள் ஆலோசனை கூறினார்கள். அவருக்குத் திசு தடித்தல் என்னும் நோய் முற்றியது. பேச முடியாத நிலையும் உண்டாயிற்று. டிசம்பரில் இவரது வலக்கையும் வேலை செய்ய முடியாமல் போயிற்று. அது முதல் முற்றிலும் செயலற்ற நிலையிலேயே இருந்த லெனின், 1924ஆம் ஆண்டு ஜனவரி 21 ஆம் நாள், மாஸ்கோ நகரின் அருகிலுள்ள கால்க்கி என்னும் சிற்றூரில் இறந்தார். இவருடைய மறைவினால் நாடெங்கும் மக்கள் துயரத்தில் ஆழ்ந்தனர். அவருடைய உடல் தைலமுட்டி மாஸ்கோவிலுள்ள செஞ்சதுக்கத்தில் ஒரு அழகான கல்லறையில் வைக்கப்பெற்றது. அந்த உடல் இன்றும் அழியாமல் உள்ளது. அதனை இன்றும் ஆயிரக்கணக்கான மக்கள் நாள்தோறும் பார்த்து மரியாதை செலுத்தி வருகிறார்கள்.

லெனின் ஒரு செயல்வீரராக விளங்கினார். ரஷ்யாவில் பொதுவுடைமை அரசை நிறுவுவதற்குக் கண்ணுங் கருத்துமாகப் பாடுபட்டார். அவர் கார்ல் மார்க்ஸின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு அவற்றை நடைமுறை அரசியலில் செயற்படுத்தினார். 1917 நவம்பர் முதற்கொண்டு உலகெங்கும் பொதுவுடைமை ஆட்சி தொடர்ந்து விரிவடைந்து வந்தது. இன்று உலக மக்களில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியினர் பொதுவுடைமை ஆட்சியின் கீழ் இருக்கிறார்கள்.


லெனின்

லெனின் முக்கியமாக அரசியல் தலைவராக விளங்கிய போதிலும், அவர் தமது புரட்சிகரமான எழுத்துகளின் மூலமாகவும் கணிசமான அளவுக்குச் செல்வாக்குப் பெற்றார். லெனின், மார்க்ஸ் தத்துவத்தில் ஊறியவர் அவருடைய கொள்கைகள், மார்க்ஸின் கொள்கைகளுக்கு முரண்படவில்லை. எனினும், முதன்மைகளை அளிப்பதில் அவர் மார்க்ஸிடமிருந்து பெரிதும் மாறுபட்டார். லெனின் புரட்சி இயக்கங்களை நிறுவுவதில் மிகுந்த அனுபவம் உடையவர்.

உலகம் முழுவதிலும் நடைபெற்ற தொழிலாளர் இயக்கங்களை நன்கு அறிந்தவர். ஒரு நாட்டுக்கு உகந்த முறைகளைப் பிற நாடுகளுக்கும் பயன்படுத்துவதை வன்மையாக எதிர்த்தவர். நாட்டுக்கும் உலகத்துக்கும் ஏற்ற முறையில் புரட்சி இயக்கங்களை உருவாக்க வேண்டும் என்ற உறுதியான கொள்கை உடையவர். அவர் புரட்சி நடவடிக்கைளில் மிகுந்த ஈடுபாடு உடையவராக இருந்தார். வன்முறை இன்றியமையாதது என்று அவர் வலியுறுத்தி வந்தார். "வர்க்கப் போராட்டத்தில் ஒரு சிக்கல் கூட வன்முறையின்றி தீர்க்கப்பட்டதாக வரலாறே இல்லை"! என்று அவர் வலியுறுத்தினார்.

"தொழிலாளர் சர்வாதிகாரம்" பற்றி மார்க்ஸ் இங்கு மங்கும்தான் குறிப் பிட்டுள்ளார். ஆனால், லெனின் இந்தக் கோட்பாட்டைத் தீவிர வெறியுடன் பின்பற்றினார். "தொழிலாளர் சர்வாதிகாரம் என்பது வன்முறை அடிப்படையில் அமைந்த அதிகாரமேயன்றி வேறில்லை. அந்த அதிகாரத்தை சட்டத்தினாலோ, ஆட்சியினாலோ கட்டுப்படுத்த முடியாது" என்று நம்பினார்.

லெனினுடைய பொருளாதாரக் கொள்ளைகளை விட சர்வாதிகாரம் பற்றிய அவரது கொள்ளைகள் தாம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். சோவியத் அரசின் தனிச் சிறப்புக்குக் காரணம் அதன் பொருளாதாரக் கொள்ளைகள் அல்ல (வேறு பல நாடுகளிலும் சோசலிஸ அரசுகள் ஆள்கின்றன) மாறாக அரசியல் அதிகாரத்தை நிரந்தரமாகத் தக்கவைத்துக் கொள்வதற்கான அதன் உத்திகள் தாம் தனித்தன்மை வாய்ந்தனவாகும். லெனினின் காலம் முதற்கொண்டு, உலகின் ஒருமுறை நிலையாக வேரூன்றிவிட்ட எந்த ஒரு பொதுவுடைமை அரசும் கவிழ்க்கப்பட்டதில்லை, பொதுவுடைமை அரசுகள் ஆட்சியைப்பிடித்தவுடன், நாட்டிலுள்ள பத்திரிகைகள், வங்கிகள், திருச்சபைகள், தொழிற்சங்கங்கள் முதலிய அதிகார நிறுவனங்கள் அனைத்தையும் தம் வலுவான கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வந்து, உள்நாட்டில் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான வாய்ப்பினை அடியோடு ஒழித்து விடுகின்றன. அவர்களுடைய படைக்கலங்களில் பலவீனமானது எதேனும்மொன்று இருக்கத்தான் செய்யும். ஆனால் அந்த பலவீனத்தை இதுவரை யாரும் கண்டுபிடிக்கவில்லை. பொதுவுடைமை இயக்கம், மிகுந்த அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இயக்கம் என்பதில் ஐயமில்லை. அந்த இயக்கத்தில் மிகவும் செல்வாக்கு மிக்கவர் மார்க்ஸா, லெனினா என்பது முக்கியமில்லை. மார்க்ஸ், லெனினுக்கு முன்னர் வாழ்ந்தவர்; லெனின் மீது செல்வாக்குச் செலுத்தியவர் இந்தக் காரணத்தினாலேயே மார்க்ஸை அதிக முக்கியத்துவம் வாய்ந்தவராகக் கருதுகிறேன். எனினும் ரஷ்யாவில் பொதுவுடைமை நிறுவுவதில் லெனினுடைய நடைமுறை அரசியல் திறமைதான் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தது எனலாம். லெனின் இல்லா திருந்தால், அட்சியைப் பிடிப்பதற்கான ஒரு வாய்ப்புக்காக பொதுவுடைமைவாதிகள் மேலும் பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்திருக்கலாம். அவர்களும் வலுவான எதிர்பார்ப்புத் தோன்றி அவர்கள் ஆட்சியைப் பிடிக்காமலே போயிருக்கலாம். லெனின் முக்கியத்துவத்தை ஆராயும்போது அவர் மிகக் குறுகிய காலமே ஆட்சியிலிருந்தார். என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும், சோவியத் ஒன்றியத்தில் தொழிலாளர் சர்வாதிகாரம் நிறுவப் பெற்றதற்கு, லெனினுக்குப் பின் ஆட்சிக்கு வந்த லெனினை விடவும் ஈவிரக்கமின்றி ஆட்சி புரிந்த ஜோசப் ஸ்டாலினும் முக்கிய காரணமாவார். லெனின் தமது வாழ்நாள் முழுவதும் கடுமையாக உழைத்தவர். அவர் ஈடிணையற்ற எழுத்தாளராகவும் விளங்கினார். அவர் எழுதிய நூல்கள் 55 தொகுதிகளாகத் தொகுக்கப்பெற்றுள்ளன. லெனின் தமது புரட்சிப் பணியில் தீவிர ஈடுபாடுடையவராக இருந்தார். அவர் தமது குடும்பத்தை நேசித்த போதிலும் அந்தக் குடும்பப் பாசம் தமது அரசியல் பணிக்கு இடையூறாக இருக்க அவர் ஒரு போதும் அனுமதித்ததில்லை. லெனின் தமது ஆயுள் முழுவதும் அடக்குமுறையை ஒழிப்பதற்குப் பாடுபட்டபோதிலும், அவருடைய சாதனைகளின் நிகர விளைவாக அமைந்தது உலகின் கணிசமான பகுதியில் தனி நபர் சுதந்திரங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டதாகும்.

**அடுத்த வாரம் முதலாம் எலிசபெத் அரசி வியக்க வைப்பார்**

# காதிலை பூ கந்தசாமி

**நோட்டீஸ் பலகை**


வணக்கமுங்கோ!

> நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
> -காதில பூ கந்தசாமி-

ஒரு காலத்திலை சமாதான நகரமாகக் கருதப்பட்ட திருகோணமலை இண்டைக்கு ஹர்த்தால் நகரமாக மாறிப் போயிட்டுது. அதுக்குக் காரணம் திடீரெண்டு முளைச்ச புத்தர் சிலைதானுங்கோ. அட ஒரு புத்தர் சிலைக்கா தமிழர் ஹர்த்தால் நடத்தினம் எண்டு நினைச்சிப் போட்டினம் பலபேர். புத்தர் சிலைக்காக ஹர்த்தால் இல்லையுங்கோ. தேவையில்லாத இடத்தில, தேவையில்லாத விதத்தில தேவையில்லாத நேரத்தில, தேவையில்லாத நோக்கத்தில தேவையில்லாமல் புத்தர் சிலை அமைக்கப்பட்டது தானுங்கோ பிரச்சினை.

அது பிழையெண்டும், அகற்றுங்கோ எண்டும் நீதிமன்றம் சொன்னாப் பிறகும் அதுக்கு கம்பிவேலி போட்டு, மண்மூடை அடுக்கி ஆயுதம் தாங்கிக் காவல் காக்கினம் எண்டதுதான் ஏன் எண்ட கேள்வியை மேலுக்குக் கொண்டு வருகுது. சுமுகமாத் தீர்வதற்கு முன்னம் தமிழர்களால் அடித்து உடைக்கப்பட்டால் அது இனக்கலவரத்தை உண்டு பண்ணும் எண்டதாலதான் தீர்வு வரைக்கும் பாதுகாப்பா படைகள் நிக்கினம் எண்டினம் சில பேர். ஆனால் மறுவலத்தாலை என்ன சொல்லினம் தெரியுமே? சிலை அதில இருக்கும். எந்தக் கொம்பனும் ஒண்டும் செய்யமுடியாது எண்ட எண்ணத்தில தான் சிப்பாய்கள் சென்றி நிக்கினம் எண்டும் சொல்லினம். இது ரெண்டிலையும் எது உண்மை, எது சரியெண்டு எனக்கு விளங்குதில்லை. ஆனால், ஒண்டு மட்டும் உண்மை. அனுமதியற்ற விதத்திலும், மக்களின் சுமுக வாழ்க்கையைப் பாதிக்கும் விதத்திலும் அமைக்கப்பட்ட இவ்வாறான சிலைகளை அகற்றும்படி நீதிமன்றம் ஒண்டுக்கு ரெண்டு தடவை உத்தரவிட்டும் அதை அமுல் படுத்தாம பொலிஸார் பின்னடிக்கிறதுதான் கொஞ்சம் சந்தேகத்தைக் கிளப்புறது. நீதிமன்ற தீர்ப்புகளையே நிறைவேற்ற முடியாத பொலிஸார் மீது பொதுமக்கள் எதிர்காலத்தில் எப்புடி நம்பிக்கை வைக்கப் போகினம் எண்டதுதான் இன்னொரு பிரச்சினை.

ஒருபக்கம் இப்பிடி எண்டால் அடுத்த பக்கத்தில தமிழர் பேரவை எண்டிரவர் தன்ர இஷ்டத்துக்கு ஹர்த்தால் எண்டு சொல்லுறார், தமிழர் கூட்டமைப்பு ஒரு ஹர்த்தால் எண்டினம், கடைசியா புலிகளும் ஒரு ஹர்த்தால் பற்றி திகதி சொல்லி இருக்கினம்.

பாத்தியளோ ஆளுக்கொரு ஹர்த்தால் நடத்துறதுதான் தமிழரின்ர எதிர்ப்பெண்ட விதமாப் போட்டுது. இதிலையே இன்னொரு விஷயத்தை அவதானிச்சியளோ. 'அவைதான் இவை. இவைதான் அவை' யெண்டும் கப்ஷா விடுகினமெல்லோ. அது உண்மையெண்டால் ஏன் மூன்று பிரிவாக ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கவேணும். அப்படியெண்டால் தமிழ் மக்கள் வேறை, கூட்டமைப்பு வேறை, புலிகள் வேறை எண்ட உண்மை உந்த புத்தர்சிலை விவகாரத்திலை வெளிச்சத்துக்கு வந்திட்டுது. மதம், ஜாதி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மிகவும் சென்சிட்டிவானது எண்டதாலை பெற்றோல் இல்லாமலேயே பற்ற வைக்க முடியுமெண்டதை யாரும் மிஸ் யூஸ் பண்ணிவிடக் கூடாதுங்கோ. அது எரிய வெளிக்கிட்டுது எண்டால் அணைக்கிறது மகா கஷ்டம். அது பல உயிர்களையும், சொத்துக்களையும் எரித்து சாம்பலாக்கி விடும். மகா ஜனங்களுக்கு என்னுடைய வேண்டுகோள் இதுதானுங்கோ. இளகின இறும்பைக் கண்டால் கொல்லன் அதைத் தூக்கித் தூக்கி அடிப்பானாம் எண்ட மாதிரி நீங்கள் உணர்ச்சிவசப் படுவியள். ஆவேசப்படுவியள். அந்தக் சாட்டிலேயே பொலிரிக்ஸ் பண்ணிப் போடலாம் எண்டு சில ....... மனப்பால் குடிக்கினம்.

அதுக்கு இடம் கொடுத்துப் போடாதையுங்கோ. அதே நேரத்தில நியாயமான வழியாலை எங்கட எதிர்ப்பையும் வெளிக் காட்டத்தான் வேணும். பிரச்சினை களைத் தீர்த்துக் கொள்ளுறதுக்காக எதிர்ப்பு இருந்தால் அது ஓகே. ஆனால் பிரச்சினையை உண்டு பண்ணுறதற்காக எதிர்ப்புக் காட்டிறது எண்டதை ஒரு சாதகமான வழிமுறையாக வரலாறு ஏற்றுக்கொள்ள வில்லை. அவ்வாறான முயற்சிகளெல்லாம் வெற்றியை நோக்கி ஒரு அங்குலத்தை முன் நகர்த்துவதாகத் தெரிந்தாலும், தோல்வியை நோக்கி ஒரு அடி பின் நகர்த்தவே செய்துள்ளது. இதுதான் அணுகுமுறைத் தவறு எண்டு படிச்சவை சொல்லினம்.

ஒவ்வொரு கட்டத்திலையும் கிளைமாக்ஸில யுத்தம் கிழக்கில இருந்துதான் கிளப்பப் பட்டிருக்கு. அதனுடைய தொடர்ச்சியாக இந்த போர்நிறுத்த ஒப்பந்த காலத்துக்கும் கிளைமாக்ஸ் கிழக்கில இருந்து ஆரம்பிக்கப் படுவதற்கு மக்கள் இடம் கொடுத்துவிடக் கூடாது என்பதாகும். ஏன் உப்பிடிச் சொல்லிறன் எண்டால் கோபப்படுகிற ராஜாவுக்கு கொல்லிக் கட்டையைத் தூக்கிக் கொடுக்கிறவை கொஞ்சப்பேர் கொடுக்குக் கட்டிக் கொண்டு அலையிறாங்களுங்கோ.....

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(02.06.2005 தொடங்கி 08.06.2005 வரை)

**சோதிட மாமணி தில்லை**

## இந்த வாரக் கிரக நிலை

இடபம் - சூரியன், புதன், மிதுனம் - வெள்ளி, கடகம் - சனி, கன்னி - வியாழன், கேது, கும்பம் - செவ்வாய் .மேடம் - இராகு.
சந்திரன் மீனம், மேடம், இடபம், மிதுனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், செலவு மிகுதி, பிரயாணக் கஷ்டம், அன்னியர் நட்பு, உத்தியோகக் கலக்கம், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் துயர், மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

**இடபம் :** (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் அலைச்சல், மனக் கஷ்டம், பெரியோர் பகை, மனக்குறை நீங்கும், குடும்பப் பொறுப்பு, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும், குடும்ப சுகம், உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் கலக்கம், பணியாளர் தொல்லை, செலவதிகம், தேகசுகக் கஷ்டம், உத்தியோக பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.) தொழில் பலிதம், மனக்குறை நீங்கும், பல்வித யோசனை, வெளியிடப் பயணம், அன்னியரால் தொல்லை, குடும்பக் கஷ்டம், உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் நன்மை, பெரியோர் உதவி, கௌரவம், மனக்குறை நீங்கும், குடும்பப் பாரம், எதிர்பாரா செலவு, உத்தியோக முயற்சி, மாணவர் கல்விக் கஷ்டம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் அலைச்சல், பாரிய செலவு, வெளியார் தலையீடு, கடன் சுமை, இனசன உதவி, துயர் நீங்கும், உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

**விருச்சிகம் :** (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.) தொழில் உயர்ச்சி, பிரயாண மிகுதி, தேகசுகக் கஷ்டம், வெளியார் தொல்லை, பொருள் இழப்பு, குடும்ப நன்மை, உத்தியோக முயற்சி, மாணவர் கல்வி மாற்றம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம் :- 05.

**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்.) தொழில் நன்மை, பெரியோர் நட்பு, காரியானுகூலம், இனசன வெறுப்பு, துயர் அதிகம், உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் பயம், வீண் செலவு, அன்னியர் நட்பு, கௌரவக் குறைவு, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக அலைச்சல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் பகை, பங்காளர் இழப்பு, கடன் சுமை, வெளியார் உதவி, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக மகிழ்ச்சி, மாணவர் கல்விக் குழப்பம், புதிய கல்வி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

**மீனம் :** (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் நன்மை, செலவதிகம், மறைமுக எதிர்ப்பு, இனசன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை, உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)

இதய வீணை

தினமும்

மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை

| | |
|---|---|
| கிழக்கு மாகாணம் | 107.9, 104.5 |
| வட மாகாணம் | 92.2 |
| கொழும்பு | 106.6 |

அடக்கப்பட்ட மக்களின்
உணர்வுகள்
கருத்துக்களாய் கதைகளாய்...
செய்திகளாய்...
நமது காதுகளில்

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Localization : | 13° East |
| Frequency : | 11013 MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |







## சொர்க்கம்

சுனாமியால் எமது நாடு மட்டுமல்ல, பல தென்னாசிய நாடுகளின் உல்லாசப் பிரயாணத்துறை வீழ்ச்சியடைந்தது. இதனால் வேறு சில நாடுகளில் இத்துறை வளர்ச்சியடைந்தது. அந்த வகையில் டொமினிக்கன் குடியரசுக்கு ஐரோப்பிய உல்லாசப் பிரயாணிகளின் வருகை அதிகரித்துள்ளதால், தென்னாசிய நாடுகளைப் போல் இவர்கள் கடலில் இருந்து பெரிய கால்வாய்கள் மூலம் தரைக்கு நீரைப் பாய்ச்சி நீச்சல் தடாகங்களை உருவாக்கி உல்லாசப் பயணிகளைத் தங்கள் வசம் கவர்ந்திழுக்கிறார்கள். தென்னாசிய நாடுகளைப் போல் இங்கும் தென்னை மரங்கள் மற்றும் காலநிலைகளும் காணப்படுவதால் இலகுவாக உல்லாசப் பிரயாணத் துறையை வளர்க்க முடிகிறது. ஒருவரின் வீழ்ச்சியில்தான் மற்றவரின் உயர்ச்சி இருக்கிறது என்பது உண்மையல்லவா?





## ஆடை பாதி

மேலைத்தேய நாடுகளில் குளிர் வந்தால் உடலை மூடிக்கட்டிக் கொண்டும், வெப்பக் காலத்தில் அதற்கு எதிர்மாறாக இருப்பதும் வழமை. இங்குள்ளவர்களும் ஒரு வெப்பக் காலத்திலே எவ்வாறு உடை அணியலாம் என்று விளம்பரப்படுத்துவதற்காக போஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வெப்பக்கால ஆடை விளம்பரம் என்று தலைப்பிடப்பட்ட இந்நிகழ்ச்சியைக் கண்டு களிக்க பல ஆயிரக்கணக்கான மக்கள் அலை மோதியது என்னவோ உண்மைதான். வெப்ப நாடான எமது நாட்டில் இப்படி அணிந்தால் எப்படி இருக்கும்?





## விடாதே இழு

இங்குள்ளவர் ஏதோ உடற்பயிற்சி செய்வதுபோல தோற்றமளிக்கிறாரா? சற்றுக் கவனமாக உற்றுப் பார்த்தால் இவரின் பின்னால் ஒரு பெரிய விமானம் தெரியும். ஆம், தனது உடல் வலிமையைக் காட்டுவதற்காக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த டேவிற் ஒக்ஸிலி என்பவர் போயிங் - 747 எனும் 187தொன் எடையுடைய சரக்கு விமானமொன்றைத் தனியாளாக இருந்து 91 மீற்றர் தூரம் இழுத்துச் சென்றார். இச்சாதனையை இவர் 1997ஆம் ஆண்டு சிட்னி நகரத்தில் செய்து காட்டினார். உடல் பலத்தை நிரூபிக்க இப்படியும் செய்ய வேண்டுமா?



## அழகு

குளிர் நாடுகளில் வெப்பக்காலத்தின் போது மரங்களும், புற்களும் அழகழகாக அழகுகளைக் காட்டி நிற்கும். அதே போன்று இலையுதிர்க் காலங்களில் மரத்தில் இருக்கும் அனைத்து இலைகளும் உதிர்ந்து வெறும் கிளைகளை மட்டும் கொண்ட மரமாக காட்சியளிப்பதும் ஒரு அழகுதான். அந்த வகையில் இலையுதிர்காலம் ஆரம்பிக்கும்போது மரத்தில் இருக்கும் அனைத்து இலைகளும் உதிர்ந்து நிலத்தை மறைத்து வீழுந்திருக்கும் காட்சியே இது. உதிர்வதிலும் ஒரு அழகு புலப்படுகிறது அல்லவா.....